
# மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகம் அறிமுகம்



வெளியீடு:
பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம்
சாந்தம்
பிரசாந்தி வீதி
வவுனியா

# மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகம்
## அறிமுகம்

வெளியீடு:-

பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம்
சாந்தம்
பிரசாந்தி வீதி
வவுனியா.

சாயியுடன் மு.க. சிவபாதவிருதையர்

அகில இலங்கை சத்தியசாயி சேவா நிறுவனங்களின்
இணைப்புக்குழுவின் அனுமதியுடன்.

முதற்பதிப்பு :-

அச்சுப்பதிப்பு :- மதி கிறபிக்ஸ்
தொ.பே 024-21437

வெளியீடு :- நான்காவது வெளியீடு

விலை :- ரூபா 50.00

கிடைக்குமிடம் :- சகல பக்வான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்கள், பஜனை மண்டலிகள்.
2. சாயி இல்லம், தாவடி
3. பூபாலசிங்கம் புத்தகசாலை.

குறிப்பு :- ஒவ்வொரு கருத்தின் கீழும்அந்த விடயம் எந்தப் புத்தகத்தில் எந்தப் பக்கத்தில் அல்லது எந்த நாள் அருளுரையில் இருந்ததுஎன்பது குறிப்பிடப் பட்டுள்ளது. ச.சாரதி என்பது தமிழ் சனாதன சாரதி யையும் ஆ.ச.சாரதி என்பது ஆங்கில சனாதன சாரதியையும் குறிப்பிடும்.

**பின் குறிப்புகள்**
**விபரம்**

த.ச.சா-தமிழ் சனாதன சாரதி.மாதம்-பக்கம்
பி.பூ.பு.ம-பிரசாந்தியில் பூத்த புதிய மலர்கள்
பி.அ.வ-பிரசாந்தியில் அமிர்த வர்ஷினி
ஆ.ச.சா-ஆங்கில சனாதன சாரதி
பா.ஆ.ல-பாபாவின் ஆனந்த லஹரி
சா.அ-சாயி அருளமுதம்
சா.ந.ஓ.அ-சாயி நம்மிடையே ஓர் அவதாரம்
பிர.நவ-பிரசாந்தியில் நவராத்திரி

# பொருளடக்கம்

1. பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் வார்த்தைகளில் இந்த முயற்சி

2. சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளில் இந்த முயற்சி

3. சுவாமி ஆத்மகனாந்தாஜி மகாராஜ் அவர்களின் ஆசியுரை

4. முகவுரை

   (i) ஸ்ரீ செ. சிவஞானம்
   முன்னாள் மத்திய இணைப்பாளர்

   (ii) ஸ்ரீ சி. இரகுநாதபிள்ளை, தலைவர்
   பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையம் வவுனியா.

5. அறிமுகம்
   சாயியுடன் மு.க.சிவபாதவிருதயர்

6. விடயவரிசை

7. நிறைவுரை

*தொடர்பு கொள்ள*
*வேண்டிய முகவரி* :- *மு.க.சிவபாதவிருதயர்*
*மக்கள் வங்கி*
*பிராந்திய காரியாலயம்.*
*வவுனியா.*

*தொலைபேசி இல* :- *024-22972 (office)*
*024-21812 (residence)*

## ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

*கடவுளை நெருங்குவதற்கு நீங்கள் ஒவ்வொரு*
*அடி எடுத்து வைக்கும் பொழுதும்*
*கடவுள் உங்களை நோக்கி பத்து அடி வைக்கிறார்.*
*இந்த யாத்திரையில் தங்கும் மடங்கள் இல்லை.*
*நாளிலும் பொழுதிலும், அழுகையிலும் ஆனந்தத்திலும்,*
*இறப்பிலும் பிறப்பிலும், மாதாவின் மடியிலும் மரணத்தின் முடிவிலும் நடைபெறும் தொடர்ந்த யாத்திரை.*
*பாதை முடிந்ததும் இலக்கை அடைந்ததும் தன்னிலிருந்து தனக்கே பிரயாணம் செய்ததை யாத்திரீகன் உணர்கின்றான்.*
*அந்த நீண்ட ஏகாந்தமான பாதையில்*
*தன்னை வழிநடத்திச் சென்ற கடவுள் எப்பொழுதும்*
*தன்னைச் சுற்றி, தன்னுடன், தன்பக்கத்தில் தன்னுள்ளேயே இருந்ததை உணர்கின்றான்.*
*அவன் அவனுடைய உண்மைத்தன்மை*
*எப்போதும் அவனோடு தெய்வீகமாய் இருந்திருக்கிறது.*

- பாபா -

*மீண்டும் மனிதனை விழித்தெழச் செய்யும் வேலை*
*நடந்து கொண்டிருக்கிறது.*
*மனிதனுக்கு அவனே கடவுள் என்ற அறிவு நிலைக்கு அவன் விழித்தெழுப்படுகிறான்.*
*மனித உடம்பு நீ அல்ல.*
*தெய்வீகப் பொறியை தன்னுள்ளே வைத்திருக்கும்*
*தேவாலயம்- ஏனெனில்*
*ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் கடவுள் உறைகிறார்.*
*அந்த உள்ளுறையும் தெய்வீகமே நீ.*
*அதுவே உன்னுடைய உண்மைத்தன்மை.*
*மற்றவைகள் எல்லாம் பொய்த்தோற்றம்.*

- பாபா -

## பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் வார்த்தைகளில் ---

மாற்றம் என்ற நிகழ்வு எங்கும் எதிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு சிறிய விதை ஒரு பெரிய விருட்சமாகிறது. ஒரு முட்டை கோழியாக மாறுகிறது. ஆனால் மனிதன் மட்டும் தெய்வீகமாக மாறாமல் தவறி விடுகிறான். அதற்குப் பதிலாக அசுரக்குணங்களுக்கு அவன் இரையாகி விடுகிறான்.

இது ஒரு சரியான விடயமல்ல. மனித இனம் முன்னேறி மனிதன் என்ற நிலையில் இருந்து தெய்வீகத்திற்குப் போக வேண்டும். இரண்டு கால் மிருகம் என்ற நிலையில் இருந்து வளர்ந்து மனிதனாகி, மனித இனம் தெய்வீகத்திற்கு தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

(ஆ.ச.சா மார்ச் 96.ப.62)

உன்னிடம் பரிபூரணமான மாற்றம் ஏற்பட வேண்டும். மனித வாழ்க்கை மிகவும் புனிதமானது. அதைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். நான் அனைவரையும் நேசிக்கிறேன். அன்புதான் என் உண்மையான வடிவம். எனது தெய்வீகத்தின் சிறு பொறிகளான நீங்கள் அனைவரும் உங்கள் அன்பை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நான் என் அன்பை உங்களுடன் பகிர்ந்து கொள்வது போல் நீங்கள் அனைவரும் (உங்களுக்குள்ளும்) பகிர்ந்து கொள்ளுங்கள்.

அப்போது நீங்களும் தெய்வீகமாவீர்கள். நீங்கள் புனிதப் பாதையில் நடைபயிலும் போது உலகம் சந்தேகமில்லாமல் அமைதியும் வளமும் பெறும்.

அன்பின் வடிவங்களே

அஞ்ஞானத்தை விட்டு விலகுங்கள்.<br>
உங்களினுள் ஞானதீபத்தை ஏற்றுங்கள்.<br>
முடிவாக தெய்வீகத்துடன் ஐக்கியமாகுங்கள்.<br>
இதுதான் ஸ்வாமி உங்களுக்குத் தரும்<br>
இன்றைய அருட்செய்தி.

(2000 ஆகஸ்ட் -ப.15)

## சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளில்...

எனக்கு என்னிடம் எவ்வளவு நம்பிக்கை உள்ளதோ அவ்வளவு நம்பிக்கை உனக்கு உன்னிடம் இருந்தால் ஆனந்தமான ஆற்றலும் கட்டுக்கடங்காத ஞானமும், வெல்லவொண்ணாத வலிமையும் உன்னிடம் உள்ளது என்று உணர்ந்து, அதனை உசுப்பிக் கொள்வாயானால் நீயும் என்னைப்போல் ஆவாய்.அப்படி நம்புவதற்கான பலம் நமக்கு எங்கு இருக்கிறது.? மாந்தரின் பலவீனத்தையே எடுத்துக்கூறும் குருமார்களிடையே பலத்தை எடுத்துச் சொல்லி நம்பிக்கையை ஊட்டக்கூடிய ஆசாரியன் எங்கே? என்று நீ கேட்பாய். அதற்காகவே தான் நான் வந்திருக்கிறேன். பலத்தைப் போதிக்கத்தான் நான் உங்களிடையே வந்திருக்கிறேன். உங்களுக்கு வழிகாட்டுவதற்காகவே வாழ்கிறேன். என்னிடமிருந்து இந்த உண்மையை நீங்கள் கற்றுணர வேண்டும்.

பிறகு நகரம் நகரமாக, நாடு நாடாக, வீடு வீடாகச் சென்று இந்தக் கருத்தைப் பரப்பவேண்டும், கிளம்புங்கள். ஒவ்வோர் மனிதனிடமும் சென்று எழுவாய், விழிப்பாய் கனவு காணாதே, உன்னையே நீ உசுப்பிக்-கொண்டு உன்னிடம் உள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்திக் கொள்வாய் என்று முழங்குங்கள். அந்தராத்மாவின் ஆற்றலை உணர்ந்தபின் உங்களால் நீக்க முடியாத தேவையும் துன்பமும் எதுவும் கிடையாது.

(சுவாமி விவேகானந்தர், ரா.கணபதி - ப.503)

எனது இலட்சியம், உண்மையாகவே, ஒரு சில வார்த்தைகளில் சொல்லி விடலாம். அதாவது மனிதனுக்கு அவனுடைய தெயவீகத்தையும் அதை எப்படி அவன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் பிரதிபலிக்கச் செய்யலாம் என்று போதிப்பதே.

- சுவாமி விவேகானந்தர் -

# ஆசியுரை

சாயி அன்பர் திரு மு.க.சிவபாதவிருதையர் எழுதியுள்ள "மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகம்" என்னும் தொகுப்பு நூலிற்கு இந்த ஆசியுரையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"மனிதனின் நிஜ சொரூபம் ஆன்மா" என்பது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இந்த தத்துவத்தை அனுபவமாக உணர்ந்த ஞானியர் பலர், உன்னத வாழ்க்கையை வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தியுள்ளனர்.

ஆன்மாவின் தெய்வீக இயல்பு, அந்த தெய்வீகத்தை மறைக்கும் காரணிகளை, அந்தத் தடைகளைக் களைவதற்கான வழிமுறைகள் முதலியவற்றைக் கூறி, இந்தத் தெய்வீகப் பணியில் ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் பங்கு எத்தகையது என்பதையும் இந்நூலில் கூறுகிறார் ஆசிரியர்.

மேலை நாட்டு நாகரீகத்தின் பிடியில் சிக்கி அவதியுறும் மக்களுக்கு ஆத்ம தத்துவத்தை எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தும் சிறந்த நூலாக இது விளங்குகிறது.

அதுவும் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் வார்த்தைகள் வாயிலாகவே இங்கு கருத்துக்களை வழங்குவதால் இந்நூலிற்கு தனிச்சிறப்புள்ளது.

உத்திஷ்டத, ஜாக்ரத, எழுமின், விழிமின் என்னும் உபநிடத மந்திர அறைகூவல் வேதகாலம் தொட்டு மக்களுக்கு உத்வேகம் அளித்து வந்துள்ளது. அதே அறைகூவல் இந்நூலில் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் வார்த்தைகள் மூலம் வெளிப்படுவதைக் காணலாம். இதனைக் கேட்டு உத்வேகம் பெற்று சாதனையில் ஈடுபடுபவர் உண்மையில் பாக்கிய வான்களே. அவர்கள் வாழ்க்கையின் உயர்ந்த பயனைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

15.12.2000

சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ்
Ramakrishna Mission
Ceylon Branch
40, Ramakrishna Road,
Wellawatta
Colombo-06

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஆசியுரை

ஒரு ஆத்மீக அமைப்பில் இருந்தால் நாம் தற்போதைய தாழ்ந்த நிலையில் இருந்து இன்னொரு உன்னத நிலைக்கு மாற்றிக்கொள்ள விரும்புகிறோம். அதற்கு முயற்சி செய்கிறோம் என்ற கருத்து எமக்கு சிந்தனையில் எப்பொழுதும் எதைச் செய்தாலும் எழுந்து கொண்டிருக்க வேண்டும். மாற்றம் என்ற சொல் அழுக்கை அகற்றுவது, புனிதமாக்குவது, ஒழுங்கில்லாத பாதையை விட்டு நல்ல பாதைக்கு மாறுவது, இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு வருவது, அசத்தை விட்டு சத்திற்குச் சிந்தனையைத் திருப்புவது இப்படிப்பட்ட பல கருத்துக்களை உள்ளடக்கும்.

எமது வாழ்க்கைச் சிந்தனையிலும், நடைமுறையிலும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா சொல்லிக்கொண்டே வருகிறார். இந்தத்திருத்தங்கள் எவ்வகைப்பட்டது, ஏன் அவற்றைச் செய்ய வேண்டும், செய்வதால் ஏற்படும் பலாபலன்கள் யாவை என்ற அறிவை நாம் பெற்றுக்கொண்டால் தான் நாம் இறுதியில் அடையும் நல்ல மாற்றத்தை உற்சாகமாக நாம் விரும்புவோம். தெய்வீகத்தைத் தனக்குத் தேவையில்லையென்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் தெய்வீகம் தனக்குள்ளே தான் இருக்கிறது, வெளியில் கிடைக்கப் போவதில்லை என்று சொன்னால் அந்தச் செய்தியைக் கேட்பவருக்குப் பல பிரச்சினைகளை உண்டுபண்ணுவது போன்று தோன்றும். அமைதியாய் இருக்கவேண்டும், அதற்குப் பழக்கம் வேண்டும். கூர்மையாக ஒருமுனைப்புடன் சிந்திக்க வேண்டும், அதற்குப் பயிற்சி வேண்டும், சில சாதனைகளும் வேண்டும். இவற்றை எல்லாம் வெற்றிகரமாகச் செய்தால் தான் சித்தத்தில் தெளிவு ஏற்பட்டு, அதன் பயனாக அர்த்தமுள்ள மாற்றம் கைகூடும். இந்த மாற்றம்தான் (Transformation) எமது முக்கியமான இலட்சியமாக இருக்கவேண்டும் என்று சாயிபக்தா் மு.க. சிவபாதவிருதையர் இற்றைவரைக்கும் அவர் வெளியிட்ட நூல்களில், தொகுப்புக்களில், வாசகர்களுக்கு எடுத்துக்கூறிவருகிறார். அதே நோக்கத்துடன் இப்போது அவரால் வெளியிடப்படும் "மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகம்" என்ற நூலும் பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் கோட்பாடுகளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆத்மீகத்துறையில் நாட்டமுள்ளவர்களுக்குச் சிறந்த கைநூல் ஒன்று வெளியாகிறது என்று மகிழ்ச்சி அடைகிறேன். எல்லாம் பகவான் செயல்.

S. சிவஞானம்
அகில இலங்கை மத்திய
இணைப்பாளர்.

21.12.2000

## தலைவர்

*மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்தவே வந்துள்ளேன் - பாபா.*

சத்ய சாயி அமைப்புக்கள் ஏற்பட்டதன் நோக்கம் மனிதன் தெய்வீக மானவன் என்று உணர வைப்பதற்கான அறிமுகத்தைத் தந்து (செய்திகளைத் தந்து) அவனுடைய தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர்வதற்கே என்று பகவான் பாபா சொல்கிறார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எமது கல்விவட்ட நிர்வாகியும் வவுனியா மனித மேம்பாட்டுக் கல்வியின் இணைப்பாளருமான மு.க.சிவபாதவிருதயரின் அறிமுகத்தைத் தருவதில் ஒரு தெய்வீகப் பணியைச் செய்த திருப்தியைப் பெறுகிறோம்.

இதனால் அவதார நோக்கமான

மனிதன் தெய்வீகத்திலிருந்து வேறுபட்டவனல்ல.
மனிதன் தெய்வீகத்தின் திருவுருவம்.
அவன் தன்னுள் மறைந்துள்ள தெய்வீகத்தைப் பிரத்தியட்சமாக்க வேண்டும்.
அவன் அந்த தெய்வீகத்தை அனுபவிக்க வேண்டும்.
அவன் அதாக வேண்டும்.
இதுதான் சாதனை ஆக வேண்டும்.

*பகவான் எங்களை வழி நடத்துகிறார்.*
*சாயிராம்*

சாந்தம்
பிரசாந்தி வீதி
வவுனியா.
2001.02.01

சாயிசேவையிலுள்ள
சி.இரகுநாதபிள்ளை
தலைவர்
பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்
வவுனியா.

> *அன்பு நிறைந்த இடத்தில் ஆண்டவன் வெளிப்படுவான்.*
>
> *- பாபா*

# மனிதனுள் உள்ளுறையும் தெய்வீகம்

அறிமுகம்

(Information for transformation)

**தனிமனித தன்மை மாற்றத்திற்கான செய்தி.**

விடயவரிசை


01. தெய்வத்துவத்தை உணர வேண்டும் எனப் போதியுங்கள்

02. தெய்வீகத்தின் பெயர்கள்

03. சத்ய சாயி நிறுவனங்களின் நோக்கம்

04. அவதார நோக்கம்

05. ஆன்மீகம்

06. தெய்வீகத்திற்கான அழைப்பு

07. தெய்வீகத்திற்கான யாத்திரை

08. ஜீவன் பரம்பொருளன்றி வேறில்லை

09. தெய்வீகம்

10. தெய்வீகத்திற்கு இதயம் உண்டு அந்த இதயமே ஆத்மா

11. சத்சித் ஆனந்தம்

12 மதங்கள்

13. திருவுருவங்கள் உணர்த்துவது யாது?

14. நான்

15. மனிதன்

16. மனித மேம்பாடு

17. பண்டிகை தினங்கள்

18. ஆத்மீக சாதனைகள்

19 உள்ளுறை தெய்வீகத்தை நினைக்காதது பாவம்
உள்ளுறை தெய்வீகத்தை நினைப்பது புண்ணியம்

20. இறைவன் வருந்துகிறான்

21. அவதாரம் நேரிடையாகச் சொல்லலாமே?.


சாயியுடன்

மு.க.சிவபாதவிருதையர்.

ஓம் ஸ்ரீசாயிராம்

## அறிமுகம்

**தெய்வீகம்** **சாயியுடன் மு.க.சிவபாதவிருதயர்**

இந்தப் பிரபஞ்சம் பிரம்மமாக இருந்தது. அந்த பிரம்மம் இருக்கின்றது என்று சொல்லவும் ஒன்று இல்லாமல் இருந்தது. அந்த உண்மை ஒன்று தான். அது தான் சத்தியம்.

"ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி"

உண்மை ஒன்று தான் அதை அறிந்தவர்கள் தங்களால் முடிந்தபடி அதை விளக்கியுள்ளார்கள். இன்னும் அதைப் பற்றிச்சரியாக ஒருவரும் சொல்லவில்லை. ஏனெனில் ப்ரம்மம் இன்னும் எச்சில் படவில்லை என்கிறார் பகவான் ராமகிருஷ்ணர். இந்தப் பிரம்மம் தன்னுடைய அன்பை ஆனந்தத்தை தெய்வீகத்தை தான் அனுபவிக்க விரும்பியது. அதை எப்படி அனுபவிப்பது? எப்படி ஆனந்திப்பது?

ப்ரம்மம் சங்கற்பித்துக் கொண்டது. தன்னை தன்னில் இருந்து பிரித்து தன்னுடைய அன்பை அனுபவிக்கலாம் என்று சங்கற்பித்தது, மாயை பிரம்மத்தை மூடியது என்று நாங்கள் சொல்வதைத் தவிர்த்துக் கொள்வோம். ஏனெனில் இது சாயியுகம். ஒளியிருக்கிற பொழுது இருள் இருக்க முடியாது. ஞானம் இருக்கிற பொழுது அஞ்ஞானம் இருக்க முடியாது. தெய்வ சங்கல்பம் இல்லாமல் இங்கு எதுவும் நடக்கமுடியாது.

### *ஏகோஹம் பஹுஸ்யாம்*

ஒன்றாக இருந்த நான் என்னைப் பலவாக்கிக் கொண்டேன் "ஏகன் அவன், அநேகன் அவன், ஏக்ப்ரபுகே அநேக்நாம்" எல்லா உருவங்களும் அவனுடையதே. எல்லாப்பெயர்களும் அவனுடையதே. இதனால்தான் சனாதன தர்மத்தில் எல்லாம் கடவுள் அந்தஸ்த்தைப் பெறுகின்றன. எல்லாம் இங்கு பலவாகத் தெரிகிறது. அவற்றில் உள்ள ஒற்றுமைதான் தூய்மையைத் தரும். அதுதான் தெய்வீகத்தைத் தரும் விறகில் தீயாக உள்ளவன், பாலில் நெய்யாக உள்ளவன், எள்ளில் எண்ணையாக உள்ளவன், மலரில் மணமாக உள்ளவன். எங்கும் உள்ளவன், எதிலும் உள்ளவன். எல்லாமாகவும் ஆகியுள்ளவன்.

பிரம்மம் என்ற சமுத்திரம் சலனம் இல்லாமல் இருந்தது.

அதனுடைய சங்கற்பத்தால் அலைகள் நுரைகள் உண்டாகின. அலைகள், நுரைகள் வேறு வேறு அல்ல. அவைகளும் அந்தச் சமுத்திரம் தான்.

ஒருதுளி அற்பமானதாக இருக்கலாம். அது பெருமையுள்ள சமுத்திரத்துடன் சேரும் போது எல்லையில்லாத சக்தியாகிறது. மானிடத்தின் அற்பத் தன்மை தெய்வீகத்தின் உன்னத நிலையுடன் கலந்து தன்னை உயர்த்திக் கொள்கிறது.

பகவான் எங்களை மூன்று கலந்த ஒன்று என்கிறார் (Three in One)

மனிதன்
- உடல் மிருகம், தேகாத்மா துவைதம் - கர்மம்
  Materialisation பூதாகாசம் விழிப்பு வியவகாரிகம்
  அசத் - சத் -பூர்
- மனம் அரக்கன், ஜீவாத்மா விசிட்டாத் வைதம் கனவு பிரதிபாஷிகம்
  Vibration சித்தாகாசம் பக்தி
  தமஸ் - ஜோதி
- ஆத்மா - தேவன் - பரமாத்மா - அத்வைதம் ஞானம் பரமார்த்திகம்
  Radiation சிதாகாசம் ஸ்வஹ ஆழ்ந்த உறக்கம்
  மீருத்யு - அம்ருதம்

உடலால் நல்லவற்றைச் செய்து மனத்தால் நல்லவற்றை நினைத்து ஆத்மானந்தத்தை அடைதல் வேண்டும்.

| | |
|---|---|
| m-maya | மாயையை நீக்கி |
| a-atma | ஆத்மாவை உணர்ந்து |
| n-nirvana | விடுதலை பெறுகிறான் |

எல்லாவற்றிலும் தெய்வீகம் உள்ளுறைந்தாலும், அதை அறியும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உள்ளது.

"ஜந்தூனாம் நர ஜன்ம துர்லபம்" பிறவிகளிலே மனிதப் பிறவி மிக அரிது. ஏனெனில், சிவன் அவன் சிந்தனையுள் நிற்கின்றான் என்று அறிந்து அவனருளாலே அவன் தாள் வணங்க மனிதனால் தான் முடியும். ஏனெனில் அவனுக்குத்தான் மனமுள்ளது.

*மன ஏவ மனுஷ்யாணாம் காரணம்*
*பந்த மோசஷயோ.*

மனந்தான் தளைக்கும் மோட்சத்துக்கும் காரணம்.
எதைப் பெற்றுக்கொண்டாயானால் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள முடியுமோ அதைப் பெற்றுக்கொள்.
எங்கிருந்து வந்தாய்?
தெய்வீகத்திலிருந்து
எங்கு சென்றுகொண்டிருக்கிறாய்?
தெய்வீகத்தை நோக்கி
எவ்வளவு காலம் உன்னால் இங்கிருக்க முடியும்?
தெய்வீகத்துடன் இரண்டறக் கலக்கும் வரை.

இப்படி சுவாமி சொல்கிறார். சமுத்திரத்தில் இருந்து ஆவியாக வெளிப்பட்ட நீர்த்துளி மேகமாகி மழையாகி மீண்டும் கீழே வந்து நேரடியாக சமுத்திரத்தில் கலக்கலாம், அல்லது சதுப்பு நிலத்தில் விழலாம், பாறையில் விழலாம், ஆனால் எப்படியும் அதன் யாத்திரை சமுத்திரத்தை நோக்கியே இருக்கும். இது அவதாரகாலம், ஒவ்வொருவரின் உள்ளுறையும் தெய்வீகத்தை மிளிரச் செய்யவே அவதாரம் வந்துள்ளது. வாழ்வு என்று இருக்குமட்டும் உடல் என்று ஒன்று உண்டு, மனம் என்று ஒன்று உண்டு. ஆத்மாவினை நோக்கிய எமது யாத்திரை உடலோடு உள்ள துவைதத்தைத் தாண்டி மனத்தோடு உள்ள விசிஷ்டாத்வைதத்தை தாண்டி ஆத்மாவான அத்வைதத்துக்குப் போக வேண்டும். நிஜத்தில் இருந்து உள்ளதை அறிந்து சத்தியத்திற்குப் போகவேண்டும்.

நிஜம்- சூரியன் கிழக்கே காலையில் உதிக்கிறது
உள்ளது - சூரியன் அசைவதில்லை பூமி தான் சுழல்கிறது

சத்யம் சூரியனும் அழியக்கூடியது.அப்பொழுது அதையும் கடந்த உண்மை ஒன்று உண்டு. அதுதான் தெய்வீகம். எமது உண்மைத் தன்மை.

என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகிறான் எங்கள் குருநாதன்
சத்தியத்தைகாண வைத்தான் எங்கள் குருநாதன்
தாகத்தை ஆக்கி விட்டான் எங்கள் குருநாதன்

அது பூரணம் இதுவும் பூரணம் எப்படி? நாம ரூபத்தை கடந்தால் இதுவும் பூரணம்.

அசத் சத்தாக வேண்டும், தமஸ் என்ற அறியாமை ஞானமாக வேண்டும்.

சாயிபாபா என்ற வணக்கத்திற்கு உரியவர் சூக்குமமான தெய்வமாக எம்மில் இரண்டறக்கலக்க வேண்டும். எமது செய்கைகள், சொற்கள் எண்ணங்கள் புனிதமாக வேண்டும்.

way to immortality is removal of immorality

தா்மமான வாழ்வுதான் அமரத்துவத்தின் பாதை.
சா்வ கா்ம பகவத் ப்ரீதியாா்த்தம்
எல்லா செயல்களும் இறைவனுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாக, மகிமை தருவதாக இருக்கட்டும்.

எம்மில் தெய்வீகம் மலா்வதைத்தான் சுவாமி எதிா்பாா்க்கிறாா். உடலால், மனத்தால் தூய்மையாகிய அளவுக்கு ஆத்ம பிரகாசம், தெய்வீகத்தின் ஒளி எமக்கு உரித்தாகும். உடல் மனம் இவைகளைச் சுற்றிய அழுக்குகள் பாசியாக திரையாக தெய்வீகத்திலிருந்து எம்மை வேறுபடுத்துகின்றது. சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுஜ்யம் என்றபடி தெய்வீகத்தின் உரித்தாளிகளாவோம்.

சிவத்தினை வளா்க்கும் பாக்கியம் எமக்கு
சித்தித்த தினிமேலே
தெய்வம் வேறே உண்டென எண்ணும்
சிந்தையுமிறந்ததுவே
அவத்தினில் செல்லும் மனத்தினை வெல்வோம்
ஐம்பொறி வழிச்செல்லேம்
அழியா மெய்பொருள் அகிய ஆன்மா
அறிவோம் நாம் நன்றாய்

- யோகா் சுவாமிகள்

## 01. தெய்வத்துவத்தை உணரவேண்டும் எனப் போதியுங்கள்

01. தங்களுக்குள் உள்ள தெய்வத்துவத்தை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்று நீங்கள் அனைவருக்கும் போதித்தல் அவசியம்
(த.ச.சா ஜன 92-ப 10)

02. உங்களுடைய முயற்சியின்மையினால் தான் உங்களுக்குள் உள்ள தெய்வத்துவத்தை நீங்கள் உணரமுடியவில்லை. நீங்கள் பிறருக்கும் அவர்களுடைய தெய்வத்துவத்தை உணர்த்தும் போது அவர்களும் தெளிவு பெறுவர் (நீங்களும் தெளிவு பெறுவீர்கள்) தம்மிடையே இத்தகைய உயர்வு, மதீப்பீடு உள்ளது என்பதைக் கேட்க அவர்களுக்கும் ஆர்வம் பெருகும்.
(த.ச.சா. ஜன 92-ப-14)

03. தெய்வத்துவத்தை பிரேமை உணர்வுடன் போதித்தல் வேண்டும்.
(த.ச.சா ஜ 92-ப-14)

04. மனிதனின் முதற்கடமை தெய்வத்துவத்தை உணர்தலே ஒவ்வொரு நொடியும் தெய்வத்துவத்தைப் பிரதிபலிப்பதாகவே கருதுதல் வேண்டும்.
(த.ச.சா.ஜன 92-ப-18)

05. ஆன்மாவின் சிறப்பையும் அதை உணரும் வழியையும் போதிப்பதுதான் உண்மையான கல்வியாகும்.
(த.ச.சா 92-ப-1)

06. ஸோஹம் என்றால் நான் இறைவன் என்று பொருள் ஆகவே இந்தப் புனித மந்திரத்தைக் கூறிக்கொண்டு இலட்சிய வாழ்க்கை நடத்தி இவ்வுலகத்தை பிரசாந்தி நிலையமாக மாற்றுங்கள்
(பி.பூ.பு.ம 1998-ப95)

07. இந்த அமரத்துவம் வாய்ந்த தத்துவத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். உபநிஷதங்கள் அமரத்துவத்தின் புத்திரர்களே!

என்று உங்களை அழைக்கின்றன.
"ச்ருன் வந்து விச்வே அம்ருதஸ்ய புத்ரா " அமரத்தன்மையின் குழந்தைகளே! கேளுங்கள் உங்கள் பேருக்குத் தகுந்த வாழ்க் கையை நடத்துங்கள்.

(பி.பூ.பு.ம -1998-ப-96)

08. ஒருமைத் தன்மையை எகாத்ம பாவத்தை உலகெங்கும் பரவச் செய்யுங்கள் வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் பற்றிய எண்ணமே வேண்டாம்.

(பி அ வ (5) ப 136)

09. உள்ளிருக்கும் தெய்வத்துவத்தை வெளிப்படுத்துபவனே உண்மையில் மனிதன் என அழைக்கப்படத் தகுந்தவன். ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளுறைகிறது தெய்வத்துவம். அதனால் ஒவ் வொரு மனிதனும் தெய்வீகத்தைப் பரவச் செய்ய முயற்சி மேற் கொள்ள வேண்டும். தெய்வத்தின் செய்தியைப் பரவச்செய்து நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் உண்டாக்க வேண்டியது ஒவ்வொருமனிதனின் கடமையாகும். இதைத் தவிர வேறு எதுவும் அமைதியைத் தராது

(த.ச.சா 96 ப 16)

10. ஆன்மிகத்தைப் பற்றிய பிரச்சாரங்களில் இறங்கவேண்டும். எல்லோரிடமும் இருப்பது ஒன்றே என்ற ஏகாத்ம பாவத்தை நிலையாக மனதில் கொள்ள வேண்டும். இந்த ஒருமைப்பாட்டுத் தத்துவம் மட்டும் நிலைபெறுமானால் குழப்பங்களுக்கு இடமே இருக்காது.

(த.ச.சா.ஏப்ரல் 96-16)

11. உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் ஒருகடவுள், ஒரு கொள்கை, ஒரு இலக்கு என்று இருங்கள். உங்கள் இலக்கை (உள்ளுறை தெய்வீகத்தை) அடையும் வரை தீர்மானத்தை விடாதீர்கள் இந்த தெய்வீக இலட்சியத்தை மனதில் கொண்டு சமுதாயத்திற்கு தொண்டு செய்யுங்கள்.

(த.ச.சா டிசம்பர் 94-ப-18)

12. மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வீகத்தை குறைந்த பட்சம் பத்துபேருடனாவது பகிர்ந்து கொள்ளவேண்டும்

(த.ச.சா மார்ச் 96-ப 9)

13. எப்போது இத் தெய்வீகத்தை அதிகமாக வளர்க்கிறானோ அப்போது தெய்வ சங்கல்பத்தைக் கூட மாற்ற இயலும். எனெனில் மனிதன் தெய்வத்தின் அம்சம் பிரகிருதியின் அம்சமல்ல. அதனால் நல்ல எண்ணங்களையும் செயல்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்

(த.ச.சா ஏப்ரல் 96 ப-8)

14. உன்னுடைய முழுவாழ்நாளும் உன்முன்விரிந்து கிடக்கிறது. முதலில் இந்த வாழ்க்கையின் பலன், இலட்சியம் என்ன என்று ஆராய்ந்து அறிந்து கொள். இறைவனே தர்ம ரட்சணத்திற்காக இங்கு இருக்கும் பொழுது நீயும் அதே பணியில் ஈடுபட்டால் அது இறைவனுக்கான பூஜையாகும். அப்பொழுது நீ அவருக்கு நெருக்கமானவனாகவும் பிரியமானவனாகவும் ஆகிறாய். ஏனெனில் இதன் மூலம் நீ இறைவனுக்கும் பக்தர்களுக்கும் உனக்கும் சேவை செய்கிறாய்.

(பகவானுடன் உரையாடல் ஹிஸ்லாப் விடயம் 10-ப76)

15. சத்ய சாயியின் தூதுவர்கள் நாடுமுழுவதும் தெய்வச் செய்தியைப் பரப்புவதில் முன்நிற்க வேண்டும் என்பது என் கருத்து.

(த.ச.சா டிசம்பர் 2000 p23)

16. கொஞ்சம் கொஞ்சமாக புனிதமான இவற்றை மனதில் கொண்டு வீதி தோறும் நகரம் தோறும் வீடு தோறும் இந்த ஆன்மீக தத்துவத்தைப் பரவச்செய்யுங்கள்

(த.ச.சா.பெப் 1998-ப-14)

18. தெய்வதத்துவத்தை கற்பியுங்கள் தெய்வீக உணர்ச்சிகளை கல்நெஞ்சக்காரர்களிடம் கூடப் புகுத்துங்கள் ஒவ்வொரு இதயத்திலும் இறைவனது புனித நாமம் என்ற விதையை விதையுங்கள் அப்போது இந்த உலகம் நிஜமாகவே சுவர்க்கமாக மாறும். உங்கள் மகிழ்ச்சியே சுவர்க்கம் உங்கள் துன்பமே நரகம் ஆகவே மகிழ்ச்சியுடன் இருந்து பிறருக்கு சேவை செய்யுங்கள்.

(பி.பூ.பு.ம 1998-ப.95)

19. இந்தப் புனித மேன்மையை மீண்டும் உருவாக்கி புத்துயிர் அளிக்க விரதம் மேற்கொள்ளுங்கள். இந்த மேன்மையான ஆதர்சங்களை ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு வீட்டிலும் எடுத்துச் சொல்லிப் பரவச்செய்யுங்கள் உங்கள் ஒவ் வொரு செயலிலும் திரிகரணங்களின் ஒற்றுமை இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

(த.ச.சா.ஜனவரி 99-ப13)

20. மனிதர்கள் வெளிப்புறப்பாதையில் நடக்கிறார்கள். அவர்கள் தெய்வத்துவத்தை அறியவேண்டியது மிகவும் அவசியம்.

(த.ச.சா.ஜன 99-ப13)

21. மனிதனாகப் பிறவியெடுத்த பின் உள்ளிருக்கும் தெய்வீகத்தை அறிந்துணர வேண்டும். ஆண்டவனின் தூதுவனாகஇருப்பதால் ஒவ்வொரு மனிதனும் சத்யம் பிரேமை சாந்தி இவற்றைப் பயிற்சி செய்து ஆனந்தத்தை அனுபவித்து அதனைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

(த.ச.சா பெப் 99-ப 18)

22. பகவத்கீதை இதைத்தான் ஏகாத்மாஸ்ர்வபூதாந்தராத்மா எனக் குறிப்பிடுகிறது. எல்லா பல்புகளினுள்ளும் இருப்பது ஒரே மின்சாரம் ஒவ்வொரு பல்ப்புக்கும் ஒவ்வொரு நிறமிருக்கலாம். வேறு வேறு வலு (Wattage) இருக்கலாம். ஆனால் மின்சாரம் ஒன்றுதான் தெய்வமே ஒவ்வொரு வடிவத்திலும் காணப்படுகின்றார். ஒவ்வொருவரினுள்ளும் உறையும் விழிப்புணர்வு (Awareness) அவரே. இந்தப் பிரேமை தத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த அன்புத்தத்துவத்தை அடுத்தவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். அந்த அன்புத்தத்துவத்தை பிரச்சாரம் மூலம் பரவச்செய்ய வேண்டும். அதுவே ஆன்மீகப் பிரசாரம்.

(த.ச.சா பெப் 94-ப 17)

*நீங்கள் கடவுளிலிருந்து வேறுபட்டவர்கள் என்ற குறுகிய மனப்பான்மையிலிருந்து விடுபட வேண்டும். -- பாபா*

## 2 தெய்வீகத்தின் பெயர்கள்

01. ஆத்மா, பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் (........) என்ற பெயர்கள் எல்லாம் வேறு வேறு என்று நினைத்து வழி தவறி விட வேண்டாம். இவையனைத்தும் ஒரே தெய்வீகத்தின் பெயர்களே.

(த.ச.சா டிசம்பர் 99-ப 5)

02. உன்னால் எங்கும் விரவிப் பரவி நிற்கும் தெய்வீகத்தைத்தான் இனம் கண்டு கொள்ள முடியவில்லை. உனக்குப்பிடித்த பெயரில் தெய்வத்தினைக் குறிப்பிட்டு அதற்கான ஆன்மீக சாதனைகளைச் செய்து அதனுள் அடக்கப் பார்க்கிறாய். ஆன்மீக சாதனங்கள் தெய்வீகம் எல்லா இடத்தும் நிறைந்திருக்கிறது என்பதை உணர்த்தும் வகையில் அமைய வேண்டும்.

(த.ச.சா பெப் 99-ப 5)

03. பக்தர்களுக்கு இன்று சில வடிவங்கள் தெய்வீகமாக மனதில் பதிந்து போயிருக்கின்றன. அதனால் அந்த வடிவத்தின் மேல் வைத்த பக்தியை ஒரு சடங்காக நினைத்துச் செய்கிறார்கள். உனது தானம் வழிபாடு இவையெல்லாம் பற்றி இறைவனுக்கு எந்த விதமான ஈடுபாடும் இல்லை. உங்களது தானம் செல்வம் இவற்றை யெல்லாம் வருமான வரி அலுவலகத்திற்கு காட்டுங்கள். இறைவன் விரும்புவதெல்லாம் உங்கள் அன்பு ஒன்று தான்

(த.ச.சா.ஒக்டோபர் 99-ப22)

04. உடலின் உள்ளிருக்கும் ஆத்மா நிரந்தரமானது, அழியாதது, அந்த ஆத்மாவே தெய்வத்துவம். அந்த தெய்வத்துவத்தை உணரும் நிலைக்கு நீ உயரமுற்பட வேண்டும்.அது அளிக்கும் ஆனந்தம் இப்படிப்பட்டது அப்படிப்பட்டது என்று யாரலும் வர்ணிக்கமுடியாதது மனம் வாக்கு இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது அந்த ஆனந்தம். உலகியல் மகிழ்ச்சிகள் எல்லாம் ஒரு அளவிற்கு உட்பட்டவை. உலகியல் உறவுகளும் அப்படியே ஆனால் எல்லாவற்றையும் கடந்த ஆனந்தம் தான் தெய்வானந்தம் யோகானந்தம் அதுவேதான் அத்வைதானந்தம்.

(த.ச.சா பெப் 95-ப 15)

05. இது மைக்; இதை சுட்டிக்காட்டி மைக் என்று உணர்ந்த பிறகு மீண்டும் விரலை நீட்டி "இது தான் மைக்" என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை. அதைப்போலவே இது மலர், இது காமிரா என்றெல்லாம் உணர்த்திய பிறகு நீ மீண்டும் மீண்டும் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அதே போல் இதுதான் தெய்வம் என்று விக்கிரகத்தைக் காட்டி உணர்த்திய பிறகு அதன் மூலத்தை, தெய்வத்தை அறிந்த பிறகு உருவம் என்பது தேவையில்லாமல் போகிறது.

"அதோ சந்திரன்" என்று காட்டுகிறோம். ஒரு மரக்கிளைக்கு மேலே இருக்கிறது சந்திரன் எனச் சுட்டிக்காட்டுகிறோம். சந்திரன் இருப்பதை உணர்ந்த பிறகு அப்படிக்குறிப்பால் உணர்த்த வேண்டிய அவசியமே இல்லை. அதேபோல் எல்லாமே தெய்வ வடிவம் என்ற ஞானத் தெளிவு ஏற்பட்டவுடன் இவ்வாறு வடிவங்கள் தேவையில்லை.

(த.ச.சா ஏப் 95-ப 2)

06. தெய்வத்துவம் என்ன என்ற விஷயத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரிடமும் நிறைந்திருக்கும் சைதன்ய ஸ்வபாவமே தெய்வத்துவம் (Conscience) இந்த (Conscience) பற்றிய உணர்வு மனிதனுக்கு வேண்டும்.

(த.ச.சா ஒக்டோபர் 96-ப 8)

07. அதனை மனச்சாட்சி எனலாம். அனைத்தையும் அறிந்தவர் எனலாம். ஞானம் அடைந்தவர் என்றும் கூறலாம். ஈஸ்வரன் எனவும் அழைக்கலாம். விஷ்ணு, பிரமன் ஆதிசக்தி மிக உயர்ந்த ஆனந்தம் என்றெல்லாம் அழைக்கலாம். இதெல்லாம் ஆத்மா ஒன்றையே குறிக்கும்.

பல பெயர்கள் ஆனால் ஆத்மாவுக்கு (தெய்வீகத்திற்கு) இன்னும் பெயரிடப்படவில்லை.

ஹரி மயமு விஸ்வ மந்தையு

இந்தப் பிரபஞ்சம் முழுதும் ஹரியே நிறைந்திருக்கிறார். தீர விசாரிக்கும் பொழுது எந்தப் பொருளோ அன்றி அணுவோ தெய்வீகம் நிரம்பியதாகவே காணப்படும் என்பதை உணரலாம்.

(த.ச.சா மாச் 98-ப 3)

08. இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் நிரப்பும் தெய்வீகம் மனிதனில் "ஹ்ருத்ய" என்றிருக்கிறது. வேதங்கள் இந்த (ஆத்மீக) ஹ்ருதயத்தை ஆத்மா என்கின்றன ஆத்மாவிற்கு இன்னொரு பெயர் ஈஸ்வரன்.

(ஆ.ச.சா ஆகஸ்ட் 2000- ப 269)

09. ஆத்மா, தெய்வத்துவம் (தெய்வீகம்) ஓம் என்பவை ஆதி புருசனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்கள் உண்மையில் முதற் பெயர் நான் அகம் என்பதாகும்.

(22.05.93 அருளுரை)

10. அகம் ப்ரம்மாஸ்மி என்பது வேதப் பிரகடனம். இங்கே அஹம் என்பது நான். நான் பிரமத்தைக் குறிக்கிறது. ஆகவே பிரமத்தின் முதற்பெயர் நான்.

1. இரண்டாவது பெயர் ஆத்மா. மூன்றாவது பெயர் சுயம். (self) நான்காவது பிரம்மா. ஐந்தாவது கடவுள். இந்த ஐந்தும் தெய்வீகத்தின் மறு பெயர்கள். இந்தப் பெயர்களின் உண்மையான அர்த்தத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

(ஆ.ச.சா ஜுலை 2000-ப 204)

11. தெய்வீகத்தைக் குறிப்பிடும் அத்தனை பெயர்களிலும் உயர்ந்தது மிக முக்கியமானது சத்சித் ஆனந்தம் என்பதே.

(த.ச.ச நவம்பர் 96-ப 4)

*தெய்வத்துவத்தைப் பற்றி எப்போது சிந்திக்கத் தொடங்குகிறீர்களோ அப்போதே தர்மம் அங்கு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.*

*த.ச.சா ஜுன் 2000 ப.11*

## 3.சத்ய சாயி நிறுவனங்கள்

01. இந்த நிறுவனத்தில் மனித குண இயல்புகளை வளர்ப்பதும் மனிதனுள் மறைந்திருக்கும் மிருக குண இயல்புகளை வெளியேற்று வதும் மட்டுமன்றி அவனிடம் உறையும் தெய்வீகத்தை மலரச் செய்வதும் தான் நோக்கம்.

(பா ஆ.ல.ப.35 அருளுரை 18.11.95)

02. சத்ய சாயி நிறுவனங்கள் அன்புத்தத்துவத்தைப் பரப்புவதற்கும் மனிதனுள் உள்ளுறையும் தெய்வதத்துவத்தை வெளிக்கொணர் வதற்கும் நிறுவப்பட்டனவேயன்றி அதிகமான அளவில் பக்தர் களையும் பின்பற்றுபவர்களையும் உருவாக்கிப் பெருக்குவதற்காக ஏற்படுத்தப்படவில்லை. தன்னை உணர்தலே இலட்சியம்.

(பா. ஆல ப 43-1995)

03. நான் எண்ணிக்கையைப் பற்றி எண்ணுவதில்லை (quality not quantity) இந்த நிறுவனத்தின் தெய்வீகத்தன்மையை மட்டுமே எண்ணுகிறேன்.

(பா ஆ ல ப 49)

04. இந்த நிறுவனத்தின் அங்கத்தவராக இருப்பவரிடம் என்ன குணங் களை எதிர்பார்க்கலாம்? அவர்களின்

i. இதயம் சந்திரனைப் போல் குளுமையாக இருக்க வேண்டும்.

ii. மனம் வெண்ணெயைப் போன்று மிருதுவாக இருக்க வேண்டும்.

iii. அவனுடைய பேச்சு அம்ருதத்தைப் போன்று இனிமையாக இருத்தல் அவசியம்.

இது தான் ஒற்றுமை எங்கே இந்த மூன்றும் இவ்வாறு ஒருங்கி ணைந்து இருக்கிறதோ அங்கே தெய்வத்துவத்தின் வெளிப்பாடு தெரிகிறது.

(பா.ஆ.ல.ப 87 20.11.95)

05. இந்த நிறுவனம் மனிதனுக்கு தன் ஆத்மாவை (தெய்வீகத் தன் மையை) உணர்ந்து கொள்ள உதவும் நோக்கத்தோடு அமைக்கப் பட்டிருக்கிறது. நீ இந்த உடலின் அங்கமல்ல இயற்கையின் அங்கமும் அல்ல. நீ ஆத்மதத்துவம். மமைவாம்ஸோ ஜீவலோகே ஜீவபூத ஸநாதன. நீ தெய்வீகத்தின் ஒரு பொறி இந்த உண்மையை புரிந்து கொள்வதற்காகத்தான் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது.

(பா.ஆ.ல.ப 105 21.11.95)

06. எப்போது மாற்றத்தை எதிர்பார்க்கமுடியும்?
செய்திகள் தெரிந்தால்தான் (தன்மைமாற்றம்) ஏற்பட முடியும். ஆத்ம தத்துவத்தை (தெய்வீகத்தை)ப் புரிந்து கொள்ள உனக்கு முதலில் சில ஆதாரமான செய்திகள் தேவை இந்த நிறுவனம் அந்த செய்திகளை எடுத்துச் சொல்வதற்காகவும் பிறருடன் நீ அதைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் துவக்கப்பட்டது.

(பா.ஆ.ல.ப 105 அருளுரை 21.11.95)

07. நீங்கள் பார்ப்பது கேட்பது உணர்வது (முகர்வது, உண்பது) எல்லாவற்றையுமே தெய்வீகம் ஊடுருவிப் பரவியுள்ளது.இப்படி எல்லாவற்றையுமே ஊடுருவிப் பரவி வியாபித்துள்ள தெய்வீகத்தோடு இடையறாத தொடர்ந்த துணையோடு இருந்து கொண்டு ஏன் பயந்து கவலைப்படுகிறீர்கள்? நான் இங்கே இருக்கும் போது உங்களுக்கு ஏன் பயம்? கடவுள் உங்களில் உங்களோடு, உங்களுக்குமேல், உங்களுக்குகீழ், உங்களைச் சுற்றிவர என்று இருக்கும் போது எதற்கும் பயப்படாதீர்கள். அவர் உங்களை நிழல் போல் தொடர்ந்து கொண்டிருக்கிறார். அவரை ஒரு பொழுதும் மறந்து விடாதீர்கள்.

(ஆ.ச.சா மே 2001 ப.150)

# 4. அவதார நோக்கம்

01. சாயி கட்வுள் எங்குமிருக்கிறார் என்பதை எடுத்துக்கூற அவதாரம் எடுத்திருக்கிறார்.வெளிச்சொல்லமட்டுமல்ல, தெய்வீக அன்பை எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளவும் அவதாரம் எடுத்துள்ளார். இதயம் எந்தளவிற்கு சாயி கூறுவதை ஏற்றுக்கொள்ள இயலும்? இதயத்தை முடிந்த அளவு விசாலமாக்கிக்கொள்ளுங்கள்.

(பி. அ பாகம் 02 பக்கம் 60 )

02. அன்பின் மிகுதியால் நீங்கள் நலமடைய வேண்டும். முன்னேற்ற மடைய வேண்டும் என்று நான் உங்களுக்கு அளிக்கும் அறிவுரை களைச் சிந்தித்துப்பாருங்கள். செய்த சிந்தித்த தவறுகளுக்குக் களுவாய் தேடுவதன் மூலமாக உள்ளத்தைத் தூய்மைப்படுத்துங் கள். அசைக்கமுடியாத உறுதியோடு உங்கள் வாழ்க்கையினை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். தீமை நிறைந்த பழக்கவழக்கங் கள் சொற்கள் எண்ணங்கள் ஆகியவற்றைக் களைந்தெறியுங்கள். இறைவனின் திட்டங்களுக்கு ஏற்றாற் போல வாழ்க்கையை நடத்துங்கள். அதன் மூலமாக உங்கள் ஒவ்வொருவர்களுள்ளும் தெய்வீகம் மலரும்.

(சத்யம் சிவம் சுந்தரம் பகுதி4 ப113)

03. கடவுளுக்கென்று தனியான வடிவமொன்றில்லை (மனக்) குருடர்க ளுக்கும், அறிவிலிகளுக்கும் இந்த உண்மையை உணர்த்தவே கடவுள் அவதாரம் எடுக்கிறார். அவதாரத்திற்குத் தனி வடிவம் இல்லை. ஏன்? அனைத்து ஜீவராசிகளும் தத்தம் கடமைகளை நிறைவேற்றுகின்றன. விலங்குகள், பறவைகள், தாவரங்கள், பூச்சிகள் போன்ற அனைத்தும் தத்தம் கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றுகின்றன. மனிதன் மட்டும் தனது கடமைகளை மறக்கிறான். விலங்கு கூட குறிப்பிட்ட காலம், காரணம் இவற்றை அனுசரிக்கிறது. மனிதன் மட்டும் காலநியமமோ காரணமோ எதுவும் பின்பற்றுவதில்லை. ஆகவே கடவுள் மனித சமுதாயத்தைச் சீர்படுத்த மனித வடிவில் வருகிறார்.

(பி.அ.வ. பாகம் 5 ப13)

04. இறைவன் இவ்வுலகை உத்தாரணம் செய்ய (உயர்த்த, தூக்கிவிட) வந்திருக்கிறாரே தவிர தனக்காக வரவில்லை. அவருக்கு என்ன வேண்டும்? எதுவும்தேவையில்லை. எல்லாம் அவரது கரங்களி லேயே தான் இருக்கின்றன நல்லதையே போதித்து நீங்கள் அனை வரும் தெய்வத்திடமிருந்து வந்தவர்கள்தான் நீங்கள் தெய்வத்திடமே ஐக்கியமாகக் கூடியவர்கள். இது பிரேமை தத்துவத்தின் மூலமே சாதிக்க முடியும் அன்பின் மூலம் எதனையும் சாதிக்கலாம். மலையும் கூட பனிபோல் உருகும் என்று அறிவுறுத்துகிறார்.

(த.ச சாரதி மே 98 ப 26)

05. இப் புவியின் மாந்தர்கள் அன்பென்னும் அமிர்தத்தைப் பருகவும் தெய்வீகத்தின் இனிமையை உணர்ந்து அறியவும் தான் அவதாரம் நிகழ்கின்றது. இந்த இனிய அமுதத்தைச் சுவைத்தவர் தம்மை மறந்து இறைவனுடன் ஐக்கியப் படுத்திக்கொள்ள முயன்று அதன் பின்னர் இடையறாத ஆனந்தநிலையை அனுபவிக்கின்றனர்.

(த.ச.சாரதி செப் 98-ப6)

06. எல்லோரிடமும் இருக்கும் தெய்வதத்துவம் இங்கும் (சாயியாக) அதே போல் இருக்கிறது. இவ்வுடலில் உறையும் ஆத்மா பிற உடல்களிலும் உள்ளது. ஆயினும் இந்த உண்மையை அறிந்து கொள்வதற்கு நமக்கு அடிப்படைத் தத்துவம் தேவைப்படுகின்றது.

இங்கு எண்ணெய்கொள்ளும் குழியும், அதில் எண்ணையும் எண்ணெயில் தோய்த்த திரியும் கொண்ட விளக்கு இருக்கிறது. நமக்கு ஒளி உடனே கிடைக்கிறதா? இல்லை, யாராவது ஒருவர் அவ்விளக்கை ஏற்ற வேண்டும் அல்லவா?

உன்னிடம் தங்கம்,வைரம்,முத்து இவை இருக்கின்றன. இவற்றைக் கொண்டு நகைகள் தானாக வருமா? அவற்றை உருவாக்க பொற் கொல்லன் வேண்டும்.

மலரும், ஊசியும், நூலும் உள்ளன, மாலை தானாகக் கிடைக் குமா? மாலை உருவாக்க ஒருவர் வேண்டுமல்லவா?

ஆத்மா, அனாத்மா (ஆத்மா இல்லாதது), திவ்யாத்மா இம்மூன்றும் ஒன்று சேர்ந்ததே பரஞ்சோதி தத்துவம் தேகாத்மா ஜீவாத்மா உள்ளன இவையே பரமாத்மா (பக்கம்) என்று நிரூபிக்க ஒருவர் நமக்கு தேவை. A.B. என்ற எழுத்துக்கள் உள்ளன அவற்றை எவ்வாறு உச்சரிப்பது என்று தெரிந்து கொள்ள ஒரு

ஆசிரியர் தேவை. அதே போல எல்லா உடல்களில் இருக்கும் ஆத்மா ஒன்றேயென்றாலும் அந்த உண்மையை வெளிப்படுத்திக் கூறுவதற்கு ஒரு வடிவம் தேவைப்படுகிறது ஒருவர் தேவைப்படு கிறார்.

இந்தக் காரணத்துக்காகவே அவதாரங்கள் தோன்றுகின்றன. அவதா ரம் தெய்வதத்துவத்தையும், புனிதத்துவத்தையும், ஏகான்ம தத்து வத்தையும் தனது வடிவத்தின் மூலம் எல்லோரும் காணச் செய்து, விபரித்து, நிருபித்துக் காண்பிக்கிறது

(சா.அ.கோடை 1999ப 89)

07. ஆன்மீகப் பயிற்சி செய்ய வேண்டுமெனில் அறியாமையை விலக் கிக் கொள்ளுங்கள் (நான் ஆத்மா அல்ல என்ற பாவனையை) அனாத்ம பாவனையை விலகிக் கொள்ளுங்கள்.கடவுளைக் காண்ப தற்கு தனிப்பட்ட ஆத்மீகப் பயிற்சி எதுவும் செய்யத்தேவையில்லை நீயே கடவுள். கடவுளும் நீயும் வேறல்ல. கடவுளைப் பற்றிய இந்த அடிப்படை உண்மையைத் தெரிவிக்கவே அவதாரம். இந்த உண்மையைக் கடைப்பிடித்து அனுபவித்து நிருபித்து பகிர்ந்து கொள்கிறது.

(சா.அ. கோடை 1999 ப 98)

08. ஏன் இறைவன் அவதரிக்கிறார்? மனிதன் தன்னுள் உறையும் தெய்வீகத்தை உணரச்செய்யவும்,வேற்றுமையில் ஒற்றுமை காணச் செய்யவும் தான் அவதரிக்கிறார். ஆன்மீகத்தின் சாராம்சமே வேற்று மையாகத் தெரிபவைகளில் ஒற்றுமையை அறிந்து உணர்வதே. இதுதான் மனித வாழ்க்கையின் இலக்கு. பெயர் எதுவானாலும் நாடெதுவானாலும் வாழும் முறை ,எது ஆனாலும் ஆத்மா ஒன்று தான். ஆத்மாவைத்தான் மனச்சாட்சியென்று குறிப்பிடுகிறார்கள். அது உடலின் பாதத்திலிருந்து உச்சந்தலை வரை ஊடுருவிப் பரந்திருக்கிறது. ஆன்மீகத்தின் நோக்கமே அனைவரிடமும் நிறைந்தி ருக்கும் ஆத்மா ஒன்றே என்பதைப்புரிந்துகொள்வது தான். மனிதன் தன்தேகத்தின் மேல் வைத்திருக்கும் பற்றின் காரணமாகத் தன்னுள் நிறைந்திருக்கும் தெய்வதத்துவத்தைப் புரிந்துகொள்ள முடிய வில்லை.அதனால் தான் ஒற்றுமையில் வேற்றுமை காண்கிறான் (diversity in unity). இதற்கு அறியாமையே காரணம் பிரிந்து கிடப்பதாக நீ கருதும் பலவற்றிலும் இழையோடும் ஒருமைத் தன்மையை நீ காணவேண்டுமென்பதற்காகவே இறைவன் அவ தரிக்கிறான்.

(பி. பூ. பு. ம 1998 ப 217)

09. மனிதனின் உயர் மாற்றம் (Transformation தனிமனித தன்மை மாற்றம்) மிக அவசியமானது. ஆனால் மனிதனோ தனது கெட்ட நடத்தையால் காலத்தை விரயம் செய்கிறான் புனிதமற்ற வழியில் செல்கிறான். அவனது பழக்கவழக்கங்கள் மிக கேவலமாகவும், அற்பமாகவும் இருக்கின்றன. அசைவ உணவை விரும்பிப் பிராணி களைக் கொல்கிறான். மாசற்ற தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்ளாது அதற்கு மாறாக மதுபானம் பருகி வாழும் தாழ்ந்த வாழ்க்கையை ஏற்றுக்கொள்கிறான். இறைவனுக்குரியதான காலம் புனிதமற்றதாக ஆகும் வகையில் சூதாட்டத்தில் ஈடுபடுகிறான். அவ்வாறு கெட்டசெயல்கள் கெட்ட பழக்கங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்து கெட்டகுணங்களை வளர்க்கிறான்.

நாம் நமது கெட்ட பழக்கங்களை உதறி மனித மேம்பாடுகளைக் கடைப்பிடித்து நமக்குள் இருக்கும் தெய்வதத்துவத்தை நாம் அறிந்து அனுபவிக்கச்செய்யும் நிமித்தமாக பகவான் இவ்வுலகில் அவதரித்தார்

(சாயி அ.கோடை 1999 ப.69)

10. நான் சொல்வதெல்லாம் உங்கள் நன்மைக்காகத் தான். உங்களை தெய்வீகத்தை உணரவைக்கத்தான். எனது செயல்களும் அறிவுரை களும் ஆழ்ந்த உள்ளர்த்தம் பொதிந்தவை. நமது கல்லூரி மாணவர்களும் (மற்ற) அனைவரும் வெள்ளை உடையையே சீருடை (uniform) ஆக அணிகிறார்கள்.அதன் உள்ளர்த்தம் என்ன?

வெண்மை, தூய்மையைக் குறிக்கிறது அதைப்போல யாரையாவது காவியுடையில் பார்த்தால் உனக்குத் துறவுநிலை நினைவுக்கு வருகிறது. இதெல்லாம் நீங்கள் தூய்மையானவர்களாக எல்லா பந்தங்களையும் விட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற செய்தி யை அறிவிக்கத்தான். ஏனெனில் அப்போதுதான் உங்களால் தெய்வீகத்தை அடையமுடியும்.

(த.ச.சா.ஜன 2000 ப.21)

11) ஒவ்வொரு தெய்வீகமானவரும் அவதாரபுருசரும், ஆதர்ஸங்களை மனிதருக்கு நிருபனம் செய்து வாழ்ந்துகாட்டி நித்தியமான சத்யத் தை எடுத்து காட்டுகிறார்கள். அதன் மூலம் அவர்கள் தெய்வீகமான ஆனந்தம் அடைய வழிவகுக்கிறார்கள்.

(த.ச.சா.ஜூலை 99-ப17)

# 5. ஆன்மீகம்

01) ஆன்மீகம் என்பது என்ன?

ஒருமையை உணர்த்தல், எல்லாம் ஒன்றுதான் அதுவே பலவாக காட்சியளிக்கிறது என்பதை உணர்ந்து கொள்வது தான். ஒரு *சிறிய உதாரணம்:-*

ஒன்று பெரியதா? ஒன்பது பெரியதா?ஒன்றுடன் ஒன்றைச் சேர்க்கும் போது இரண்டாகிப் பலவாகிப் பெரியதாகிறது. சிருஷ்டி ஒன்றிலிருந்துதான் வந்து பல்கிப்பெருகியது. மனிதர்கள் இதனைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. ஆனால் இதைச் சரியாக, எல்லாம் ஒன்றாகிய இறைவனின் வடிவங்களே என புரிந்து கொள்வது தான் ஆன்மீகம்.

(த.ச.சா. மே94 ப6)

02) எல்லாவழிபாட்டு முறைகளுக்கும் ஒரு ஆன்மீகக் கருத்து இருக்கின்றது. ஆனால் தற்காலத்தில் மக்கள் அந்த உட்புறக்கருத்தை புரிந்து கொள்ளாமல் தலை முடியைக் காணிக்கையாக்குவது மட்டுமன்றி நிறையப் பணமும் செலவழிக்கிறார்கள். எந்த வகையிலும் ஷேத்ராடனம் சென்றதால் ஏற்படும் ஆன்மீக முன்னேற்றம் எதுவுமின்றி வீடு திரும்புகின்றார்கள்.

(த.ச.சா நவ 94-ப-21)

03) ஆன்மீகமென்பது மனிதத் தன்மையிலிருந்து தெய்வீகத் தன்மைக்குள் பிரவேசிப்பதல்ல. (இரண்டும் வேறு வேறு என்ற நோக்குவது தவறு) மனிதத் தன்மை மூலம் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தலே ஆன்மீகமாகும். ஆன்மீகமென்பது பிரபஞ்ச உணர்விலிருந்துபரதத்துவத்திற்கு உயர்ந்து செல்வது என்பது பொருளல்ல. ஒப்பற்ற பரதத்துவம் (தெய்வத்துவம்) மனிதனிடம் வெளிப்படுதலே ஆன்மீகம். நம் நாட்டின் ஆன்மீகமென்பது இவ் உலகிலிருந்து பரவுலகத்திற்குச் செல்வது, பின் அங்கிருந்து இங்கு திரும்பி வருவதுஎன்றிவ்வாறாக எண்ணிக் கொள்வதே பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஆன்மீகத்தைப் பற்றி இவ்வாறு பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அது நாளுக்கு நாள் புரியாததாக மாறிவருகிறது ஆகவே இக்காலத்திய இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆன்மீகம் என்பது கேலிக்குரியதாக மாறிவிட்டது.

ஆன்மீகம் என்பது ஆத்மதத்துவத்தில் தோய்ந்த வாழ்க்கையினை வாழும் முறையாகும். நமது வாழ்வே ஆன்மீகம் ஆகும். நமது ஆற்றல்கள் அனைத்தும் ஆன்மீகமாகும். இவ்வுலக வாழ்க்கையும் ஆண்மீகமும் வேறு வேறு, இரண்டிற்கும் சம்பந்தமில்லை எனநினைப் பது பெருந்தவறாகும். ஆன்மீகம் என்பது தனிமையில் வாழும் வாழ்க்கையல்ல. மனித சமுதாயம் முழுவதுமே ஒன்றெனவும் அது தெய்வீகத்தின்வெளிப்பாடு எனவும் கொள்ளுதலே ஆன்மீக மாகும். நமது வாழ்க்கை முழுவதுமே ஆன்மீகத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டதாகும். நாம் எதைச் செய்ய விரும்பினாலும், எதை பேச விரும்பினாலும் எதனை ஆலோசிக்க விரும்பினாலும் அவையனைத்தும் ஆன்மீகமாகும்.ஆன்மீகமென்பது உள்ளர்த்தங் களின் விரிவுரையாகும். (பிரபோதம்)

(த ச சா ஜுலை (92-6,7)

04) ஒரு இரசாயன நிபுணர் இரசாயனத்தில் மிகுந்த அறிவு பெற்றிருக் கலாம். இந்த இரசாயனத் துறையில் அவர் மிகவும் தேர்ச்சி பெற்றவரே. ஆனால் ஜடப்பொருட்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வ தற்கு அவருக்கு தேர்ச்சியில்லை. ஏனெனில் அது பௌதிகம் அதனால்அவர் அதுபற்றிவிமர்சிக்க தகுதி பெற்றவரல்ல. மருத்து வத் துறையில் பட்டம் பெற்ற டாக்டர் ஒருவர் பொறியியல்துறையில் சில நுண் கருத்துக்களை அறியாமல் இருக்கலாம் அவருடைய அறிவாற்றல் ஒரு துறையில் மட்டுமே விரிவடைந்துள்ளது. ஆனால் இது மற்றொரு துறையில் உபயோகமில்லாதது. அதேபோலஉலகப் பொருட்களைப் பற்றி மிக உயர்ந்த பட்டப் படிப்புக்கள் படித்து தேர்ச்சி பெற்றதால் ஒருவரை ஆன்மாவைப் பற்றியஅறிவு பெற்றவரா கக் கருதமுடியுமா? ஆன்மீகம் என்பது ஒரு விரிவான கடல்.

(த.ச.சா பெப் 87-10)

05) ஆன்மீகம் என்பது பூஜைகள் செய்வது, பஜனைகள் செய்வது, கோயிலுக்குப் போவது, புனித யாத்திரைகள் மேற்கொள்வது இவையே என்று கற்பனை செய்து கொள்கிறார்கள். வேத வேதாந்தங்களின் உண்மை என்ன? புராணங்களின் யதார்த்தம் என்ன? என்பது அந்த அறிஞர்களுக்குப் புரியாததால் மற்றவர்க ளுக்கு ஒழுங்கான முறையில் விளக்க முடியவில்லை.

தன்னிடமுள்ள விலங்குணர்வை வென்று மனிதத்தன்மையினை தெய்வீகத்துடன் கூட்டுதலே ஆன்மீகமாகும். தான்செய்யும் ஒவ் வொரு செயலிலும் தனது அளவற்ற ஆற்றலை உணர்ந்து ஒவ் வொரு செயலும் சாகஸச் செயலாக மாறுதலே ஆன்மீகமாகும்.

06) குறுகிய புத்தியுடன் கூடி எத்தனை ஆண்டுகள் சாதனை புரிந்தாலும் உயரிய நிலையை உங்களால் அடைய முடியாது. நீங்கள்வேறுபாடு களில் ஒருமையினைக்காண (unity in diversity) முயற்சி செய்ய வேண்டும். அதுவே உண்மையான ஆத்மீகமாகும். நீ கடவுளே தான். இதனைப் புரிந்து கொள்ளாத வரையில் நீ மனிதனாகவே இருப்பாய், இதனைப் புரிந்து கொண்டு விசாரணை செய்தால்வி வேகம் வளருகிறது. எத்தகைய பண்டிதனாயினும் விவேக மில்லா துவிடில் படிப்பறிவனைத்தும் வீணானதே ஆகும்.

(த ச. சா. July 92-7)

07) கோபிகைகள் யார்? ராதையார்? அவர்களைப் பெண்கள் என்று பாவித்து பல வித உறவுகளை நினைத்து தவறான பொருள் கொண்டதால் சரியான பொருள் மறைந்து விட்டது. நமது எண் ணங்களே கோபிகைகள், சங்கற்பங்கள் அனைத்தும் ஒன்று கூடிய மனமே ராதையாகும். எமது எண்ணங்களும், கிருஷ்ணன் என்ற பிரக்ஞானத்திடம் லயிக்க வேண்டும். இதையே பிரக்ஞானம் பிரம் மா என்று கூறுவர்.

(21.8.92. அருளுரை ப2)

08 தற்கால மனிதர்கள் பக்தியினையும் சரணாகதியினையும் வெளிப்ப டுத்திக் கொள்கிறார்களே தவிர அவற்றை வாழ்க்கையில் கடைப்பி டித்து பயிற்சி செய்து உள்ளே சொந்தமாக அனுபவிப்பதில்லை, தற்போது ஆன்மீகம் என்பது வெளிச்செயலாக வெளிப்படுகின்றதே தவிர உள்ளனுபவமாக உணரப்படுவதில்லை (திவ்ய அனுபூதி) உண்மையான ஆன்மீகம் எது? பஜனைகள் புரிவதா? சாயிராம் சாயிராம் என்று கூறுவதா? ஷேத்திராடனங்கள் செய்வதா? இவை யெல்லாம் மனிதனின் பலவீனத்தில் எழுந்தவை ஆகும். உண் மையான ஆன்மீகம் என்பது எது? மனிதனிடம் உள்ளவிலங்குத் தன்மையினை வேர்மூலத்துடன் அழித்தலே ஆன்மீகமாகும். அவனிடமுள்ள தெய்வீகத் தன்மையானது வெளிப்படும் படி செய்

வதே உண்மையான ஆன்மீகமாகும்.

இந்நாட்டில் தியானம் செய்கிறார்கள் ஜபம் செய்கிறார்கள் ஆனால் விலங்குத்தன்மையினையும் வளர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். விலங்குத் தன்மையினை வளர்த்துக் கொண்டு எத்தகைய சாதனா மார்க்கத்தில் ஈடுபட்டாலும் அது வியர்த்தமேயாகும். இத்தகைய சாதனாமார்க்கங்கள் தெய்வீகத்தினையே கூட (உன்னுள்) மோசஞ் செய்பவையாகும் நம்முடைய துஷ்டபுத்தி, அநியாய, அக்கிரம, அநாசார அசத்ய, அகங்காராதி புத்திகளை நம்மிடமிருந்து முழுமையாக விரட்டவேண்டும். அதுவே உண்மையான ஆத்மீகம் ஆகும். அசூசையும் (பொறாமை) அகங்காரமுமே கடவுளை நம்மிடமிருந்து விலக்கி வைக்கக்கூடியவை ஆகும். இவைஇரண்டும் மனித வாழ்க்கை என்ற மரத்தின் வேரினையும்அடிப்பாகத்தினையும் அரிக்கும் பூச்சிகளாகும். இவை மனிதத்தன்மையை முழுதும் அழிக்கக் கூடியவையாகும் இவற்றை வைத்துள்ளவன் மனித னேயல்ல. இவற்றுடன் கூடியிருக்கும் போது ஆன்மீகத்தைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?

(31.8.92.அருளுரை.ப.10)

09. ஆன்மீகம் என்றால் என்ன?

பெரியோர்களைத் துதிப்பதன் அர்த்தம் என்ன? .பெரியவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டியது ஏன்? இதனால் கிடைக்கும்பயன் என்ன? என்று ஆழ்ந்து விசாரணை செய்தால் இதுவும் வாழ்க்கை எனும் நாடகத்தில் ஒருபகுதியே என்பது தெளிவாகும்.

தனக்குள்ளேயே இருக்கும் ஆனந்தத்தை நாடி பிறரிடமோ அல்லது வெளிப் பொருட்களிலோ தேடுவதும் அந்தநாடகத்தில் ஒரு அங்கமே எனலாம். உன்னதமான நிலையை அடைய விரும்பினால் உன்னத மான பாதையை பின்பற்ற வேண்டும். உன்னத நிலையை எட் டுவது என்பது. பறவைகளைப் போல் இறக்கைகளுடன் ஆகாயத் தை நோக்கிப் பறந்து செல்வதென்பதல்ல. நீங்கள் கோருவது முத்தி அல்லது விடுதலை. முத்தியடைய பெரியோர்களுடன் சேருதலும், ஜபம், தியானம் முதலிய சாதனைகள் மட்டும் போதாது அவைகள் போலியானவையே. அதிசூட்சுமமான உண்மையான, புனிதமான, உத்தமமான, அமரத்துவமான தெய்வத்துவத்தை

போலியான சாதனைகளால் அடைய முடியாது. மோட்சம் என்றால் ஏதோ பிரத்தியேகமான பிரதேசம் அல்ல.ஒரு குருவோ மற்றஎவரோ வழங்கக்கூடியதல்ல. ஒருவரின் உண்மையான தன்மையான, அவருக்குள்ளே இருக்கும் மெய்ப்பொருளை உணர்தலே, மோட்சம் என்பது. மிருகத் தன்மையில் உழன்று கொண்டு, வெளி உலக நாட்டத்திலேயே ஈடுபட்டு அவற்றைப் பற்றிய நினைவிலும் ஆசை யிலும் காலத்தைக் கழித்து வரும் மனிதன் எப்படி தெய்வத்து வத்தை உணர முடியும்?

(த ச சா ஏப்ரல் 93-ப12)

10) இன்று ஆன்மீகம் என்றால் பெரிய கருத்தரங்குகளில் பங்குபற்று விதும், உபதேசங்களைக் கேட்பதும், சுலோகங்களைப் பாராயணம் செய்வதும், தியானம் செய்வதும், ஜபமாலையை உருட்டுவதும் பஜனை செய்வதும் தான் என்று கருதி இதனால் மோட்சம் அடைந்து விடலாமென்று நினைக்கிறார்கள். இது ஆன்மீகம் அல்ல. முதன் முதலில் தன்னிடம் இருக்கும் மிருகத்தன்மையை போக்க வேண்டும். மிருகத்தன்மையை அழித்துமனிதத் தன்மையை அடைந்து அதில் நன்றாக நிலைத்து, மதிமயக்கம் தெளிந்து தெய்வத் தன்மைக்கு உயர வேண்டும். அதுதான் ஆன்மீகம்.

(த ச சா ஏப்ரல்)

11) தியானம் என்று இருப்பதும், ஜபம் செய்வதுமா ஆன்மீகம்? ஒன்று என்ற தன்மையைப் பற்றிய விசாரணையே ஆன்மீகம். வெளிப்படை யாகப் பலவாகத் தோன்றுபவற்றில் அடிப்படையான ஒன்றைக் காண்பதுதான் ஆன்மீகம். ஒருவர் தன்னுடைய முன்னேற்றத்துக்காக ஈடுபடுவது ஆன்மீகமல்ல. அது ஒரு சுயநலம். ஆகவே எல்லா வழிகளிலும் இந்த பிரபஞ்சம் தெய்வீகத்தின் வெளிப்பாடு என்ற விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விஸ்வம் விஷ்ணு ஸ்வரூபம்

ஈஸாவாஸ்யம் இதம் சர்வம் (இங்கு எல்லாமே தெய்வீகத்தினால் ஊடுருவப்பட்டுள்ளது)

இது ஒரு திடமான முடிந்த முடிவாக எம் மனதில் உறுதிப்பட வேண்டும். ஒவ்வொரு உபாதியும் (உடம்பும்) ஒரு மின் குமிழ் போல. அதில் தெய்வீகத்தின் வெளிப்பாடான (மின்சாரம்) உண்மை பிரகாசிக்க வேண்டும்.

ஒன்று, பலவாக வேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டது. ஆகவே ஆன்மீகம் என்பது பலவற்றில் உள்ள ஒற்றுமையை அங்கீகரிப்பது தான். கடலின் அலைகளைப் போல, சூரியனின் கதிர்களைப் போல, ஒவ்வொருவரும் கடவுளின் குழந்தைகளே. தெய்வீகத்திலிருந்து எல்லையில்லாத துளிகளாக அன்பு பிரவகித்துக் கொண்டிருக்கிறது.

(ஆ ச சா ஜூன் 90-ப 151)

12) ஆன்மீக விசாரணையே ஆன்மீகம்

உண்மையில் நான் என்பது உள் நிறைந்த ஆத்மாவே.வேறு ஒன்றும் இல்லை. இதைத் தெரிந்து கொள்கிற புரிந்து கொள்கிற சாதனையை (self inquiry)ஆத்மவிசாரம் என்பர். மற்றப்படி பூஜை, நாமஸ்மரணம் ஜபம், தியானம் இவையெல்லாம், ஆன்மீகம் ஆகாது. உண்மையில் ஆன்மீகம் என்பது மெய்ப்பொருளைத் தேடுதலாகிய ஆத்ம விசாரம் மட்டும் தான். காலத்தைப் புனிதமாகப் பயன் படுத்த பூஜைநாமஸ்மரணம், ஜபம், தியானம் இவை அவசியம். எனவே இவற்றை விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் ஆத்ம விசாரணைமட்டுமே உண்மையான ஆன்மீகம் ஆகும். இது மிகவும் எளிதானது. சரியாகவிளக்கிச் சொல்பவர்கள் இல்லாததால் ஆன்மீகம் கடினமானது என நினைக்கிறார்கள்.

(சத்ய உபநிடதம் கேள்வி 48ப 38(முதல் பற்றி)

13) விடாமல் தொடர்ந்து ஆத்ம பரிசோதனை செய்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய பார்வையும், பேச்சும் தூய்மையானவையாக இருக்கின்றனவா? அவை இதயத்திலிருந்து புறப்படுகின்றனவா? என கண்காணிக்க வேண்டும். இந்த ஆத்ம பரிசோதனை தான் ஆன்மீகமாகும்.

(த ச சா மே 98-ப6)

14) மனிதனுள் நிறைந்திருக்கும் தெய்வீகத்தை உணர்வதற்காக மனிதனுக்கு நல்வித பக்தி முறை கற்பிக்கப்படுகிறது.

(பி பூ பு ம 1998 ப 216)

## 06. தெய்வீகத்திற்கான அழைப்பு

01. சீக்கிரம் சீக்கிரம் அமிர்தமயமான அன்பு கலந்த சாயியினது அறைகூவலைக் கேளுங்கள். உங்களை அருகில் வந்து தெய்வீகத்தை அடைய அது அழைக்கிறது.யோகம் செய்வதோ, ஆன்மீக சாதனைகள் புரிவதோ எதுவும் தேவையில்லை. சீக்கிரம் சீக்கிரம் சாயியின் அன்பானவார்த்தைகளைக் கேளுங்கள்.

(த ச சா நவ 99-ப-12)

2) பிரசாந்திநிலையம் 16.12.73

என் அன்பே!

ஆன்மீகப் பசி ஏதேனும் உனக்கு இருக்கிறதா? வாழ்க்கையின் ஒவ்வொரு செயலின் உட்பொருளும் ஆன்மீகப் பசியே. வாழ்க்கையின் எல்லாத் தேவைகளும் கிடைத்த பிறகுகூட ஒரு அதிருப்தியும் அமைதியின்மையும் காணப்படுகிறதே. அறிந்தோ அறியாமலோ ஒவ்வொருவருமே இந்த ஆன்மீகப் பசியால் அவதிப்படுகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. உள்ளிருக்கும் ஆன்மாவை (தெய்வீகத்தை) உணர்ந்து கொள்ளாதவரை இந்த பசியடங்காது. இந்தத் தெய்வீக அதிருப்தியின்றி உண்மையான முன்னேற்றம் ஏற்படாது.

இந்த பிரமாண்டத்தை விளக்கும் உண்மைகளை இவ்வுலக மக்கள் உணர வேண்டும். இங்குள்ள மக்களிடம் உள்ள ஏகத்துவத்தையும் இதயங்களில் உள்ள அன்பையும் நற்பண்புகளையும் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே உலக அமைதி சாத்தியமாகும்.

ஆசீர்வாதங்களுடன்
ஸ்ரீ சத்ய சாயி பாபா

03. என்னில் உங்களைப் பாருங்கள்.
நான் உங்கள் எல்லோரிலும்
என்னைப் பார்க்கிறேன்.
நீங்கள் எனது வாழ்வு.
எனது மூச்சுக்காற்று.
எனது உயிர்.
நீங்கள் எல்லோரும் எனது உருவங்கள்.
நான் உங்களை நேசிக்கும் போது என்னையே நேசிக்கிறேன்.

நீங்கள் உங்களை நேசிக்கும் போது என்னையே நேசிக்கின்றீர்கள்.
நான் என்னை என்னிலிருந்து பிரித்துக் கொண்டு இங்குள்ள
எல்லாமாகவும் ஆகி இருக்கின்றேன்.
அப்படியென்றால் நான் நானாக இருக்க விரும்பினேன்.
அதாவது ஆனந்த ஸ்வரூபனாகவும்.
அன்பு ஸ்வரூபனாக
அதே தான் நான்.
அதுவாக இருக்க விரும்பினேன்.
நான் எப்படி ஆனந்த சொருபனாக இருக்கலாம்?
எப்படி ஆனந்தத்தைக் பெறுவது?
எப்படி ஆனந்தத்தைப் கொடுப்பது?
எப்படிஅன்பைப் பெறுவது?
எப்படி அன்பைக் கொடுப்பது?
யாருக்கு நான் ஆனந்தத்தைக் கொடுப்பது?
யாருக்கு நான் அன்பைக் கொடுப்பது?

ஆதலால் நான் இப்படிச் செய்தேன். நான் என்னை என்னிலிருந்து பிரித்துக் கொண்டேன். இங்குள்ள எல்லாமாகவும் ஆகி இருக்கி றேன்.

Sprit and mind by samuel Sand weiss p.34

04. எனது ஆனந்தத்திற்காக
ஒரு சொல்லைக் கொண்டு
இந்த உலகத்தைச் சிருஷ்டிக்கு மட்டும்
என்னை யார் என்று அறிந்து கொள்வதற்கு
இங்கே ஒருவரும் இருக்கவில்லை.
வாருங்கள் எல்லோரும் வாருங்கள்.
என்னில் உங்களைப் பாருங்கள்.
ஏனெனில் நான் உங்களில்
என்னைப் பார்க்கின்றேன்.

எனது பிரியமானவர்களே!
(நீங்கள் அவர், இவர், அது, இது அல்ல)
நீங்கள் நானே ஆனவர்கள்.
(நான் தான் நீங்கள்)

Peace - printed in Malaysia July 1998

05. *ஸ்வாமிதான் நீங்கள்*
*நீங்கள் தான் ஸ்வாமி*
உண்மையில் ஸ்வாமி உங்களிடமிருந்து வேறானவர் அல்ல. நீங்கள் எடுத்துச் செல்ல இங்கே பகவான் தயாராக இருக்கிறார். உங்கள் மனம் போல நீங்கள் அவரை உங்களுடன் அழைத்துச் செல்லலாம். யார் எல்லாம் பகவானை முழுமனதுடன் நேசிக்கிறார் களோ பகவான் முழுமையாக அவர்களுடையவர் ஆகிறார்.
(த.ச.சாடிசம்பர் 99.ப.16.)

06. நீயே தெய்வீகமாக இருக்கும் போது,
தெய்வீகமே நீயாய் இருக்கும் போது,
தேடுவதற்கு என்ன இருக்கிறது?
இறைவனைத் தேடுதல் என்ற வார்த்தைப் பிரயோகமே பயனற்ற பண்டிதர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அத்தகைய வார்த்தையே தேவையற்றது. உலகியல் பொருட்களை தேடலாம் இறைவனைத் தேடுவானேன்?அவன் தான் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறானே. இந்த நம்பிக்கை மட்டும் உன்னிடம் உறுதியாக இருக்குமானால் (உன்னால்) இறைவனைக் காணாமல் இருக்கமுடியாது. உனக்கு நிச்சயம் இறைக்காட்சி தெரியும். ஆனந்தம் நிறையும்
(த ச சா டிசம்பர் 99-ப17)

07. எனதுசெயல்கள் வெறும் விளம்பரத்துக்காகவோ பிரச்சாரத்துக் காகவோ அன்றி மற்றவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகவோ அல்ல. அவை அனைத்தும் முதலில் எனக்கு மகிழ்வை தரவேண் டும் என்பதற்காகவே செய்யப்படுகின்றன. மற்றவரை திருப்தி செய்யவோ, அவர்களது ஒப்புதல் பெறவோ, அன்றிப் பாராட்டைத் தேடவோ எனக்கு அவசியமில்லை.

ஏனெனில் நானும் நீங்களும் வேறு வேறானவர்கள் அல்ல. நீங்களே நான். நானே நீங்கள்.

ஒவ்வொரு பல்பினுள்ளும் ஒளிரும் மின்சக்தி நானே. என்னை தனியாக பிரித்துகாண்பவர்கள் பொய்மையையே காண்கின்றனர். நான் உங்களின் இதயத்தில் இருக்கிறேன். நீங்கள் என் இதயத்தில் இருக்கிறீகள். இதைப்பற்றிய எந்த சந்தேகமும் ஐயமும் வேண்டாம். நாய்கள் குரைக்கலாம், நரிகள் ஊளையிடலாம் ஆனால் சத்தியம் மட்டும் மகோன்னதமாக முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்
(த.ச.சா பெப் 97பின் பக்கம்)

08. பாலின் ஒவ்வொரு துளியிலும் வெண்ணெய் இருக்கிறது. ஆனால் அந்த வெண்ணெய்யைக் காண பலவகையான சோதனைகளை மனிதன் நிகழ்த்தியாக வேண்டும். ஆனால் வெண்ணெய்யற்ற பால் இவ் உலகில் எங்கும் கிடையாது.

இவ் உலகமே பெரிய பாத்திரம். அதில் எங்கும் பரவியிருக்கும் சைதன்ய வடிவமே பாலாக நிறைந்திருக்கிறது. அப்பாலினுள் நீக்கமற நிறைந்திருப்பதே தெய்வத்துவம் என்கிற வெண்ணெய். தெய்வீகத்தத்துவம் என்கிற வெண்ணெயை இவ் உலகிலிருந்து கடைந்து எடுத்திருக்கின்றனர்.

(த ச சா ஜன 98ப 18)

09. ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு உயிர் அணுவிலும் தெய்வதத் துவம் நிறைந்துள்ளது. பொருள் அணுக்களின் கட்டமைப்பு ஒவ் வொன்றிலும் அணுக்களால் நிறைந்துள்ளது. வேதாந்தம், அனைத் தும் ஆத்மாவால் (தெய்வீகத்தில்) நிறைந்துள்ளது என்று கூறுகி றது. ஆத்மா இல்லாத இடமில்லை. அணுக்கள் தெய்வீக சத்தியை பெற்றவை. தெய்வசக்தி அணுவிலும் நுண்ணியது. அண்டத்திலும் பெரியது. ஒன்றை நாம் ஏற்றுக்கொண்டு மற்றதை மறக்கலாகாது. ஒவ்வொரு அணுவிலும் உயிரணுவிலும் தெய்வீகம் உறைந்துள் ளது. மனிதன் கண்ணால் காண்பவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றவற்றை நம்ப மறுக்கிறான். இது தவறு மறைந்துள்ளவற்றில் உள்ள தத்துவத்தை அறிய மறக்கின்றோம்

ஐந்தடி உயரமுள்ள ஒருவரை காண்கிறீர்கள். அவர் மாநிறமானவர் அவரது தலை வழுக்கையாக உள்ளது. ஸ்தூலவடிவமே உண்மை யென்று நினைக்கிறீர்கள். அவரிடம் பல பண்புகள் மறைந்துள்ளன. அவரிடம் தயை உள்ளது. அவரிடம் தெய்வீக பாவனையுள்ளது. இவற்றை நீ கவனிப்பது இல்லை, அதனால் இல்லை என்று கூற முடியுமா?

(த ச சா மார்ச் 95 ப13)

11) தனக்குள் இருக்கும் தெய்வீகத்தை மனிதன் புரிந்து கொண்டானென் றால் அவனால் இயற்கையையே ஆளமுடியும். ஏனெனில் இயற்கை யும் தெய்வீகத்தின் ஒரு பகுதிதான். உண்மையின் மூலம் அன்பை அனுபவிக்கலாம். அதே போல அன்பு செலுத்துவதன் மூலம் உண்மையைக் காணலாம். கடவுளை நேசித்தாயானால் ஒவ்வொரு பிராணியிடத்தும் கடவுளைக் காண்பாய்.

(சா ந ஓ அ ம /பட் ப200)

# 07 தெய்வீகத்திற்கான யாத்திரை

01. ஆத்ம விசாரணை
நீ யார்?
ஆத்மன்.
எங்கிருந்து நீ வந்துள்ளாய்?
அந்த ஆத்மனிலிருந்து.
எங்கு நீ சென்றுகொண்டிருக்கிறாய்?
அந்த ஆத்மனை நோக்கி.
எவ்வளவு காலம் உன்னால் இங்கிருக்க முடியும்?
நீ பிரிந்து வந்த அந்த ஆத்மனுடன்
இரண்டறக் கலக்கும் வரை.
இப்பொழுது நீ எங்கிருக்கிறாய்?
மாறி மாறி உருக்கொண்டு எப்பொழுதும்
மாறுதலுற்ற உண்மையற்ற உலகில்.
இப்பொழுது நீ எந்த உருவில் இருக்கிறாய்?
தானே தேகம் என்ற எண்ணத்தில் அனாத்மாவாக
நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?

சாரமற்ற, மாற்றமுள்ள வீண்பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டு. ஆனால் இக்கணத்திலிருந்து நீ மேற்கொள்ள வேண்டிய வேலை எது? என்றும் நிலைத்த பொருளுடன் சேர, மாற்றொணாத வேலை யில் ஈடுபட்டுஆத்மானந்தத்தைப் பெறுவதே வேலை.

(த.ச.சா. மே 1984 பின் பக்கம்)

02. நீ எங்கிருந்து வந்தாயோ, நீ அங்கேயே சென்றடைய வேண்டும். அணுவில் இருந்து வந்த நீ,அணுவிற்கேதிரும்பச் செல்ல வேண்டும் அணுவே ப்ரம்மன். அணுவுக்கு அப்பால் வேறெதுவும் இல்லை. நிலத்தில் ஒரு சிறு ஆலம் விதையை விதைக்கிறாய். அந்த விதையே பெரும் மரமாக மாறுகிறது, அத்தகைய மரத்தில் சிறு சிறு பழங்கள் இருக்கிறன. ஒவ்வொரு பழத்திலும் பல விதைகள் இருக்கின்றன. இதன் அடிப்படையில் கீதை கூறுகின்றது நான் துளி (நிஜம்), நீ அதன் பிரதிபிம்பம் ஒவ்வொருவரின் உள்ளும் நான் பிரதிபிம்பமாகக் காணப்படுகிறேன்.

*"பீஜம்மாம் சர்வ பூதானாம்" அனத்து ஜீவராசிகளுக்கும் அடிப்படையான விதை நானே.*

நீ ஒரு சிறு விதை விதைத்தாய். அது பெரும் மரமாக மாறி இருக்கிறது. அம் மரத்தில் அநேக பழங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பழமும் அதே விதைகளைக் கொண்டிருக்கின்றது.

அதே போல இறைவன் வித்து. தெய்வீக வித்து. பிரபஞ்ச வடிவமாக மாறுகிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு கிளையாகும். ஒவ்வொரு கிளையிலும் பல பழங்கள் என்ற தனி மனிதர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு பழத்திலும் தெய்வீகம் என்ற வித்து இருக்கின்றது. பிரபஞ்சம் என்ற மரத்தில் அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா போன்ற பல கிளைகள் இருக்கின்றன.அனைத்து கிளைக ளாகிய நாடுகளிலும் உள்ள மனிதத்தன்மை ஒன்றே. இந்த கிளை கள் அனைத்திற்கும் உள்ள மூலதாரம் ஒன்றே அதுவே ஆத்ம தத்துவம் (தெய்வதத்துவம்) இந்த பல நாடுகளின் NATIONS ARE MANY BUT EARTH IS ONE பற்பலவேறுபாடுகளுக்குக் காரணம் ஆனால்பூமி ஒன்றே. STARS ARE MANY SKY IS ONE விண்நட்சத்தி ரங்கள் பல, ஆகாயம் ஒன்றே. BEINGS ARE MANY BUT EARTH IS ONE சீவராசிகள் பல, மூச்சு ஒன்றே. JEWELS ARE MANY GOLD IS ONE நகைகள் பல தங்கம் ஒன்றே. இவ்வாறு பெயர்களும் வடிவங்க ளும் பல வகைப்பட்டவை. ஆனால் ஆத்மா (தெய்வீகம்) ஒன்றே.

(சா அ கோடை 1999 ப 96)

03. அநேகர் சுவாமி எங்களுக்கு வழிகாட்டுங்கள் என்று கேட்கின்றனர். என்ன வழி? புறப்பட்டு வந்த இடத்திற்கே திரும்பப் போக வேண்டும். பிரம்மனிடமிருந்து வெளிப்பட்ட நீ பிரமத்தையே சேர வேண்டும். அது தான் சரியான மார்க்கம். இடையில் எத்தனையோ குறுக்கீ டுகள் எல்லாம் வரக்கூடும். அவற்றை எல்லாம் லட்சியம் செய்யக் கூடாது. நிலையான உறுதி வேண்டும். அதுவே நிஜமான பக்தி. பக்தி என்பது பூஜை செய்வது, பஜன் செய்வது மட்டும் அல்ல. நிர்மலமான அன்பை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதே பக்தி.

(த ச சா செப்டம்பர் 95 ப 7)

04. மனிதத் தன்மைக்குள் தெய்வத் தன்மை மறைந்திருக்கிறது. மனிதத் தன்மை தெய்வத்தன்மைக்கு உயர வேண்டும். அது விலங்குத் தன்மைக்கு கீழிறங்கலாகாது. முன்னால் செல்வதற்கான gear ஐப் பயன்டுத்துங்கள், பின்னால் செல்வதற்கான gear ஐப் பயன் படுத்தாதீர்கள். இலட்சியத்தை அடையும் வரையில் வழியில் நிறுத்தாதீர்கள்.

(அ.வ.2 பக்கம் 74)

05. ஒவ்வொருவரிடமும் தெய்வத்துவம் என்ற நல்லியல்பு உள்ளது. இந்த சிவம் என்ற நல்லியல்பு இல்லாத மனிதனே இல்லை.ஆனால் தானாகவே செயற்கையாக வரவழைத்துக் கொண்ட ராகம் (விருப்பு), துவேஷம் (வெறுப்பு) எனப்பட்டவை அவற்றை மூடி விடுகின்றன. இக்காரணத்தினால் உள் மறைந்திருக்கும் தெய்வத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. நாம் ராகம், துவேஷம் அகங்காரம் என்ற சாம்பலை ஊதி விலக்க வேண்டும்.

ஆன்மீக மார்க்கம் மிகவும் எளிதானது. இதை விட சுலபமான வழி வேறு எதுவுமில்லை. ரோஜா மலரின் இதழைத் தொடுவது கூட இதை விடக் கடுமையானது. ஆன்மீகத்தை புரிந்து கொள்வது அந்த அளவுக்குச் சுலபமானது.

காரணம் என்ன? இது உனக்குள்ளேயே இருக்கிறது. அதை நீ வேறு எங்கும் தேட வேண்டாம். தேடுவது அவசியமே இல்லை. எவ்வாறு தேடுவது? வெளியே இருந்தால் நீங்கள் தேடலாம். அது வெளியே இல்லையே, அது உனக்குள்ளே இருக்கிறது. நீ தான் கடவுள் (மாணவர்களே) உங்களை நீங்கள் எங்காவது வெளியே தேடுவீகளா? யாரும் தன்னைத்தானே தேட மாட்டார்கள். தன்னைத் தானே தேடிக் கொண்டிருப்பவன் அறிவிலி என்று கூறப்படுவான்.

(பி அ .வ 5 பக்கம் 26)

அர்ஜுணன் -நான் தெய்வத்துவத்தை எவ்வாறு அடைய இயலும்
கிருஷ்ணன் - அலைபாயும் மனம் காரணமாக (உன்னால்) நிலை மாறாது இருக்க இயலவில்லை.கடவுளிடம் நீ சிறிதும் கலங்காத திடநம்பிக்கை கொண்டால் மட்டுமே அது உனக்கு உறுதியைத் தரும்.
பிர.நவ2000-ப.123

## 08 ஜீவன் பரம் பொருளன்றி வேறில்லை

01. எம்மதஸ்தராயினும் தங்கள் மதத்தின் முடிவான கொள்கை இன்ன தென்று அறிந்து கொள்கிறார்கள். ஹிந்துக்களுக்கு மட்டும் அது என்னவென்றே தெரியாதிருக்கலாமா? ஹிந்து மதத்தில் எத்தனை கொள்கையிருந்தாலும் இதற்கென்றே தனிச் சிறப்பாக உள்ள அப்படிப்பட்ட தத்துவம் யாதெனில்
"ஜீவன் பரம் பொருளன்றி வேறில்லை" என்னும் அத்வைதம் தான். இது புரியட்டும் புரியாமல் போகட்டும், ஆனால் இது அடியோடு தெரியாமல் நம் மக்கள் இருக்கலாமா? அவர்களுக்கு இதைத் தெரிவிக்காமல் கூட சுவாமி என்று நான் இருக்கலாமா?
(தீராத விளையாட்டுப் பிள்ளை ரா. கணபதி ப 84)

02. எந்த விதை நடுகிறாயோ அதற்குத் தகுந்த மரம் வளர்கிறது.ஒவ் வொரு மனிதனும் வாழ்க்கையின் வித்து என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். "மமைவாம்ஸோ ஜீவலோகே" நீங்கள் அனைவரும் எனது பொறிகள் என்று கடவுள் கூறுகின்றார்.

"பீஜம்மாம் சர்வபூதானாம்" அனைத்து உயிர்களுக்கும் நானே வித்து என்று கிருஷ்ணன் கூறுகின்றான். உண்மையில் அனைத்து ஜீவராசிகள் என்ற கனிகள் உள்ளும் ஆத்மா (தெய்வீகம்) வடிவில் மறைந்திருக்கும் விதை நானே என்கிறார் இறைவன்.

உள்ளே மறைந்திருக்கம் தெய்வத்துவத்தை புரிந்து கொள்ளாது நம் வாழ்க்கையை வீணாக்குகின்றோம். வெளித் தோற்றத்தாலும் வெளியே காணப்படும் பொருட்களாலும் நாம் கொண்டு செல்லப்படு கிறோம்.

(சா அ கோடை 1999 ப 171)

03. ஒரு மலையின் மேல் ஒரு பெரிய கல் இருக்கிறது.அதைப் பார்க் கும் போது அதைப் பூஜிக்க மனம் வராது. ஒரு சிற்பி வந்து அதன் மேல் ஒரு சித்திரம் வரைந்து அதை ஸ்ரீ கிருஷ்ணரின் சிலையாக மாற்றுகிறான். அதைக் கோயிலில் பிரதிஷ்டை செய்கிறார்கள். சிலை செதுக்கப்படும் போது அந்தப் பாறையின்

துகள்கள் மலையின் உச்சியில் எங்கும் சிதறிக் கிடக்கின்றன. அவை சொல்கின்றன, அந்தக் கோயிலில் ஆராதிக்கப்படுவது நாங்களே என்று "தத்வமஸி" இந்தப் பாறையின் ஒரு துண்டுக்கு உருவம் வந்துவிட்டது. இந்தத் துண்டுக்கு உருவம் இல்லை அவ்வளவே, ஆனால் உருவம் பெற்றது மட்டும் ஆராதிக்கப்படு கிறது, உருவமற்றவையும் தெய்வம் தான் (மற்றவைகளும்) என்பது மறக்கப்படுகிறது. அதனால் தான் (தெய்வீகத்தை).

| | | | |
|---|---|---|---|
| (i) | நிர்க்குணம் | - | குணங்களற்ற |
| (ii) | நிரஞ்சனம் | - | மாசற்ற |
| (iii) | சனாதனம் | - | நிரந்தரமான |
| (iv) | நிகேதனம் | - | வடிவமற்ற |
| (v) | நித்யம் | - | என்றுமுள்ள |
| (vi) | சுத்த | - | முக்குணங்களும் இணைந்து |
| (vii) | புத்த | - | ஞானம் கொண்ட முக்தா |
| (viii) | முக்தா | - | முத்தி அளிக்கும் வலிமைகொண்ட |
| (ix) | நிர்மல | - | உருவமற்ற |
| (x) | ஸ்வரூபனம் | - | பிரபஞ்சமே வடிவான |

என்று சொல்கிறார்கள்.

(த.ச.சா பெப் 96-ப24)

04. தெய்வத்துவத்தை நிர்குணம், நிரஞ்சனம் என்னும் போது உருவ மற்றதும், உருவமுள்ளதும் தெய்வத்துவமே என்று தீர்மானமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. நமக்கு இத்தகைய விசாலமான மனப்பாங்கு வளர வேண்டும். குறுகிய எண்ணங்கள் வளர்வதால் தான் நம்முடைய ஆன்மீக சாதனைகளின் பலம் குறைந்து போகி றது. நாம் முன்னேற வேண்டுமானால் சர்வமும் தெய்வத்துவமே. தெய்வீகமற்றது இந்த உலகில் எதுவும் கிடையாது என்ற பரந்த எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(த.ச.சா ஏப் 95-ப.7)

05. எங்கு நோக்கினாலும் தெய்வீக தத்துவம் இருக்கிறது.அஹம் ப்ரமமாஸ்மி என்பதற்கு நான் தெய்வத்துவம் என்பது பொருள். அத்தகைய திடவுறுதியையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள

வேண்டும். கடவுள் உன்னிடமிருந்து வேறுபட்டு இருக்கிறார் என்று நீ நினைத்தால் அது நெருக்கமான உறவல்ல. இறைவனிடம் "நீ என்னுடையவன்" என்று நீ கூறினால் அதுவும் பயனற்ற மனோபாவம். நானும் நீயும் ஒன்றே என்று நீ கூறவேண்டும். இருப்பது ஓரே உண்மை, இரண்டல்ல.இத்தகைய ஒருமை அனுப வத்தைப் பெறுவதற்கு இக்கருத்தைத் தெரிந்து கொண்டு அதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும்.

அன்பு நிறைந்த சேவையாலும் பிரார்த்தனையாலும் கிடைத்தது என்ன? ஒன்றுமில்லை. ஏன்? இதயம் சரியாக இல்லை. இறைவன் தன்னிடமிருந்து வேறானவர் என்று எப்போதும் நினைத்துக் கொண் டிருக்கிறாய். ஆனால் நீயே இறைவன். இதில் திட உறுதியும் நம் பிக்கையும் வளர்த்துக் கொள்ள ஒவ்வொன்றும் இறைவனாகும். இத்தகைய பரந்த உணர்வை வளர்த்துக்கொள். அது இல்லாத மனிதர்கள் வேதம் ஓதுகிறார்கள். மறைநூல்கள் கற்றுக் கொள்கி றார்கள். ஆனால் இருந்த இடத்திலேயே இருக்கிறார்கள்.

இறைவன் கட்டளைக்குக் கீழ் படி. எந்த சூழ்நிலையிலும் அவற்றை மீறாதே. மனிதர்கள் சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று. இறைவனுக்குக் கொடுக்கும்.வாக்குறுதிகளை அவர்கள் காப்பாற்ற வேண்டும். இறைவா நானே நீ என்று அவர்கள் உணரவேண்டும்.
(சா அ.1997-ப.12)

06. உடல் பஞ்சபூதங்களாலானது. அது சடம். உணர்வு காரணமாகவே உடலனுபவம் ஏற்படுகிறது. மனம் என்பது அதிர்வு. மனம் காரண மாக உடல் அசைகிறது.ஆத்மாவின் ஒளிவீச்சு காரணமாக மனம் ஞானத்தைப் பெறுகிறது. ப்ரக்ஞானம் ப்ரம்மா என்றால் இடையறாத ஒன்றிணைந்த விழிப்புணர்வு (constant integrated awareness)என்று பொருள். மனிதனின் ஆற்றல்கள் அனைத்திற்கும் ஆத்மாவே காரணம். ஆத்மாவின் ஆற்றலை நாம் மறப்பதற்குக் காரணம் என்ன? கேன உபநிடதத்தில் ஒரு கட்டையுடன் மற்றொரு கட்டையை உரசிக் கடையும் போது நெருப்பு உண்டாவதாகக் கூறப்படுகிறது. மனதையும் புத்தியையும் குடைந்து ஆராயும் போது ஞானாக்கினி வெளிப்படுகிறது. அத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கான கால

அளவுகள் வேறுபடுகின்றன. அறிவுணர்வு (Consciousness) எல்லோருள்ளும் ஒளி வீசுகிறது. கதிரவனுக்கு ஒளி இயல்பாதல் போல மனிதனுக்கு சத் - சித் ஆனந்தம் இயல்பானது. ஆத்ம சாட்சாத்காரம் பெறுவதற்கு, தன்னையுணர எந்த முயற்சியும் தேவையில்லை. இதன் இரகசியம் அறியாதவர்கள் பெருமுயற்சி செய்து மனத்தளர்ச்சி அடைகின்றார்கள். தன்னைப் பற்றிய தன் னறிவு தனக்குள்ளேயே இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லை. இத்தகைய அறிவுணர்வு உடல் முழுவதிலுமே பரவியி ருக்கிறது. நமது சரியான கடமையை முறையாகப் புரியாததால் நமக்கு இத்தகைய துன்பங்கள் விளைகின்றன.

(சா.அ.1997-ப.24)

07. ஒரு விதை செடியாக முளைத்து, பூவும் காயும் பூத்துக் குலுங்கும் பெரிய மரமாக வளர்ந்து கம்பீரமாக முழுமை அடைவது போல, மனிதனும் கருவிலிருந்து உருவாகி வளர்ந்து முழுமையடைகிறான். சிருஷ்டிக்கு மூலகாரணம் அதாவது விதை போன்றவர் கடவுள். இந்தப் பிரபஞ்சமே அவ்விதையிலிருந்து வந்த பெருமரம். இந்த மரத்தில் பழமாக விளங்குபவர்களே மனிதர்கள். இந்த மனித குலத்தில் உள்ள ஒவ்வொருவருள்ளும் விதை உள்ளது. அதுவே ஆன்மா என்பது. இந்த ஆன்மாவே படைப்புக்குக் காரணம். இதுவே இறைவனின் இயல்புமாகும். ஆகவே இதை ஆதிகாரணம் என்கி றோம். <u>ஒவ்வொரு மனிதருள்ளும் இந்தத் தெய்வீகம் என்னும் விதை ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.</u> ஆனால் இந்த உண்மையை எல் லோராலும் உணர முடியவில்லை. (காரணம்) இதை உணரும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் மிகச் சிலரே.

(த.ச.சா.பெப் 85 ப 1)

> உனது கடமைகளை உண்மையாகவும், கபடமில்லாதும் செய்கிற பொழுது அங்கே தெய்வீகம் பிரத்தியட்சமாகும்.
>
> (ஆ.ச.சா ஜன-2000)

# ०९ தெய்வீகம்

01. இவ் உலகம் முழுவதும் பார்த்தால் மூன்று விதமான செயற்பாடுகள் காணப்படும், சிருஷ்டியை உருவாக்குவது, அதனை பாதுகாப்பது, பின் அதனை லயமாக்கி அழிப்பது என்ற மூவகைச் செயற்பாடுகளை அனைவருமே ஒப்புக்கொள்வார்கள். படித்தவரானாலும் மற்றவரானாலும் யாராயினும் இதனை இல்லையெனமுடியாது. ஆனால் இவை தெய்வீகத்தைப் பற்றி புரிந்து கொள்ள வழிகாட்டுமேயன்றி இவையே தெய்வத்திடம் இட்டுச் செல்லாது. ஆனாலும் கூட தெய்வீகத்தைப் பற்றிய அறிவை இவற்றால் கொடுக்க இயலும்.

இம் மரக்கிளையினூடேயே துருவ நட்சத்திரம் தெரிகிறது எனக் காட்டினால் மரக்கிளையில் துருவ நட்சத்திரம் இருக்கிறது என அர்த்தமில்லை. கோடிக்கணக்கான மைல்கள் தள்ளியிருக்கும் நட்சத்திரத்தை அடையாளம் காட்டப் பயன்பட்டவை மரக்கிளைகள் அவ்வளவு தான். அதே போல தான் வேதங்களும், புராணங்களும், சாஸ்த்திரங்களும் தெய்வீகத்தை இனம் காட்டுகின்றன.அவரின் (குறிப்பிட்ட தெய்வத்தின்) பெருமைகளையும் இயல்புகளையும் எடுத்துக் கூறுவதன் மூலம் தெய்வீகம் என்பது இவ்வகையில் காணப்படும் எனச் சுட்டிக்காட்டுகின்றன.

அடர்ந்த கானகத்தைப் பார்த்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. உயர்ந்த மலைகள், பிரவகித்து ஓடும் நதிகள் இவை யாவும் கூட மனதிற்கு இனிமையைத் தருகின்றன. ஏனெனில் இவைகள் பகவானது (தெய்வீகத்தின்) சத்தியைப் பறைசாற்றும் சின்னங்கள்.

நட்சத்திரங்கள் பிராகாசிப்பதும், கிரகங்கள் சுழலுவதும், சூரியன் ஒளி வீசுவதும், காற்று அடிப்பதும் எல்லாமும் கூட இறைவனின் இருப்பை உணர்த்தும் சின்னங்கள் தான்.

தீப்பொறியைக் காணும் போது தீயின் இயல்பு தானாகவே புரியும். நீர்த்துளியின் இயல்பைப் புரிந்து கொண்டவன் கங்கையின் வெள்ளத்தைப் பற்றியும் உணர்ந்து கொள்ள முடியும். எங்கும் நிறைந்திருக்கும் அணு தத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடிந்தவன்

பரந்திருக்கும் பிரபஞ்ச தத்துவத்தையும் புரிந்து கொள்வான். இதைத்தான் உபநிஷதங்கள் "அணோரணீயான் மஹதோ மஹியான்" என உரைக்கின்றன. அணுவிலும் சிறியவன் பெரியவற்றிற் கெல் லாம் பெரியவன் என இறைவனை விபரிக்கின்றன. அதனால் மானவத்துவம் என்பது கூட சக்தி சாமர்த்தியத்துடன் கூடிய திவ்யத் துவமே எனப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா மனிதர்களிடமும் நிறைந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்த திவ்யத்துவம்.

ஆனால் மனிதன் உடல் மேல் வைத்துள்ள பற்றால் அதன்(உடல்) உள்ளுறையும் தெய்வீகத்தை உணர மறுக்கின்றான். ஆனால் உலகில் எல்லாவற்றிலும் தெய்வத்துவம் நிறைந்திருப்பதை உணர் ந்து அச்சத்தியத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சத்தியத்தை ஆராய்ந்து அறிவதைத்தான் "சத்தியான் வேஷணம்" என்கின்றனர். இது என்ன சத்தியான் வேஷணம்? எங்கும் நிறைந்து நிரந்தரமாக இருக்கும் சத்தியத்தை தேடுவது எப்படி? இச் சத்தியத்தின் இன்னோரு பகுதி நிஜம். இது எப்படி என்று பார்க்கலாம்.

உதாரணமாக

"சூரியன் காலையில் கிழக்கில் உதித்தது" மாலையில் மேற்கில் மறைந்தது. இது நிஜமா அன்றி சத்யமா? உலகியலான கண்ணோட் டத்தின்படி பார்த்தால் சூரியன் கிழக்கில் உதித்து, மேற்கில் மறைவது என்பது நிஜம். பரிசோதனை செய்து பார்த்தால் இது சத்யமல்ல. சூரியன் நிலையாக இருக்கிறதேயன்றி எங்கும் பயணிப் பதில்லை. ஆனால் பூமி சுற்றுவதனால் சூரியன் பயணம் செய்வது போன்றபிரமை ஏற்படுகிறதே தவிர சத்தியம் என்பது சூரியன் நிலையாக இருப்பது என்பது தான்?

***ஆகையால் மனிதன் தன்னுள்ளும் மற்றவருள்ளும் உறையும் தெய்வீகத்தை உணர்ந்து கொண்டால் அதுவே சத்யான் வேஷணமாகிறது.***

(பி அ வ 5 பக் 113)

02. தெய்வீக தத்துவத்தை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். இவ்வுலகில் கடவுளைத் தவிர வேறெவரும் கிடையாது. சிலர்

இவ்வுலகம் பொருட்களாலும் சக்தியாலும் நிரப்பியிருப்பதாகக் கூறலாம். உண்மையில் சொல்லப்போனால் சக்தி மட்டும் தான் இருக்கிறதே தவிர பொருட்கள் அல்ல. எந்தப் பொருட்களைக் கண்டாலும் சில காலம் கழித்து அது சக்தியாக உருவாகிவிடும் (பகவான் தன் கைக்குட்டையைக் காண்பித்து கூறினார்). இது துணி. நூல்களால் ஆனது நூல் பஞ்சால் உருவானவை. ஆக பஞ்சு, நூல் மற்றும் துணி எல்லாம் ஒன்றே தான். அதைப் போல பெயரும் வடிவமும் மாறினாலும் ஒரே ஒரு அடிப்படைத் தத்து வமாகத் தெய்வீகம் அதில் நிரம்பியிருக்கிறது.

(பி அ வ5பக் 113)

03. பிரபஞ்சத்தில் காணக்கிடைக்கும் அசையும் அசையாப் பொருட்கள் எல்லாமே தெய்வீகத்தின் (ஆத்மாவின்) வெளிப்பாடுதான். ஆன்மீகப் பகுதியில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் கேட்பது ஆன்மாவையே பார்ப்பது ஆன்மாவையே. கேள்விப்பட வைப்பதும் ஆத்மா. மறக்க வைத்ததும் ஆன்மா. அதனால் தான் அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் சொன்னான் "இந்த பிரபஞ்சத்தில் ஆத்மாவைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று. மனிதனின் இன்றைய தேவை ஆன்மாவை உணரவேண்டும் என்ற தீர்மானம். இது தன்னை உணர்வதற்கு நிகரானது. அதாவது தன்னைப் பற்றிய அறிவு.

(ஆ ச சா செப் 90 ப 233)

04. தெய்வீகம் ஊற்றப்பட்ட அச்சுதான் மனிதன். மற்ற உயிரினங்களும் அப்படியே. ஆனால் மனிதன் ஒருவனுக்குதான் இதை உணர்ந்து கொள்ளும் சக்தி இருக்கிறது. இதைத் தான் உபநிஷதங்கள் சொல்கின்றது. இதைத் தான் சகல மதங்களும் எதிரொலிக் கின்றன. இதை எண்ணற்ற மகான்களும் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

(சா பா ந ஓர் ம அ பெட் ப 209)

05. **வேதம் பிரகடனப்படுத்திய உண்மையான "அஹம் ப்ரஹ் மாஸ்மி" என்பதை பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளி வாக விளங்கிக்கொள்ளலாம்.** பாலை உறை வைத்து தயிராக் குவதற்கு அந்தப்பாலுக்குள் ஒரு சிறிய அளவு தயிரை சேர்க்கின்

றோம் அப்பொழுது அந்த சிறிய அளவு தயிருடன் சேர்ந்த எல்லாப் பாலும் தயிராக மாறுகிறது. ஆரம்பத்தில் அந்தத் தயிரை எங்கிருந்து எடுத்தோம்? இதே மாதிரியாக முன்பு (வேறொரு) தயிருடன் சேர்க்கப்பட்ட பாலிலிருந்தாகும். வருடக்கணக்கான (எமது) வாழ்க்கை தான் பால் தெய்வீகத் தத்துவமான ப்ரம்மம் தான் தயிர். தெய்வதத்துவம் அறிமுகப்படுத்தப்பட்டு அது வாழக்கையை ஆக்கிரமித்த பொழுது அந்த வாழ்க்கை தெய்வீகமாக மாறுகிறது. பிரம்மத்தோடு சேர்ந்ததும் ப்ரமமாகும் என்ற "பிரம்மவித் பிரம்மைவ பவதி" என்றதன் மூலம் உபநிஷதம் இதைத் தான் கருதுகிறது. இந்தக் கலக்கும் முறை, சேருவதன் பூரணத்துவம், ஒன்று சேருதல், கூட்டுறவு என்பவற்றை அஸ்மி எனப்பட்டது. இது நடக்கும் பொழுது அகம் என்பது ப்ரம்மம் ஆகின்றது.

(ஆ ச சா செப் 2000 பின் அட்டை)

06. இன்று வெள்ளிக்கிழமை என்று சொல்கின்றோம். இன்று ஏப்ரல் 14ம் திகதி. இதை யார் சொன்னது? இன்று காலையில் போர்டுடன் இந்த நாள் உன் முன்னே வந்து இன்று வெள்ளிக்கிழமை ஏப்ரல் 14ம் திகதி என்று சொல்லிற்றா? இல்லை, இல்லை. கலண்டரைப் பார்த்து, பஞ்சாங்கத்தைப் பார்த்து இன்று ஏப்ரல் 14ந் திகதி என்று நிச்சயமாகச் சொல்கிறீர்கள்.

அதேபோல் பாரத கலாச்சாரத்தில் (சனாதன தா்மத்தில்) வேதங்கள், தெய்வ சக்திக்கு பிரமாணமாக நிற்கின்றன. இந்த ஆத்ம தத்துவம் ஒன்று தான் மனித குலம் முழுவதையும் இணைக்கிறது. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஆத்மாவிலிருந்தே வெளிப்பட்டது. அதனால் தான் மனிதனை நரா என்று அழைக்கிறார்கள் ரஹ என்றால் அழியக்கூடியது, ந என்றால் இல்லை என அர்த்தம். எது அழியாததோ அது நரஹ அதனால் மனிதன் உடலால் மாறக்கூடியவனே தவிர, அழியாத அம்ருத புத்திரன் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவன் ஆனந்த மயமானவன் உயர்ந்த வலிமைமிக்க மனிதத் தன்மை தற்பொழுது மறக்கப்படுகிறது. மனித குணநலன்கள் கூட மறக்கப்படுகிறது. மிருக குணங்கள் பெருகிப்போய் மனிதன் அதன் வழியில் செல்லுகின்றான்.
***மனிதகுண நலன்களை உணர்ந்து ஆத்ம தத்துவத்தில் மனதை லயிக்கும் படி செய்யும் போது தான் மனிதனின் உள்உறையும் தெய்வீகம் புலனாகிறது.***

(த ச சா ஜுன் 95-ப13)

# 10 ஆத்மா

## தெய்வத்திற்கு இதயம் உண்டு, அந்த இதயமே ஆத்மா

01. சந்திரனுக்கு சுயமாக ஒளி இல்லை. ஒளிக் கிரணங்களாலேயே அது பிரகாசிக்கிறது. அதுபோல மனதும் சுய ஒளியற்றது. ஆத்மா வின் ஒளிக்கிரணங்கள் அதன் மீது பாய்ந்தால்த்தான் அது பிரகா சிக்கும். ஆகவே எல்லாவற்றிற்கும் ஆத்மாவே மூலம் ஆத்மாவே எல்லாமுமாகும்.

சிலர் ஆத்மா தனது உடலிற்குள் உள்ளதாகக் கருதுகின்றனர். தேகம்,மனது,பிரபஞ்சம் யாவும் ஆத்மாவிலேயே இருக்கின்றன வாதலால் ஆத்மா வேறு ஒன்றுக்குள் இருப்பதாகக் கருதுவது மதியீனமே.

சர்வம் ஆத்ம மயமே, ஜபம், யக்ஞம், தியானம் எல்லாம் கடவுள் வேறு ஆத்மா வேறு என்று வேற்றுமை கருதுபவர்களால் செய்யப்படு பவையேயாகும்.

***தெய்வம் வேறுதான் என்று கருதுபவர்கள் மெய்யறிவற்ற வர்களே. தெய்வத்திற்கு இதயம் உண்டு. அந்த இதயமே ஆத்மா.***

(த.ச.சா ஏப்ரல் 97-ப2)

02. ஒரு விதையை நிலத்தில் நடுகிறோம். அது செடியாகி முளைவிட்டு வளர்ந்து மரமாகி, கிளைகளும், இலைகளும் மலர் மொட்டுக்களும் காய் கனிகளுமாகி, ஓங்கி வளர்ந்த போது அதன் ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டாலும் இதற்கெல்லாம் ஆதாரம் அந்த விதையல்லவா? அதுவே இலையாகி, மலராகி, காயாகிக், கனியாகவும் ஆகிறது இதுவே உண்மை.

(த ச சா மார்ச் 87 -ப 10)

03. சிறிது உப்பை எடுத்து ஒரு கோப்பையிலுள்ள நீரில் போடுகிறோம். அது கரைந்துவிடுகிறது. இப்போது அந்த கோப்பையில் உள்ள நீர் முழுவதும் இந்த உப்பு வியாபித்துள்ளது. ஆனால் கண்ணுக்கு புலப்படவில்லை. புலப்படாததனால் அதில் உப்பு இல்லை என்று சொல்லமுடியாது. துளி நீரை வாயில் ஊற்றி ருசி பார்த்தால் அதில் உப்பு இருப்பது சுவையினால் தெரிந்து விடும். ஆகவே

கண்களால் காணமுடியாது என்பதனால்"அது இல்லை என்று கூறமுடியாது. நீரெங்கும் உப்பு பரவியிருப்பதை ருசியினால் உணருகிறோம். இதைப் போல எங்கும் நிறைந்திருக்கும் ருசி என ஆத்மாவை (தெய்வீகத்தை) உணரலாம். இதுவே தத்வமஸி என்ற வேத மஹாவாக்கியத்தின் விளக்கம்.

(த ச சா மார்ச் 87- ப 10)

04. உன்னுடைய ஆத்மா பரமாத்மாவின் ஓர் அலை. இவ்வுலகவாழ்கையின் ஒரே குறிக்கோள் அக்கடலுக்கும் அவ் அலைக்கும் உள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடிப்பது தான். நம்முடைய மற்ற எல்லாச் செயல்களும் பிற உயிரினங்களுககு பொதுவானவை. இது ஒன்று தான் மனிதனின் தனி உரிமை மிருகத் தன்மையில் இருந்து சிரமப்பட்டு முன்னேறி இந்த உயர்ந்த அந்தஸ்த்தை அவன் அடைகிறான். அப்படியிருக்க பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள வருடங் களை எல்லாம் உண்பதிலும் உறங்குவதிலும் உலகசுகங்களைப் பெறுவதிலுமே செலவிட்டு விட்டால் மனிதன் தன்னை இன்னொரு பிறவியின் தண்டனைக்கு ஆளாக்கிக் கொள்கிறான்.

(சா பா ந ஓர் அ ப 223)

05. நீங்கள் அனைவரும் தெய்வத்தின் ஆயிரம் வடிவங்களே. எங்கும் பரந்திருக்கும் தெய்வத்தின் அங்கங்களே. எத்தனை சிரசுகள் இருந்தாலும் இருப்பது ஒன்றே ஒன்றுதான். ஆத்மா ஒன்றுதான். எத்தனையோ பல்புகள் இருக்கலாம். ஒன்று சிவப்பாக இருக்கலாம். நீலமாக இருக்கலாம். பச்சையாக இருக்கலாம். மஞ்சளாக இருக்கலாம். கலர்கள் வேறு வேறாக இருக்கலாம் அவற்றில் ஒளிரும் சக்தி (wattage) வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அவற்றைப் பிரகாசிக்க செய்யும் மின்சாரம் ஒன்று தான். அதேபோல் அனைவருள்ளும் உறையும் தெய்வ சக்தி ஒன்றுதான். எப்போதும் நீங்கள் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டவே வேண்டாம். நீங்கள் உயர வேண்டுமானால் உங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் (wattage) சக்தியை அதிகமாக்கிக் கொள்ளுங்கள். படுக்கையறை விளக்கு குறைவான வெளிச்சத்தில் இருக்கிறது. வரவேற்பு அறை விளக்கு பிரகாசமாக ஒளி விடுகிறது.

இங்கே விளக்கு குறைவாக இருக்கிறதே அங்கே பிரகாசமாக இருக்கிறதே என்று குறைபட்டுக் கொள்ளாதே. பல்ப்பை மாற்று.

பிரகாசமான பல்பை மாற்றினால் ஒளி கூடும். கரண்டை மாற்ற முடியுமா? இங்கு பல்பு என்றால் என்ன? உங்கள் இதயம். இதயம் விசாலமானால் ஒளி கூடும். அப்போது தான் உண்மையான ஆனந் தத்தை அனுபவிக்கமுடியும்.

குறுகிய இதயத்தை வைத்துக்கொண்டு பெரிய பேச்சுக்கள் பேசி னால் யாரும் நீங்கள் பேசுவதைக் கேட்கமாட்டார்கள்.

(த.ச.சா.டிசம்பர் 93-ப12)

06. இதயத்தின் புனிதமான வயலில் நீங்கள் கேட்பது எல்லாம் கொடுக் கும் கற்பக மரத்தைக் காண்பீர்கள். இந்த மரத்தைச் சுற்றி ஏரா ளமான களைகள் வளர்கின்றன. இந்தக் களைகளை எல்லாம் நீங்கள் எடுக்க முடிந்தால் உங்கள் இதயத்தில் இருக்கும் வரமளிக் கும் கற்பக மரத்தின் தரிசனம் பெறுவீர்கள். இதுவே ஆத்மா எனப்படுகிறது. இந்த ஆத்ம தத்துவத்தின் அனுபவம் ஏற்படுவதற்கு தார்மீக வாழ்கைக்குச் சம்மந்தப்பட்ட சில வகையான காரியங் களை மேற்கொள்ள வேண்டும்.

(கோடை மழை 1973 ப 210)

07. “நயமாத்மா பலஹினேலப்யதிதே”
பலவீன மனம் கொண்டவனால் ஆத்மாவை உணர இயலாது. ஆத்மாவின் மேல் உனக்கு நம்பிக்கை இருக்குமானால் மனப் பலவீனம் என்பதே ஏற்படாது.

(த. ச.சா.ஜனவரி 99-ப8)

08. கணிதத்தில் 1+1+1+1 என்றால் நாலு வருகிறது. ஒன்று என்ற எண்ணைக் கூட்டுவதாலோ அன்றிக் கழிப்பதாலோ அந்த எண் கூடுகிறது அல்லது குறைகிறது. ஆன்மீக கணிதத்தில்
ஆத்மா + ஆத்மா + ஆத்மா எனக் கூட்டும் போது வரும் விடை ஆத்மா தான். அது கூடுவதும் இல்லை, குறைவதுமில்லை.

(த .ச சா ஜன 99-ப18)

09. ஒவ்வொருவருமே தெய்வீகத்தின் திருவடிவமே. உனது உடலை மட்டுமே கருத்திற் கொண்டு, உன்னை வெறும் மனிதனாக மட்டு மே எண்ணி மயங்கிப் போகிறாய். உடல் மனிதத் தத்துவமாக இருக்கலாம். ஆனால் உள்ளிருப்பது ஆத்மா என்னும் தெய்வீகம்.

(த ச சா மே 98-ப 7)

# 11 சத்சித் ஆனந்தம்

01. சத் சித் ஆணந்தம் என்றால் என்ன?

தேகம்+ஆத்மா → தேகாத்மா

(ஜீவன்)மனம்+ஆத்மா → ஜீவாத்மா

ஆன்மீகம்+ஆத்மா → பரமாத்மா

இப்படி தேகம், ஜீவன், பரம் என்று வேறுபட்டாலும் அத்துடன் இணைந்திருப்பது ஒன்றே. ஆத்மாதான். தேகாத்மா என்றால் என்ன? தேகத்தை விட்டு ஆத்மா போய்விட்டால் தேகாத்மா கிடையாதே. தேகம் என்பது தேவை. உயிர் தத்துவமான ஜீவனுடன் இணை யாவிட்டால் ஜீவாத்மா என்பது இருக்காதே. ஆத்மா என்பது சர்வாத்மாவைக் குறிக்கிறது. எல்லா இடத்திலும் நிறைந்திருப்பது அதுதான். ஜீவனுடன், தேகத்துடன் ஆத்மாவுடன் இப்படி எல்லா வற்றிலும் இணைந்திருப்பது ஆத்மா. அது தான் சத். சத் என்றால் என்ன? அதை சக்கரையுடன் ஒப்பிடலாம். ஏனெனில் என்ன செய் தாலும் அதன் சுவை மாறாது. காபியில் சேர்த்தாலும், டீயில் சேர்த்தாலும், பாலில் சேர்த்தாலும், பாயாசத்தில் சேர்த்தாலும் அதன் இனிப்பு சுவை மாறவே மாறாது. ஆக என்றும் மாறாத அந்த ஆத்மா தான் சத்.

சித் என்பது சலனிக்கக்கூடியது. மாறும் தன்மை கொண்டது. அதை நீருடன் ஒப்பிடலாம். இந்த இரண்டும் தனித்தனியாக இருக்கிறது. இவை இணையும்போது சர்க்கரையும் இல்லை, நீரும் இல்லை. சிரப்பாக (syrup) மாறுகிறது. ஆகையால் சத், என்கிற தெய்வத்துவம், சித் என்கிற ஜீவத்துவமும் இணைந்து ஆனந்தம் உண்டாகிறது. இதுதான் சத்சித் ஆனந்தம் என்பது. உருவகங்கள் மாறலாம். ஆனால் ஆதாரம் மட்டும் ஒன்றுதான்.

(த.ச.சா ஆகஸ்ட் 94 ப.9)

02. பிரமதத்துவம் என்றல் என்ன?

மாயாதத்துவம் என்றால் என்ன?

சத்சித் ஆனந்தம் என்பது பிரம்ம தத்துவம்.

ரூபநாமம் என்பது மாயா தத்துவம்.

இவை வெளிப்பார்வைக்குத் தான் வேறு வேறாக

விளங்குகின்றனவே தவிர அவற்றின் உட்புறசத்யம் வேறு. தண்ணீர் சமுத்திரமாக இருக்கும் போது அலை எழுவது எப்படி? இடைவிடாத காற்றடிக்கும் போது அலைகள் உருவாகின்றன. காற்றில்லையெனில் இந்த நீரில் அலைகள் தோன்றமாட்டா. காற்றின் சக்தியினாற்தான் தண்ணீர் அலையாக மாறுகிறது. இதில் காற்றுத்தான் மாயை, அலைகள் ஜீவன். சமுத்திரம் என்பது சத்சித் ஆனந்த வடிவம். அதனால் சத் சித் ஆனந்த வடிவிலிருந்து புறப்பட்ட ஜீவனும் சத் சித் ஆனந்தம் . இந்த உண்மையை உணர்ந்த பிறகுதான் "பிரம்ம வித் பிரம்மைவ பவதி" என்பது விளங்கும்.

(த.ச.சா.செப் 96-ப5)

03. உயிர் உடல் பரம் என்ற மூன்றும்?

சமுத்திரத்திலிருந்து அனேக அலைகள் பிறந்து வருகின்றன. எத்தனையோ விதமானவை. இருப்பினும் அவையெல்லாம் சமுத்திரத்தைச் சேர்ந்தவையே. கடலும் அலையும் வேறு வேறானவை அல்ல. உருவமும் பெயரும் தான் வேறுபட்டவை. ஆனால் ஆதாரம் ஒன்று மட்டும் தான் அதைப் போல் சத்சித் ஆனந்தம் என்ற கடலிலிருந்து ஜீவராசிகள் என்ற வெவ்வேறு அலைகள் புறப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அலைக்கும் ஒவ்வொரு வித உருவமும் பெயரும் இருந்தாலும் சத் சித் ஆனந்தம் சாகரத்திலிருந்து பிறந்தவையே.அதனால் தான் சுவாமி எல்லோரையும் திவ்வியாத்ம சொரூபுலாரா என்று அழைக்கிறேன். நீங்கள் அனைவரும் ஆத்மாவின் வெவ்வேறு ரூபங்கள்.

சமுத்திரத்தில் அலைகள் உருவாகின்றன. அவற்றில் நுரை இருக்கிறது. நாம் மூன்று இருப்பதாகச் சொல்கிறோம். கடல், அலை, நுரை என்று, ஆனால் மூன்றும் ஒன்றே. அலை இல்லை என்றால் நுரை இல்லை, நீர் இல்லை என்றால் அலை இல்லை. ஆக எல்லாவற்றிற்கும் ஆதாரம். நீர்தான் அதே போல் தேகத்திலும், உயிரிலும், ஆத்மாவிலும் இணைந்திருப்பது ஒன்றே. அது தான் ஆன்ம தத்துவம். இதைப் புரிந்து கொள்ள நமது பழக்கங்கள் மட்டும் சரியானதாக அமைய வேண்டும்.

(த ச சா ஆக 94- p 9)

04. எப்படி இந்த உண்மையைப் புரிந்து கொள்வது?
கண் தெரியாத ஒருவனுக்கு உலகம் இருக்கிறதோ இல்லையோ என்பது தெரியாது. ஆனால் பலர் பேசுவதன் மூலம், உலக இருப்பைப் பற்றி சொல்வதன் மூலம் உலகம் என்பது சத்யம் தான் என்று அனுமானிக்கிறான். சுயமாக ஜகம் (உலகம்) இருக்கிறது என்ற அனுபவம் அவனுக்கு இருக்கிறதில்லை.

அவ்வாறே சாதாரண மனிதர்களும் புராணங்கள், சாஸ்த்திரங்கள், உலகைப் பற்றி எடுத்துரைப்பதை வைத்து சத் சித் ஆனந்தம், சத் சித் ஆனந்தம் என்று கூறுகின்றனர் (குருடனின் உலக அபிப்பிராயத்தைப் போல). இவர்களுக்கும் கூட சுயஅனுபவம் கிடையாது.எவ்வளவுதான் படித்த பண்டிதராய் இருந்தாலும் கிரந்தங்கள் கூறுவதை எடுத்துரைக்கின்றனரே தவிர அவர்களுக்கென்று சுய அனுபவம் எதுவும் இல்லை. இந்நாளில் (அவதார காலத்திலாவது) ஒவ்வொரு மனிதனும் சத் சித் ஆனந்தம் என்றால் என்ன என்பதைப்பற்றிப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

சத் சித் ஆனந்த சத்யத்தைப் புரிந்து கொண்ட பின்பு தான் மனிதன் தன்னைப் பற்றிய உண்மை என்ன என்பதை அறிந்து கொள்ளமுடியும். சத் சித் ஆனந்தம் என்பது ஏதோ தனக்கு சொந்தமான பௌதிகமான பொருள் என்று எண்ணுகிறான். சத் சித் ஆனந்தம் என்பது அவனிலிருந்து வேறுபட்டதல்ல. பின் ஏன் அதை வேறான பொருளாக மதிக்கிறான்.மாயை தான் (அறியாமை) அவனை இவ்வாறு சத் சித் ஆனந்தமும் அவனும் வேறு வேறானவர்கள் என்ற நினைப்பில் ஆழ்த்துகிறது.

உடலைப் பற்றிய பற்றுதல் தான் முதலில் மாயைக்குக் காரணம். நான் யார் என்ற கேள்விக்கு முதலில் ஒவ்வொருவரும் விடை தேட வேண்டும். இந்த விடை கிடைத்ததும் சத் சித் ஆனந்தம் என்பதைப் பற்றிய உண்மையை புரிந்து கொள்ளப் பிரயாசைப்பட வேண்டியதில்லை.

நான் ஒரு உடல், ஒருஉருவம், ஒருதனிப்பட்ட மனிதன் என்ற நினைவில் மயங்கியிருக்கும் போது சத் சித் ஆனந்தம் என்பதன்

உண்மை புரிவதில்லை. ஆனால் நான் என்ற தத்துவத்தின் உண்மை புலப்பட்டதும் மனிதன் சத்யத்தை உணர அதிகம் பிரயாசைப்படத் தேவையில்லை. மனிதன் சத் சித் ஆனந்த வடிவினன். ஒவ்வொருவரும் சத்சித் ஆனந்த வடிவினரே.

(த ச சா மார்ச் 98-ப 4)

05. எப்படி இந்த நிலைக்குப் போவது?

சிறு புழுவும் கூட தன்னைச் சுற்றிவரும் பட்டாம் பூச்சியின் ரீங்கா ரத்தின் ஒலியால் தானும் பட்டாம் பூச்சியாக உருவெடுக்கின்றது. அதேவிதமாக நானும் சத் சித் ஆனந்த ஸ்வரூபனே என்ற நினைவில் தொடர்ந்து இருப்போமேயாகில் சத் சித் ஆனந்த வடிவமாக மனி தனும் மாறமுடியும். நான் சத் சித் ஆனந்த வடிவினன் என்று இடைவிடாமல் உச்சரித்து வரவேண்டும். தான் அவ்வாறே மாறிவிட்ட தாக நம்ப வேண்டும். உன் உள்மூச்சு வெளிமூச்சு இரண்டோடும் இந்த நம்பிக்கையை இணைத்து, உச்சரித்து வர வேண்டும். ஸோ - ஹம் ஸோ - ஹம் அது நானே, அது நானே என்ற நிரந்தரமாக உச்சரித்து வருதல் அவசியம். அவ்வாறெனில் என்ன? நானே சத் சித் ஆனந்த வடிவினன் என்ற எண்ணம் உள் ளத்தில் ஆழமாகப் பதியும் அப்போது படிப்படியாக பௌதிகமான தேக அபிமானம் குறைந்து மறைந்து விடும். நித்யசத்யமான சச் சத் சித் ஆனந்த வடிவம் நிலைபெறும்.

06. வழிபாட்டு முறைகளில் நிறைவு ஏற்படுவதில்லை ஏன்?

இவ்வுலகில் பலர் இறைவனை அவருடன் சம்பாஷிக்கவும், அவரை உணர்ந்து அனுபவிக்கவும் வேண்டிப் பிரார்த்திக்கிறார்கள். ஆனால் எவருக்கும் முழு நிறைவு ஏற்படுவதில்லை. ஏன்?

குறைபாடு பக்தியிலா? முயற்சியிலா? ஆன்மீக பயிற்சியிலா? சடங்கு முறையிலா? இவை எதிலும் இல்லை. கடவுளின் உண்மைத் தன்மை புரியாததால் மக்கள் ஏமாற்றமும் நிராசையும் அடைகிறார் கள். இறைவன் சத்சித் ஆனந்த வடிவம். உலகியல் இன்பங்களில் தன்வசம் இழந்து இருக்கும் போது எவ்வாறு சத்சித் ஆனந்த வடிவினரான இறைவனை உணர இயலும்? ஆகவே தெய்வத்து வத்தைப் பற்றி நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தெய்வத்துவத்தின் இரகசியம், புனிதத்துவம் இவற்றைப் புரிந்து கொண்ட பின்னரே அவரை அறிந்து, உணர்ந்து, அனுபவிக்க இயலும்.

தெய்வத்துவத்தைப் புரிந்து கொள்ள கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம்,ஞானமார்க்கம் இவை மூன்றும் விதிக்கப்பட்டுள்ளன. கர்ம மார்க்கத்தின் வழியாக நுழைந்து பக்தி மார்க்கத்தின் வழியிலே நின்று ஞானமார்க்கத்தில் முடிய வேண்டும்.

| | | |
|---|---|---|
| கர்மமார்க்கம் | - | இளங்காய் |
| பக்திமார்க்கம் | - | பழுக்காத கனி |
| ஞானமார்க்கம் | - | பழுத்த கனி |

சுவைத்த பிறகே (ஒரு பழத்தின்) இனிமையை உன்னால் உணர முடியும். வெறும் இளங்காயை உண்பதன் மூலம் பழுத்த கனியின் சுவையை உன்னால் உணரமுடியாது. கர்மமார்க்கத்தின் மூலம் வாழ்க்கையில் பிரவேசித்து, பக்தி வழிபாட்டு மார்க்கத்தின் மூலம் வாழ்க்கையை நடத்தி, ஞானமார்க்கத்தில் வாழ்க்கை முடிவடைய வேண்டும். அப்போது தான் நமக்குத் தெய்வீக நிறைவு ஏற்படும். அதற்குத் தகுதி உள்ளவர்களாகவும் நாம் மாறுவோம். இதுவே சாயியின் இரகசியம்.

சாயி - saai

S = Service = சேவை - கர்ம மார்க்கம்

A = Awareness - விழிப்புணர்வு - Adoration - வழிபாடு (பக்தி மார்க்கம்)

I = Illumination - பிரகாசம் - (ஞானமார்க்கம்)

கர்மமார்க்கத்தில் தொடங்கி (சேவை) விழிப்புணர்வு என்ற பக்தி மார்க்கத்தில் தொடர்ந்து சென்று பிரகாசம் என்ற ஞானத்தில் முடிவதே ஆன்மீக வழி.

(சாயி அருளமுதம் கோடை 1999 ப.129
சாயியின் சத்திய இரகசியம்)

07. உண்மையான பட்டம் (Degree) எது?

ஸத் என்பது என்றுமுள்ளது. சித்-சாந்தத்துடன் இருத்தல் (Aware ness) அனைத்து ஞானங்களிற்கும் மூலம். அனைத்து இலட்சியங் களின் சாரம்.அனைத்து சாத்திரங்களின் இலட்சியம் அனைத்து விழிப்புணர்வுக்கும் மூலம்.

*ஸத் - தெய்வத்துவம்*
*சித் - ஜீவத்துவம்*

இரண்டும் சேர்ந்த ஏகத்துவமே, ஒருமைத்தன்மையே ஆனந்தம். ஜீவாத்மனும், பரமாத்மனும் ஐக்கியமாவதே ஆனந்தம். ஸத் - தெய்வம், சித் - ஜீவன்(தெய்வத்துவம் பற்றிய Aware ness - விழிப்புணர்வு - அந்தநிலை) ஜீவனே தெய்வம் என்ற நிலையே ஆனந்தம். நாம் ஆனந்தத்தை விரும்புகிறோம். ஆனந் தத்தை எங்கு பெறமுடியும்? பணத்தை சம்பாதிக்கலாம், அதனால் ஆனந்தம் எற்படுவதில்லை, பயம்தான் ஏற்படுகிறது. எந்த சம்பவ மும், விபத்தும் அபாயமும் நிகழலாம் என்று அஞ்சுகிறாய்.

புகழ் சம்பாதிக்கலாம். அதுவும் ஆனந்தம் தருவதில்லை. பெயரும் புகழும் கூடத்தற்காலிகமானவை. உனக்குக் கிடைக்கும் பட்டமும் தற்காலிகமானது. இங்கு கிடைக்கும் பட்டம் எதுவும் நிலையான தல்ல. அமரத்துவத்தின் புதல்வர்கள் என்பதுதான் (அமிர்தஸ்ய புத்ரா) உங்களுக்குக் கிடைக்க வேண்டிய உண்மையான பட்டம்.

(சா.அ. கோ.1999 ப. 138)

08. *புருஷ - பிரகிருதி பாவம்?*

ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் போது இணையில்லாத பேரானந்தம் ஏற்படுகிறது. ஓவியனுக்கு ஜீவாத்மாவையும் பரமாத் மாவையும் படம் வரையத்தெரியாது. ஆகையால் ஜீவாத்மாவை ராதையாகவும் பரமாத்மாவை கிருஷ்ணனாகவும் உருவம் செய்து படமாக எழுதியிருக்கிறான்.

(த ச சா மச 94-ப-14)

| |
|---|
| இந்த உலகில் எல்லாமே நிலையற்றது.<br>தெய்வீகம் மட்டுமே நிலையானது.<br>தெய்வீகத்துடன் கூடியிருந்தால் மட்டுமே உனது உணர்வுகள் உயர்ந்தனவையாகவும் தூய்மையாகவும் உண்டாகும். - பாபா |

# 12 மதங்கள்

01. எல்லா மதங்களினதும் சாராம்சம் ஒன்றே. இந்த உண்மையை யாருமே புரிந்து கொள்வதில்லை. மதங்கள் வேறு வேறானவை என்று கருதிக்கொண்டு வாதப் பிரதிவாதம் செய்கிறார்கள்.

ஒரு கிணற்றில் ஒரு தவளை பல ஆண்டுகள் வசித்து வந்தது. வெள்ளம் காரணமாக கடலில் இருந்த தவளை தற்செயலாக கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அந்த தவளை கிணற்றைக் கண்டு இந்த இடம் குறுகலாக இருக்கின்றது என்று நினைத்தது. ஆனால் கிணற்றுத் தவளையோ கிணற்றையே கடலெனக் கருதி மிகுந்த மகிழ்ச்சியுடன் இங்கும் அங்கும் தாவிக் குதித்தது. கடல் தவளை கிணற்றைச் சிறிதாகக் கருதியது. கிணற்றுத் தவளையோ கிணற் றையே பெரிதாகக் கருதியது.

இந்துக்கள் இந்து சமயம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு அதுவே மிகவும் பெரியது என்று கர்வம் கொள்ளுகிறார்கள்.கிறி ஸ்தவர்கள் கிறிஸ்தவம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு அதுவே பெரிது என்று கர்வம் கொள்கிறார்கள். முகமதியர்கள் இஸ்லாம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு அதுவே பெரியது என்ற கர்வம் கொள்கின்றனர்.

ஜொராஷ்டிரர்கள் தமது சமயம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு அதுவே பெரியது என்று கர்வம் கொள்கிறார்கள். ஜைனர்களும், பௌத்தர்களும் கூட கிணற்றுத் தவளைகள் போன்றவர்களே. இவையெல்லாம் உண்மையான வரம்புகள் அல்ல. அளவற்ற ஆற்றலும் விரிவுமே உண்மையான எல்லைக் கோடுகள் கிணற்றுக்குள் வாழ்வது போதாது. இதை விளக்க ஒரு கதை. ஒருவன் ஐந்து குருடர்களைக் கூட்டிக் கொண்டு வந்தான். ஐந்து குருடர்களையும் யானையைத் தெரிந்து கொள்ளும்படி கூறினான். ஒருவன் அதன் காலைத் தடவிப்பார்த்து யானை ஒரு தூண் என்றான். அடுத்தவன் அதன் வயிற்றைத் தடவிப்பார்த்து யானை ஒரு பெரிய சுவர் என்றான். மற்றவன் அதன் காதை தடவிப் பார்த்து யானை ஒரு முறம் என்றான். ஒவ்வொருவனும் தான் அறிந்த அளவுக்கு (அறிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு) யானையை பற்றி கூறியது உண்மையே. அந்த அளவான அறிவு

முழு உண்மையல்ல. அனைத்தையும் ஒன்றிணைத்து முழுமையாகப் புரிந்து கொள்ளு தலே முழு உண்மை. அனைத்து சமயங்களையும் ஒன்றிணைத்து அறிவதே உண்மையான மதம்.

அனைத்து மதங்களிற்கும் இலட்சியம் ஒன்றே. சிறு சிறு வேறுபாடு களை மனத்தில் கொண்டு நம் வாழ்க்கையை நாம் பாழாக்கி கொள்ளல் ஆகாது. வரம்புகளால் கட்டுப்பட்டதை நாம் பின்பற்றுகி றோம். ஆனால் இறைவன் எல்லை அற்றவர் இத்தகைய அளவற்ற தெய்வத்திடம் முழு நம்பிக்கை கொள்ளவேண்டும். அனைத்துச் சமயங்களும் பல்வேறு வழிபாட்டு முறைகளாகும். அனைத்துச் சமயங்களும் இலட்சிய வாழ்வினை போதித்து சிறந்த உண்மை களைக் கற்பிக்கின்றன.

(த.ச.சா.பெப்ரவரி 1998-ப.26)

02. எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன. இந்த உண்மை யைப் புத்திசாலித்தனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். மனங்கள் தூய்மையாய் இருப்பின் மதம் எப்படிக் கெடுதலாய் இருக்கும். எவராவது எந்த மதத்தையாவது தூஷித்தால் அவர்களது மனங் கள் தீமையானவை எனப் புரிந்துகொள்ளுங்கள்.

(த.ச.சா.ஜுலை 1998.ப.10)

03. மதங்கள் அனைத்துமே வரவேற்கத்தக்கவை. அவை மனிதர்களை நல்லவழியில் கொண்டுசெல்லும் முயற்சிகளாகும். ஒவ்வொன்றும் நல்ல செயல்கள் மூலம் மனதை தூய்மைப்படுத்தி ஞானத்தை வெல்லவே கற்றுக்கொடுக்கிறது. சகல மதங்களின் அடிப்படை விதை வேதாந்தங்களின் சனாதன தர்மத்தில் இருக்கிறது. இந்த தர்மம் தெய்வீகத்தை அடையக்கூடிய ஒவ்வொரு பாதையையும் ஆராய்ந்து யார். யாருக்கு எந்தப்பாதை உகந்ததென்று வகுத்து வைத்திருக்கின்றது வேததர்மம். தான் மூதாதையர். பௌத்தம் மகன். கிறிஸ்த்தவமதம் பேரன். இஸ்லாம் கொள்ளுப்பேரன். இவர்க ளிடையே ஏதும் மனத்தாங்கல் ஏற்பட்டால் அது வெறும் குடும் பப்பூசல்தான். அவர்கள் எல்லோருக்கும் பொதுவான பூர்வீக சொத்து ஒன்றுதான். (தெய்வீகம்)

(சாயிபாபா நம்மிடையே ஒரு அவதாரம் -மபெட் ப.190)

04. மதக்கோட்பாடுகளுக்குள் பிறப்பது நல்லதுதான். ஆனால் அவற்றி னுள்ளேயே இறப்பது நல்லதல்ல. கோட்பாடுகள், சட்டங்கள், குறுகிய ஆசாரங்கள் இவற்றில் இருந்து வளரப்பழகிக் கொள்ளுங் கள். சுதந்தரமாகச் சிந்திக்கப் பழகிக்கொள்ளுங்கள். கோட்பாடு களின் அவசியம் இல்லாத ஓர் உன்னத நிலையை நீங்கள் அடைய வேண்டும். அங்கிருந்து தான் எல்லாப் பாதைகளும் பிற க்கின்றன. அங்கேதான் முடிகின்றன.

(சா.ந.ஓர் அவதாரம் -ப. 218)

05. துதிக்கும் முறையோ, போற்றிப்பணியும் முறையோ இறைவனை அழைக்கும் முறையோ வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் சமயங் கள் அனைத்தும் ஒரே குறிக்கோளை, ஒரே பரம்பொருளை நாடிச் செல்கின்றன.

இந்து, கிறிஸ்த்தவர், முகமதியர்,பார்சியர்,பௌத்தர்கள் என்ற வேறுபாடுகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தினால் கர்வம், இகழ்ச்சி, மதிப்பு, அவதூறு ஆகியவைகள் வளரும்.

ஆயினும் (மனிதன்) உடலை விடுத்து தெய்வீகத்தை அடைய எடுக்கும் முயற்சிகளில் மனத்தை ஒரு முகப்படுத்துவீகளேயானால் சமயங்கள் என்ற முத்திரை முக்கியமற்றது என்பதை புரிந்து கொள்வீர்கள்.அதன் பின் அன்பும் ஒத்துழைப்பும் ஒருவர்க்கொருவர் ஆதரவளித்தல்,மதிப்பளித்தல் ஆகியவையே மேலோங்கி நிற்கும்.

வேற்றுமைகளையும் வித்தியாசங்களையும் வற்புறுத்திக் கூறாதீர் கள். ஒற்றுமையை வலியுறுத்துங்கள். பல சமயங்களின் சின்னங் களும் சமய சடங்குகளும் ஒழுங்கு முறைகளும் குறிக்கும் ஆழ்ந்த உட்கருத்துக்களையும் நடைமுறைச் சிறப்புக்களையும் ஊன்றிப் பாருங்கள்.

(7.1.68.கம்பாலாவில்
சாயி மார்க்கம் - ஆனி1995)

அனைவரும் இறைவன் குடிகொள்ளும் கோயில்கள் யாரைக் கண்டாலும் அவரது உடல் தேவாலயம் என்று வணங்க வேண்டும்.

## 13 திருவுருவங்கள் உணர்த்துவது யாது?

1. கடவுளின் பாதையில் நடக்கும்படி மனித இனத்தை அழைக்கும் குரல்கள் காலம் காலமாக எதிரொலித்துக்கொண்டிருக்க, கடவுளின் (தத்துவத்தின்) சுகந்த வாசனை வீசிக்கொண்டிருக்கும் சனாதன தர்மம் செழிக்கும் (பாரத) நாட்டில் பிறப்பதற்கு எத்துணை அதிஷ்டம் செய்திருக்க வேண்டும். இங்கேதான் ஞானிகளும், ரிஷிகளும் தோன்றிக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள மக்களை, கடவுளிடம் இருந்து வேறாக்கும்,அறியாமைத் திரையை அகற்றுவதற்கு எத்தனையோ மார்க்கங்களை சொல்லியுள்ளார்கள். அதன் ஒரு வழிதான் கடவுளை பிரதிநிதித்துவப்படுத்தும் திருவுருவங்களை வழிபடுவது.

ஒரே வழியிலே மட்டும் சிந்திக்கின்ற மதாபிமானிகளால் இது பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது. திரு உருவங்களின் சிறப்பு மிக இலகுவானதும் சுகமாக விளங்கிக்கொள்ளக் கூடியது ஆகும். நீங்கள் ஏதாவது குடிக்க வேண்டுமானால், உதாரணமாக பாலை எடுத்துக்கொள்வோம். அதற்கு ஒரு பாத்திரம் வேண்டும். அப்பொழுது அந்தப் பாத்திரத்தில் அந்தப் பாலை எடுக்க, பால் அந்தப்பாத்திரத்தின் உருவமாகிறது. இலிங்கத்தை திரு உருவமாக எடுத்துக் கொண்டால் அதில் தெய்வீக சக்தி பிரபை, காந்தி, நிறைந்துள்ளதாக உணர்கிறீர்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் திரு உருவத்தை வணங்கும் பொழுது தெய்வீகத்தை, தெய்வீகரஸத்தை ஒரு ஆடம்பரமான பாத்திரத்தில் எடுத்து உங்கள் (தெய்வீக) தாகத்தைத் தீர்க்கப் பருகுகிறீர்கள்.

கடவுள் ஆர்வமுள்ளவன். கல்லில் உள்ள பிரதி பிம்பத்தை கடவுளின் நிலைக்கு உயர்த்துகிறான். அவன் கடவுளை கல்லின் நிலைக்கு குறைக்கவில்லை.

திரு உருவம் என்பது
(1) ஒருதெய்வீக பாத்திரம் (Container)
(2) தெய்வீகத்தை ஊட்டிக்கொண்டிருப்பது (Prompter)
(3) தெய்வீகத்தின் அடிப்படை (Base)
(4) தெய்வீகத்தை ஞாபகப்படுத்துவது (Reminder)

அந்தத் திருஉருவத்தில் வந்து ஆரோகணிக்கும்படி (இருந்து கொள்ளும்படி) தெய்வம் ஆராதிக்கப்படுகிறது. எல்லையற்ற ஒன்று ஒரு அற்பமான சிறியதாகக் குறைக்கப்படவில்லை. ஒரு சிறியது எல்லையற்ற ஒன்றின் அடையாளமாக அங்கீகரிக்கப் படுகிறது.

பார்ப்பதில் இருந்து பார்க்கப்படவேண்டிய ஒன்றுக்கு, துளியில் இருந்து எல்லையற்ற சமுத்திரத்திற்கு, வெளிப்படையான ஒன்றில் இருந்து மறைபொருளான ஒன்றிற்கு, இப்படித்தான் திரு உருவ வழிபாடு பக்தனுக்கு உதவி செய்கிறது. உண்மையில் எல்லை யற்ற பரம்பொருளை ஒரு சக்தியாக கருணையின் உருவமாக, ஞானமாக, பேரறிவாக, தூய்மையாக, அதீத பலமாகத் தான் ஒருவனால் புரிந்து கொண்டு உருவகப்படுத்த முடியும். இந்தக் குணங்கள் அவனுடைய உணர்வில் ஊடுருவி, சூரியன், தாமரை, சமுத்திரம், அலைகள் என்று உருப்படியான அனுபவமாக முடியும்.

இறைவனின் நாமம் என்பது சொல்லக்கூடிய உருவம். திரு உருவம். பார்க்க கூடிய (கிரகித்துக் கொள்ளக் கூடிய) ஒரு அடிப்படை. ஒரு சிறிய விதை ஒரு பெரிய ஆலமரத்தை உள்ளடக்கி இரு க்கிறது. லிங்கம் என்பது வெளிப்படையாகக் கூடியதை மட்டுமல்ல, வெளிப்படையான பிரபஞ்சத்தையும் அதன் சிருஷ்டி கர்த்தாவை யும் உள்ளடக்கியுள்ளது. அது தான் அவர் சங்கற்பம்.

நாக்கினால் நாமம் உச்சரிக்கப்பட்டதும் திரு உருவம் மனதினால் வணங்கப்படுகிறது. இது ஒரு நாளாந்த யந்திர வழிபாடகக் குறைந் து விடக் கூடாது, நாமத்தின் கருத்தும், திரு உருவத்தின் சிறப்பும், உள்ளடக்கமும் ஊனாய், உயிராய், உணர்வாய் உட்புக வேண்டும். வழக்கமாக, ஒரு கிரமமாகச் செய்யும் வழிபாட்டிலிருந்து மேம்பட்டு விடுங்கள். வழிபாட்டில் உண்மையாகவே ஆழமாக உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். மனித முயற்சிகளும்,பிரயத்தனங்களும் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய அமைதிக்கும் திருப்திக்கும் இதுதான் வழி. பருத்தி மரத்துக்கான விதையை நடுவதன் மூலம் நீங்கள் எப்படி மாம்பழங்களை எதிர்பார்க்க முடியும்?

இப்பொழுதே செய்யுங்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படை

யான இந்தப் பிரச்சினையின் உடனடித் தேவை இது தான். இன்று இப்பொழுது பசியாக இருந்தால் நாளை சாப்பிடலாம் என்று இருக்கமாட்டீர்கள். நாளைக்கு பட்டினியாக இருக்க வேண்டுமே என்று இன்றைக்குச் சாப்பிடமாட்டீர்கள். முன்போ, பின்போ அல்ல. பசிக்கும் போது சாப்பிடுங்கள். இப்பொழுது வணங்குங்கள். இப்பொழுது அடைந்து விடுங்கள்.

S.SSvol vii B.1st chapter

02. இறைவன் அருவமா? உருவமா? அருவுருவமா?

சகுணம், நிர்க்குணம், சாகாரம், நிராகாரம் இவை உருவமுள்ளதையும், உருவமற்றதையும் குறிப்பிடுகின்றன. எது உருவமுள்ளது? எது உருவமற்றது? இங்கே தண்ணீர் இருக்கிறது. இதன் வடிவம் என்ன? தண்ணீர் என்பது பெயர் தானே தவிர அதற்கு வடிவமில்லை. தண்ணீர் பனிக்கட்டியாகும் பொழுது அதற்கு உருவம் கிடைக்கின்றது. ஆனால் பனிக்கட்டியிலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளியும் உருவமற்றது. ஒவ்வொரு உருவத்திலும் உருவமற்றது அடங்கியிருக்கிறது. சிலர் எனக்கு உருவமற்றதில் உடன்பாடு இல்லை எனக் கூறுவார்கள். மற்றும் ஒரு சிலர் உருவத்தினை அடிப்படையாகக் கொண்டு பேசுவர். இதெல்லாம் அஞ்ஞானம் உருவமற்றதும் உருவமுள்ளதும் இரண்டும் ஒன்றே. உருவமற்ற நீர்த் துளியிலிருந்து உருவமுள்ள ஐஸ்கட்டி உருவானது எப்படி?

வேதாந்தம் அதன் ஆன்மீக உள்ளர்த்தத்தைத் தெளிவாக சொல்கின்றது. எத்தனையோ ஆன்மீக போதனையாளர்கள் தொலைக்காட்சிகளிலும் ரேடியோவிலும் எவ்வளவோ எடுத்துச் சொல்கின்றனர். சத்யம் என்றால் என்ன? நியாயம் என்றால் என்ன? என்றெல்லாம் விளக்குகின்றனர். இவை அனைத்தும் வெறும் புத்தக அறிவுதர்ன். நடைமுறை அறிவாக மாற வேண்டும். அப்போது வடிவமும் மாறும்.

ஒரு சிறிய உதாரணம் சமுத்திர ஜலம் உப்பானது.ஆனால் சூரிய வெளிச்சத்தால் ஆவியாகிறது. உப்புச் சத்துக் காணப்படுவதில்லை. பிறகு அது மேகமாக மாறுகிறது. பின்னர் மேகமே மழைத்துளியாக மாறி கீழ் இறங்குகிறது.

மழை நீர் தூய்மையானது. சுவையானது. இது எப்படி? இத்தகைய மதுரமும் தூய்மையும் சமுத்திர நீரில் உண்டா?அதே விதமாக அனுக்கிரகம் என்ற சாகரத்தில் பகவானின் அருள் என்ற சூரியக் கதிர்கள் பட்டு மனதில் இனிமை எழுந்து அமைதி நிலவுகிறது.

(த ச சா 1997 - ஏப்பிரல் ப 18)

03. (சுவாமி) இறைவன் உருவமா? அருவமா? இதனை விளக்க வேண்டும்? (சுவாமி) இங்கு தான் பலர் எண்ணம் தவறாக உள்ளது. உருவம் இல்லாமல் உருவம் அல்லாமை எப்படி வரும்? இறைவனை உருவமற்றவராக உன்னால் எப்படி நினைக்க முடிகிறது. உனக்கு ஒரு உருவம் உண்டல்லவா? எனவே நீ ஒரு உருவத்துடன் தான் வழிபடவேண்டும். ஒரு மீன் கடவுளை வழிபடுவதால் உருவத்தில் மிகப் பெரிய மீன் ஒன்றையே கடவுளாக பாவனை செய்யமுடியும். எருமை கூட தன் கடவுளை தன்னை விட தோற்றத்தில் பெருத்த இன்னொரு எருமை வடிவத்தில் தான் பார்க்கும் அதே போல் மனிதனும் தான் வணங்கும் கடவுளை மனித உருவத்தில் தான் வழிபட வேண்டும். உண்மையில் நிராகார (உருவமற்ற) வழிபாடு நராகார (உருவ) வழிபாட்டிலிருந்துதான் தோன்றியது. நராகாரம் இல்லாமல் நிராகாரம் என்பதே கிடையாது.

உ+ம் :- நீ இப்போது சுவாமியுடன் இந்த அறையில் இருந்து பேசிக் கொண்டு இருக்கிறாய். இது உனக்கு நராகார அனுபவம். இந்த அனுபவத்தை, காட்சியை உனது மனத்திரையில் போட்டுப் பார்க்கிறாய். இப்போது அந்தக் காட்சிதான் நிராகாரம் என்பது.

மற்றொரு உ+ம் நீ பால் அருந்த வேண்டுமனால் அதை ஒரு கோப்பையில் எடுத்துத் தான் அருந்துவாய். அதே போல் பகவானின் அருளைப் பெறுவதற்கு "உருவம்" என்ற கோப்பை அவசியமாகின்றது.

(சத்ய உபநிடதம் கேள்வி 32 ப 25)

04. உருவம் சுட்டிக் காட்டுவது?

கண்ணற்ற ஒருவனுக்கு ஒரு சிறு குழந்தை தாய் வேலையாக இருக்கிறாள். வெளியே செல்லும் போது பாலைக் காய்ச்சி ஒரு

போத்தலிலிட்டு வைத்து விட்டு கணவனிடம் "குழந்தை தூங்குகி றது எழுந்தவுடன் பாலைக் கொடுங்கள் என்றாள்.

கணவன் கண்ணில்லாதவன் என்பதால் பால் என்றால் என்ன? என்று கேட்டான். வெளுப்பாக இருக்குமே அது என்றாள் மனைவி. வெளுப்பு என்றால்------? (குருட்டுக் கணவன் கேட்டான்) கொக்கு மாதிரி வெளுப்பு---கொக்கு எப்படி இருக்கும்? (அவனுக்கு கொக் கையும் தெரியாது) மனைவி கொக்கை வருணிக்க கையை வளை த்துக் காட்டினாள். கணவன் (அபிநயிககும் வளைந்த) கையைத் தடவிப்பார்த்து விட்டு ஐயோ இவ்வளவு பெரிய பொருளை குழந் தைக்கு எப்படிக் கொடுப்பது அதற்கு என்ன ஆகும் என்றான். பாலென்றால் என்ன என்று தெரியாதவனுக்கு எதைச் சொன்னால் விளங்கும். அது போல கடவுள் என்பது எப்படி என்று புரியாத வனுக்கு எத்தனை சொன்னாலும் புரியுமா?

கடவுள் ஆனந்த மயமானவர் சத் சித் ஆனந்த வடிவம் நிரந்தரமான ஆனந்தம். எந்த வடிவமும் எடுக்கக்கூடியவர். இப்படி அப்படி என யாரும் நிர்ணயித்துக் கூறமுடியாதவர். ஆகையால் தெய்வத்தை நாம் விடாது சிந்திக்க வேண்டும். இதன் மூலம் தான் தெய்வத்தை அனுபவிக்க முடியும். இதை விட வேறு வழி இல்லை.

(த ச சா ஜுலை 95-ப 7)

05. எது நிரந்தரம்? கிருஷ்ணன்,அல்லா,ஜொராஷ்டிரா எல்லாம் ஒன்று தான் யே - ஒன்று, சு - நல்லது, (good) நல்லது ஒன்று தான் என்று பொருள் அல்லா-அல்-ஆத்மா லா-லயித்தல் ஆத்மாவுடன் இணை தல் என்று பொருள். இதில் பெயர்களுக்கும் உருவத்திற்கும் முக்கியத்துவம் இல்லை. உருவமும் பெயரும் வெறும் மேகங்கள் உள் உறையும் தெய்வம் தான் நிரந்தரம்.

(த ச சா மே 94- ப 6)

06. யாரையும் எவ்விதமாகவும் வெறுக்கக் கூடாது ஏன்? அனைவரிடமும் பகவானே இருக்கிறார். அனைவரிடமும் தெய்வத் துவமே இருக்கிறது. வெளிநாட்டவர் பாரத நாட்டில் (இந்துக்களிடம்) இத்தனை தெய்வங்களா எனக் கேட்கின்றனர். இல்லை, இருப்பது

ஒரு தெய்வமே, அனேக பெயரிட்டு அனுபவிக்கின்றனர். விலையுயர்ந்த வைரத்திற்குப் பட்டைகள் பலதீட்டப் பளபளப்பு கூடுவது போல அநேக முகங்கள் இருப்பதால் அதிக பளபளப்புடன் காணப்படுகிறது. ஆகவே அனேக பளபளப்பு இருந்தால் பல வைரங்களா? என்றால் இல்லை. ஒரே வைரம்தான். அப்படியே தெய்வத்துவம் என்கிற திவ்வியத்துவம் பலவகையில் ஒளி சிந்திப் பிரகாசிக்கிறது. இங்கு கடவுள் என்பவர் Diamond. இந்த Diamond ஐ நீங்கள் சம்பாதித்துக் கொண்டால் Die-mind உங்கள் வசமாகும். அதாவது உங்கள் மனம் என்ற Factor (காரணி) அழிந்து போகும்.

(த ச சாமார்ச்98-ப-16)

07. முதலில் நாம் அட்சராப்பியாசம் கற்றுக் கொள்ள வேண்டும். A,B,C,D என்ற எழுத்துக்களைக் கற்றுக் கொண்டபின்னர் G-O-D God என்ற சொல்லைக் கற்றுக் கொள்ளலாம். இதன் பிறகு நாம் வாக்கியங்களைக் கற்றுக்கொள்ளலாம். வாக்கியங்களை படிக்க கற்றுக் கொண்ட பிறகு புத்தகம் முழுவதையும் படிக்க இயலும். குழந்தைகளுக்கு அட்சராப்பியாசம் செய்து வைப்பது போல பண்டைய காலச் சான்றோர் மக்களுக்கு கோயில்கள் தீர்த்த யாத்திரை மூலம் தெய்வத்தை (தெய்வீகத்தை தெய்வத்துவத்தை) அறிமுகப்படுத்தினர். அவதார புருஷர்களையும் இவ்வாறே அறிமுகப்படுத்தினர். இவ்வாறு ஆரம்ப சாதகர்களுக்கு புனித எண்ணங்கள் புகுத்தப்பட்டன.

(த ச சா ஆகஸ.2000 ப 20)

* அனைத்து வடிவங்களும் இறைவன் வடிவங்கள் என்று உணர்வாய்.
* ஒவ்வொரு வஸ்துவிலும் தெய்வத்தைப்பார்.
* ஏகாத்ம பாவனையை உள்ளே உணர்ந்து கொள்.
* எந்தப் பொருளுக்கும் கெடுதல் விளைவிக்காதே, அது நீ வணங்கும் கடவுளுக்கே கெடுதல் விளைவித்தாகும்.

-பிர-நவ.2000-ப.76

# 14 நான்

01. ஆத்மாவின் (தெய்வீகத்தின்) முதற்பெயர் நான். வேதங்கள் கூறுகின்றன அஹம் பிரம்மாஸ்மி (நானே ப்ரம்மன்). இந்த நான் தான் இறைவனின் முழுப்பெயர். இந்த நானைப் புரிந்து கொள்ள சத்தியத்தின் பாதையில் தொடர்ந்தால்தான் முடியும்.

(த ச சா ஜன 99-ப-18)

**நான் யார்?**

02. இன்றைய திகதியில் உலகின் மக்கள் தொகை 550 கோடி. ஆனால் அனைவரிடமும் உள்ள நான் என்ற தத்துவம் மட்டும் ஒன்றே. ஒவ்வொருவரும் ஆணானாலும் பெண்ணானாலும் தன்னை நான் என்றே அழைத்துக் கொள்கின்றனர். இந்த 550 கோடி மக்களை எப்படி தெரிந்து கொள்வது? ஒரு முறை இந்த நான் தத்துவத்தை புரிந்த கொண்டால் நீங்கள் அனைவரையும் புரிந்து கொண்டவர்கள் ஆவீர்கள். இங்கு நிறைய பல்புக்கள் ஒளிர்வதைக் காணலாம். ஒரே மின்சாரம் தான் அனைத்திலும் பாய்கின்றது. அதைப் போல நான் தத்துவம் எல்லோரிடமும் ஒன்றுதான்.

நீங்கள் யார் எனக் கேட்பதை விட்டுவிட்டு இனிமேல் "நான் யார்" எனக்கேட்டுக் கொள்ளுங்கள். முதலில் உங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு அனைவரையும் உங்களால் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த உலகில் சச்சரவுகளுக்கும் போராட்டங்களுக்கும் காரணம் என்ன? அனைவரிடமும் இருக்கும் ஒருமைத் தன்மையைப் புரிந்து கொள்ள இயலாதது தான் முக்கியமான காரணம்.

இந்த ஒருமைத் தன்மை புரிந்து கொள்ளப்பட்டால் அமைதியும் பாதுகாப்பும் அங்கே நிச்சயம் உயர்ந்த நிலையில் விளங்கும். அதைப்போலவே கடவுளும் பக்தனும் வேறு வேறானவர்கள் அல்ல. யார் வழிபாடு செய்கிறாரோ, யார் வழிபடப்படுகிறாரோ இருவருமே ஒன்றுதான். கடவுளை வழிபாடு செய்யும் பக்தன் தன்னையே ஆராதித்துக் கொள்கிறான்.

ஏஹாத்மா சர்வபூத அந்தராத்மா. (ஒரே ஆத்மாதான் (தெய்வீகம்தான்) அனைவருள்ளும் உறைகிறது). இந்த ஒருமைத் தன்மைதான் பிரமன்.இந்த ஒருமையைப் பலவாறாகக் காண்பது வெறும் பிரமை. (மயக்கம்) இந்தப் பிரமைதான் உலகில் இருக்கும் அனைத்துப் பதட்டங்களுக்கும் காரணம். உண்மையான ஆன்மீக சாதனை என்பது இந்த ஒருமைத்தன்மையை வளர்த்துக் கொள்வது தான்.

அத்வைத தர்சனம் ஞானம் (ஒருமைத் தன்மையை அனுபவிப்பது தான் ஞானம்) ஒன்று தான் இருக்கிறது. அதற்கு இரண்டாவது வேறில்லை. அத்துடன் ஒன்று என்ற எண்ணைச் சேர்க்க அதன் மதிப்புக் கூடுகிறது.

அதற்குப் பதில் I என்கிற நானுடன் கோடிமுறை நான் சேர்ந்தாலும் அது மாறாமல் நானாகவே (I ஆகவே) இருக்கிறது. ***அந்த நான் தான் தெய்வீகம். இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் எல்லோரும் தெய்வீகத்தின் வடிவங்கள் என்பதை உணர் வீர்கள்.***

(த.ச.சா செப்டம்பர் 99 ப 9)

03. நீ யார்?

நீ யார் என்று கேட்கும் போது நான் பாரதீயன் என்று ஒருவர் சொல்கிறார். இது சரியான பதிலல்ல. நீ பாரத தேசத்தில் இருக்கி றாய். அது உன் நாடு. நீ குடியிருக்கும் நாட்டை நீதான் என்று எப்படிச் சொல்வாய்? நீ யார் என்ற கேள்விக்கு மற்றொருவர் நான் இன்ஜினியர், நான் டாக்டர் என்று கூறுவர். இதுவும் சரியான பதில் அல்ல. இன்ஜினியர், டாக்டர் என்பதெல்லாம் அவரவர் தொழில். படிப்பிற்குப் பிறகு மேற்கொண்ட தொழில். நீ எப்படி அந்தத் தொழிலாவாய்?. இது தவறு.

நீ யார் என்ற கேள்விக்கு வேறு சிலர் இந்த விதமாகப் பகர்வர். நான் ராமராவ், நான் வெங்கடேஸ்வரராவ் என்பர். இதுகூடச் சரியான பதில் இல்லை. ஏனெனில் இவையெல்லாம் நீ உனக்கு வைத்துக் கொண்டுள்ள பெயர்கள். பிறக்கும் போது எந்தப் பெயர்ப்பலகை யையும் வைத்துக்கொண்டு நீ பிறக்கவில்லை. எந்தப் பெயரானாலும் நீ அதை மாற்றிக்கொள்ளலாம். ராமராவ், வெங்கடேஸ்வரராவ் எல்லாம் உனக்கு உன் பெற்றோர் வைத்த பெயர்கள். எனவே அந்தப் பெயராக எப்படி நீ ஆவாய்? அது உன்னுடைய பெயர் தான். ஆனால் நீ வேறு உன் பெயர் வேறு.

நீ யார் என்ற கேள்விக்கு மற்றும் சிலர் இப்படிச் சொல்வர். நான் வாலிபன். நான் வயோதிபன் என்பர். இது கூடச் சரியான பதில் இல்லை. ஜாக்கிரதையாகக் கவனி! இன்று சிறுவனாக இருப்பவன், கொஞசக்காலம் கழித்து தந்தையாகிறான்.அதன்பிறகு கொஞ்சக் காலம் கழித்து தாத்தாவாகிறான். ஒரே மனிதன் காலச் சுழற்சியின் காரணமாக இத்தனை மாற்றங்களை அடைகிறான்.இன்னும் சிலர் நான் ஒல்லியாக இருக்கிறேன்,குண்டாக இருக்கிறேன், உயரமாக இருக்கிறேன்,கட்டையாக இருக்கிறேன் என்று தன் உடலோடு

ஐக்கியப்படுத்திக் கூறுவர். இந்தப்பதிலும் சரியல்ல.அதனால் நீ உடலல்ல, இந்த உடல்தான் உன்னுடையது, ஏனெனில் இந்த உடல் உனது கனவு நிலையில் இல்லை. அங்கே உன்னை சிருஷ்டி செய்தது. அப்போது நீ எப்படி இந்த உடலாவாய்? இது தவறான பதில்.

வேறு சிலர் நீ யார் என்ற கேள்விக்கு இந்த மனமே நான் என்பர். மனம் நீ அல்ல. மனம் உன்னுடையது. மனம்தான் நீ என்று உடம்புடன் வாழ்க்கை நடாத்துவது அகம்பாவம், (EGO) மனம் எக்காலத்திலும் இருக்காது. ஆழ்ந்த உறக்க நிலையில் (சுஷுப்தி) இந்த மனம் எங்கே போயிற்று? நீ மனம் ஆனால் இந்த உடலைப் படுக்கையில் கிடத்திவிட்டு எங்கு போவாய்? ஆகவே நீ மனமில்லை போகட்டும். (intellect) புத்தி நான் தான் என்று நினைக்கலாம். அதுவும் தவறானது. ஏனென்றால் புத்தி என்பது பகுத்தறியும் தன்மை (வீதீக்ஷணா சக்தி) உடையது. (Sense of Discrimination) புத்தியென்பது இறைவன் மனிதனுக்களித்த ஒரு பகுத்தறிவுக் கருவி (உடல் மனம் போல). ஆனால் இது நிலையற்றது. இந்தப் புத்தி சில சமயங்களில் ஏதேச்சையாக (Individual Discrimination) முடிவெடுக்கிறது. இதே புத்தி மற்ற சமயங்களில் பொது நோக்குடன் (Universal) செயல்படுகிறது. ஒரு கால் நீ இந்தப் புத்தி என்று நினைத்தால் (சுஷுப்தி) ஆழ்ந்த உறக்கநிலையில் அங்கு புத்தியில்லை. அந்த நிலையில் ஆய்ந்து முடிவுகள் எடுப்பதற்கு விஷயம் ஏதுமில்லை. புத்திதான் நீ என்றால் அந்த ஆழ்ந்த உறக்க நிலையில் நீ எங்கு போனாய். எனவே நீ புத்தியென்பதல்ல, அது உன்னுடையது.

உடல் மனம் புத்தி (மற்றும் அவயவங்கள்) இவை நீயல்ல. எனவே நீ யார் என்ற கேள்விக்கு எஞ்சியிருக்கும் பதில் என்ன? சரியான விடை எது? அதுதான் நான் ஆன்மா (தெய்வீகம்) இது சாட்சி பூர்வமானது. அனுபவ பூர்வமாக எஞ்சியிருப்பது. சர்வகால அவஸ்தைகளிலும் இருப்பது. அதாவது ஜாக்ரத (விழிப்பு) ஸ்வப்ன (கனவு) சுஷுப்தி (ஆழ்ந்த உறக்கம்) எந்த நாட்டில் இருப்பினும் எந்த நிலையில் இருப்பினும் எந்தத் தொழில் செய்தாலும் எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் இருப்பது ஒன்றே. அதுவே ஆன்மா. **அதனால் நீ யார் என்ற கேள்விக்கு நான் ஆத்மா (தெய்வீகம்) என்பதே சரியான பதில். இதே மார்க்கம் தான் தத்துவ விசாரணை என்றும் சொல்வர். இதுதான் ஆன்மீகம்.**

(சத்திய உபநிடதம் கேள்வி 48 பக்கம் 38)

# 15 மனிதன்

01. உடல் மனம் ஆத்மா மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவன் மனிதன். இந்த மூன்றின் (அதாவது) உடல், மனம், ஆத்மா ஒருமைப்பாடே மானவத்துவம் (humanness). தெய்வீகத்திற் குச் செல்வதென்றால் மிருகக்குணங்களையும் அரக்க குணங்க ளையும் விரட்டி அடிக்க வேண்டும்.

(த.ச.சா. ஓக் 1995 ப 9)

02. நீ ஒருவனல்ல மூன்று நபர்கள்.
The one you think you are.
நீ யாரென்று நினைக்கிறாயோ அது -உடல்.
The one others think you are.
மற்றவர்கள் உன்னை யாரென்று நினைக்கிறாகளோ அது-மனம்.
The one you really are.
உண்மையில் நீ யாரோ அது - ஆத்மா - தெய்வீகம்.

(சாயி அருளமுதம் 1998-7)

03. உடல் மட்டும் பிரதானமாக எண்ணிச் செயல்படுவதுதான் மிருக குணம். மனதை மட்டும் பின்பற்றுவது அரக்க குணம் ஆத்மாவை அனுசரித்து நடந்து கொள்வது தான் தெய்வத்துவம்.ஒவ்வொருவரும் தன்னைக் கேட்டுக் கொள்ளலாம், நான் மிருகமா?அரக்கனா? அன்றி தெய்வமா? என்று. நான் உடலைப் பினபற்றுகிறேனா? மனதைப் பின்பற்றுகிறேனா? அல்லது ஆன்மாவை பின்பற்றுகிறேனா? என்று கேட்டுக் கொள்ளலாம்.

(த.ச.சா செப் 95-ப17)

04. மனிதன் உடலை வெறும் கருவியாக மட்டுமே கருதுகிறான்.இது சரியல்ல. எல்லா விதங்களிலும் மனிதனுக்கு இலட்சியங்களை அறிவுறுத்தவே இவ்வுடல் ஏற்பட்டது. அத்தகைய இலட்சியங்கள் எவை? ஒவ்வொரு நாளும் இவ்வுடலை கவனத்துடன் பரிசோதித் தால் உடல் உள்ளே பரிசுத்தமான பிராணவாயுவை இழுத்துக் கொள்கிறது. கரியமில வாயுவை வெளியே அனுப்புகிறது. இவ்வுடல் புனிதமானது. இனிமையான பொருட்களை உள்ளே செலுத்திக்கொள்கிறது. துர்நாற்றம் தரும் கெட்ட பொருட்களை வெளியே அனுப்புகிறது.

இத்தகைய செயல்முறையின் உட்சிறப்பு என்ன?
உலகத்தின் நன்மைக்காக, சமுதாயத்தின் மகிழ்ச்சிக்காக மனிதன் நல்லவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ளவேண்டும். நாட்டுக்கு துன்பம் கொந்தளிப்பு இடைஞ்சல் தருவது எதுவாயினும் அதனை விலக்க வேண்டும். புனிதமான இவ்வுடலை பெற்ற மனிதன் மனித சமுதா யத்தின் நன்மைக்காக இவ்வாறுதான் நடந்து கொள்ளவேண்டும் என்பதை உடல் அதன் செயல் மூலம் விளக்குகின்றது.

நாம் உயர்ந்த நல்ல பா (BHA) வனைகளை உள்ளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.(ஸோ ---- ஹம்) உபாசனையும் இதையே கொண்டிருக்கிறது. புனிதமற்ற நிரந்தரமில்லாத எண்ணங்களை விலக்கவேண்டும். இத்தகைய புனித வாழ்க்கையினை மனிதன் வாழும்போது உடலும் இந்த இலட்சியத்தை செயல்முறைப்படுத்தி ஆரோக்கியமுள்ளதாகவும் வலுவுள்ளதாகவும் இருக்கும்.

இத்தகைய செயல்கள் புரிவதையும், நல்ல எண்ணங்களை வைத் துக் கொள்வதையும் நாடு முழுவதும் அறியும் வண்ணம் பரப்ப வேண்டும். ஆனால் இக்காலத்தில் மனிதன் புனிதமற்ற சுயநல எண்ணங்களையே வளர்த்துக் கொள்கிறான். அவன் நித்தியமான, புனிதமான, தூய்மையான, எண்ணங்களைக் கைவிட்டுவிட்டான்.

அழுகிய பழத்தை உண்பாயா?
கனிந்த இனிப்பான பழத்தை தூக்கி எறிவாயா?
பிராணவாயுவை வெளியே அனுப்பி கரியமிலவாயுவை உள்ளே செலுத்துகிறாயா? இல்லை. இவ்விதம் செய்தால் ஆரோக்கியம் கெடுவதுடன் உனது உயிரையும் இழப்பாய்.

மனிதன் உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத்தையும் ஆன்மீக ஆனந்தத்தையும் பெற வேண்டும். மனித வாழ்க்கை உடல், மனம், ஆன்மா (தெய்வீகம்) இவை கலந்த ஒன்று.

உடல் செயல் புரிகிறது.
மனம் சிந்திக்கிறது.
ஆத்மா சாட்சியாகத் துலங்குகிறது.

இவை மூன்றும் ஒன்று சேரும் போது மனித வாழ்க்கை உன்னத மடைகிறது. ஒருவரும் இந்த உன்னத இரகசியத்தை அறிய முற் படுவதில்லை.

(த ச சா மே 1999 ப 21)

05. உங்களிடம் கார் இருக்கலாம். ஆனால் உங்களுக்கு கார் ஓட்டத் தெரிந்திருந்தாற் தான் அது பயன்படும். அப்படியில்லை என்றால் அது ஆபத்தாகலாம் இது போல ஒரு காருடன் ஒப்பிடக்கூடிய உடம்பையும் சரியாக பயன்படுத்த நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இத்தகைய உடம்பைத் தப்பாக பயன்படுத்தக்கூடாது.

(த ச சா பெப்ரவரி2000 ப- 16)

06. ஐந்தூனாம் நர ஜன்ம துர்லபம் (மனிதப் பிறவி கிடைப்பதற்கு அரியது) ஸரீர மாத்யம் கலுதர்ம ஸாதனம் (இந்த தேகத்தின் மூலம் தான் நல்ல செயல்களைச் செய்ய முடியும்). மனித ஆற்ற லைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். வாழ்க்கையின் உயர் நோக் கத்தை அடைய உடலே ஆதாரமாக விளங்குகிறது. மந்திரங்களை ஜபிப்பதன் மூலமும் புனித கடமைகளை ஆற்றுவதன் மூலமும் பிறவி எடுத்த பலனைப் பெறுங்கள்.

(த ச சா மார்ச் 2000 -ப 6)

07. ஹிஸ்லாப் - பௌதிக சரீரம் வேண்டுமென்று எதற்காக விரும்ப வேண்டும்?

ஸாயி - ஹிஸ்லாப் மெக்ஸிகோவிலோ, அல்லது அமெரிக்காவிலோ அல்லது புட்டபர்த்தியிலோ இருக்கிறார். உடல் இல்லாவிடில் அவர் எங்கே இருந்தார் என்பதை எப்படி தெரிந்து கொள்ள முடி யும். ஒரு கல் விழுகிறது. ஈர்ப்பு சக்தியை பார்க்க முடியாது. ஆனால் கல் விழுவதால் அந்த சக்தி இருப்பது தெரிகிறது மனிதனின் உடல் தேவையானதே. ஏனென்றால் பார்க்க முடியாத இறைவனை அவனால் கண்டுகொள்ள முடிகிறது. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் பிரபஞ்ச வெளியில் இருக்கின்றன. அவை ஒரு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டிற்கு ஏற்ப நகர்ந்தும், சுழன்றும் வருகின்றன. அந்த கட்டுப்பாடு ஒரு கணமேனும் தளர்ந்தால் எல் லாமே குலைந்துவிடும். அந்தக் கட்டுப்பாட்டை நிர்வகிப்பது எது? அது காண இயலாத தெய்வீக சக்தி.

ஹிஸ்லாப் - மனித உடல் எடுப்பதில் என்ன விசேஷமாகவும் தன்னிகரில்லாத சிறப்பாகவும் உள்ளது?

ஸாயி - உடலுள் இருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்த உதவுகிறது. இந்த மனித உடல் நிகரில்லாதது, ஏனென்றால் இதில் 80% தெய்வத்துவம் இருக்கிறது. பிராணிகளில் இது 15%.

மனிதன் தன்னை இறைவனுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளும் நிலைக்கு உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் மிருகங்கள் தங்கள் இயற்கை நிலையில் இருந்து என்றும் விடுபடமுடியாது. உதாரண மாக ஒரு பூனைக்கு ஒரு நல்ல தரமான ஆகாரங்கள் கொடுக்கலாம், ஆனால் அது ஒரு சுண்டெலியை கண்டால் அந்தத் தரமான ஆகாரத் தை உண்ணும் போது கூட அதை விட்டுவிட்டு அந்த எலிக்காக ஒடும். ஒரு புலியைப் பழக்க முடியும். ஆனால் தானியங்களால் தயாரிக்கப்பட்ட ஆகாரம் அதற்குத் திருப்தி தராது.

(பகவானிடன் உரையாடல் by Hislop விடயம் 46 ப276)

08. உடல் என்பது நானா? மனமா?

ஏதாவது வலி ஏற்பட்டால் என் கை வலிக்கிறது. என் கைவலிக் கிறது என்கிறாய். My hand எனது கை என்னும் போது நீ எப்ப டிக் கையாக முடியும? my kerchief என்னும் போது நான் வேறு உடல் வேறு என்றாகிறது my mind என்று கூறும் போது mind (மனம்) வேறு நான் வேறு. Then who are you? நீ யார்? இவ்வாறு விசாரித்துப் பார்க்கையில் மனம், புத்தி, சித்தம், அந்தக்கரணம் இவை எல்லாம் வெறும் பொருட்களாகக் காட்சி தருகின்றன.

இவை எல்லாம் என்னுடையவை.
என்னுடைய கருவிகள்.
நானே அவற்றுக்குத் தலைவன்.
Master the mind
Be a master mind

நீ Master ஆக நினைத்தால், be a master mind அப்போது தான் ஏகத்துவமும், திவ்யத்துவமும் புரியத் தொடங்கும் வெறும் பேச் சுக்காக master எனச் சொன்னாலும் மனத்தை அடக்கத் தெரி யாமல் master mind ஆகாமல் இருக்கிறீர்கள். அது தவறு நீங்கள் master mind ஆக வேண்டும். அதுவே நிஜமான சாதனை.

(த ச சா மார்ச் 98 ப 9)

09. நீங்கள் ஜீவத்துவம். உங்கள் நிழல் மாயை. மாயையை வென்று அதை விட்டுவிடவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் எவ்வளவு வேகமாக ஓடினாலும் அது உங்கள் முன் இருக்கும் வரை அதை உங்களால் தாண்டிச் செல்ல முடியாது. மாறாக உங்கள் பார்வையை சூரியனை நோக்கித் திருப்புங்கள், மாயையை வெல்லமுடியும். உங்கள் நிழல் உங்கள் பின்னால் இருந்துவிடும்.

அது போலவே உங்கள் உடல் மனம் உறுப்புக்கள் எல்லாமே மாயை அல்லது நிழலே ஆகும். அவைகளிடமிருந்து நீங்கள் விடுபடமுயன்றால் உங்கள் பார்வையை ஆத்மாவை(தெய்வீகத்தை) நோக்கித் திருப்ப வேண்டும். இவ்வாறு செய்தால் மாயை விலகும்.

(பிருந்தாவனத்தில் கோ.அ.1973 ப.58)

10. ஒரே ஒருவன் (ஆத்மஸ்வரூபன் - தெய்வீகமானவன்) விழிப்புநிலையிலும்(கனவு நிலையிலும், ஆழ்ந்த) உறக்க நிலையிலும் சமாதி நிலையிலும் தான் வெவ்வேறு பெயருடன் வெவ்வேறு உருவத்துடன் இருப்பதாக நினைக்கின்றான். நமது அன்றாட வாழ்க்கையில் சற்றுமாற்றம் என்னவென்றால் வாழ்க்கையில் நான்கு பாத்திரங்களை ஏற்கும் நமக்கு நான்கு பெயர்கள். இந்த நான்கில் ஒன்றிற்கு இருக்கும் உருவத்திற்கும் பெயரிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதாவது விழிப்பு நிலையில் உள்ளதற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, மற்ற மூன்று நிலைகளில் ஏற்படும் விளைவுகளைப் புறக்கணிக்கிறோம்.இந்த நான்கு நிலைகளில் இருப்பது ஆத்மஸ்வரூபமே (தெய்வத்துவமே)

(பிருந்தானத்தில் கோ.அ.ம.1973 ப.63)

11. உங்களுடைய பௌதீக (உடல்) மனோரீதியான ஆன்மீகமான சக்திகளை பாதுகாக்கும்போது நீங்கள் தெய்வீகமாகிவிடுகிறீர்கள். உங்கள் தேகம் நல்ல செயல்களில் ஈடுபட்டு நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ளட்டும். புத்தி தெய்வீகத்துடன் ஐக்கியமாகட்டும். தேகம், மனம், புத்தி ஆகியவை எல்லாம் வெறும் கருவிகளே. இந்தக்கருவிகளை இயங்கச் செய்யும் அந்த (தெய்வீக) தத்துவத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.

(த.ச.சா. ஜன 2000 ப.24)

12. மனிதன் என்பவன் உடல், மனம், ஆத்மா இவற்றின் கூட்டமைப்பாவான்.இவையே அவனிடமுள்ள படித்தரங்களும், அவன் முன்னேறுவதற்கான படிக்கற்களும் ஆகும். அவை மனிதனின் உணர்ச்சிகளைப்(தெய்வீகநிலைக்கு) படிப்படியாக கொண்டு செல்கின்றன.

(த.ச.சா. செப் 1990 - ப.1)

13. Body is like a water bubble - உடம்பு ஒரு நீர்க்குமிழி
Mind is like a mad monkey - மனம் ஒரு விசர்க்குரங்கு
Don't follow the mind - மனதைப்பின்பற்றாதே

Dont follow the body - உடம்பைப்பின்பற்றாதே
Follow the conscience - மனசாட்சியை (தெய்வீகத்தைப்) பின்பற்று.

அது தான் நாம் இன்று செய்ய வேண்டியது. இந்த உடலையும் மனதையும் நம்பிச் செயற்படுவதால்தான் நாம் இத்தனை சிக்கல் களில் வாழ்கிறோம். குரங்குபோன்று அலையும் மனதை பின்பற்று வதால் நாமும் அலைந்து போகிறோம். நன்றாக யோசனை செய்யுங் கள். நேரமெடுத்துக் கொண்டு சிந்தியுங்கள். அவசரப்பட வேண்டாம். மனமே எல்லாவற்றிற்கும் காரணமென்று புரியும். மனமே ஸர்வமும் நமது பற்றுதலிற்கும் விடுதலைக்கும் அதுவே காரணம் எனப் புரிந்துகொள்வீர்கள். அதனால் மனதை சரியான திசையில் திருப்ப வேண்டும்.

இது ஒரு பூட்டு, இது ஒரு சாவி, இதைபூட்டினுள் செலுத்தி Left side திருப்பினால் பூட்டிக்கொள்கிறது Right side திருப்பினால் திறந்து கொள்கிறது. இதில் பூட்டு ஒன்றுதான். ஆனால் சாவியை திருப்பும் விதம் மட்டும் மாறுபடுகின்றது. அதேபோல் நம் இதயம் ஒரு பூட்டு, மனம் ஒரு சாவி, இந்த மனதை இறைவன் பக்கம் திருப்பினால் விடுதலை. உலகத்தின் பக்கம் திருப்பினால் பற்றுதல். மனமே இரண்டிற்கும் மூலகாரணம். மனம் புனிதமான மார்க்கத்தில் செலுத்தப்படவேண்டும். ("மனம் ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ")

(த.ச.சா. ஜனவரி 1996 ப. 6)

14. அர்ஜுனன் கிருஷ்ணனிடம் கேட்டான், மனம் மிகவும் அபாயகர மானது, பலம் வாய்ந்தது, தடுமாற்றம் அடைவது. அதைக்கட்டுப் படுத்துவது எளிதல்ல. கிருஷ்ணன் கூறினான் "பைத்தியக்காரனே இவ்வுலகில் மனதைக் கட்டுப்படுத்துவதைத் தவிர சுலபமானது வேறெதுவுமில்லை. எங்கிருந்து மனம் உதயமாயிற்று. அது எண் ணத்திலிருந்து வெளிவந்தது. நீ கெட்ட எண்ணத்தை நல்ல எண்ண மாக மாற்றினால் மனதின் சேஷ்டையால் நீ துன்பப்படமாட்டாய். நீ உன்னையே கவனித்துப்பார்.

உன்னுடைய ஆத்மாவின் (தெய்வத்தன்மையின்) முழு வடிவந்தான் இந்த முழுமையான பிரபஞ்சம் என்பதில் பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும்.

சா.அ.1993-ப.187

15. பந்தத்துக்கும் பந்தத்திருந்து மீள்வதற்கும் மனமே பொறுப்பு. கடவுளின் பால் மனதைச் செலுத்து. உன் தாயைப்பார். அவளில் கடவுளைக்கண்டு சந்தோஷப்படு. உன் குழந்தையிலும் கடவுளைக்காண முயற்சி செய். உன் கணவனைப்பார் அவரிலும் கடவுளைக் கண்டுகளி. அவர் உன் husband என்பதால் அவரை bend செய்யாதே. எல்லோரிலும் கடவுளைப் பார். யாரை நீ வணங்கினாலும் அது இறைவனையே போய்ச் சேர்கிறது.

அதற்காக நீ அளவுக்கதிகமான வெளி உலகத்தொடர்பை வைத்துக் கொள்ளாதே. ஸ்வாமி கவனித்துக் கொண்டு தானிருக்கிறேன். நிறையப் பேருக்கு வயதோ கூடிக் கொண்டே போகிறது. பல வருடங்களாக அவர்கள் ஸ்வாமியின் அருளுரையைக் கேட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். கேட்டுவிட்டு வெளியே போனதும் பலவித பந்தங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் நாத்திகம் அதிகரிக்கிறது.

(சா.அ.1993-ப40)

16. மனம் என்பது ஒரு விஷப் பாம்பு. அதற்கு இரண்டு குணங்கள் உண்டு.

i) அது எப்போதும் வளைந்து வளைந்து செல்லும். நேரான பாதையில் செல்லாது.

ii) வழியில் கிடைக்கும் எதையும் சட்டென்று பற்றிக் கொள்ளும். மனமும் இதைப் போன்றதே. மனதை அடக்குவது வெகு சுலபம். முயற்சி செய்து பார்த்தும் முடியவில்லை என்று பல பேர் சொல்கிறார்கள்.ஒரு மனிதன் காரோட்டக் கற்றுக்கொள்கிறான். அவனை ரோட்டைப் பார்த்து ஓட்டு. கையை காலை இப்படி பயன்படுத்து எப்போதும் தயார் நிலையில் வைத்துக்கொள் என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஆரம்பத்தில் கை,கால்கள், மனம் எல்லாவற்றையும் ஒரு நிலைப்படுத்தி செயல்படுத்துவது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இடைவிடாத சாதனையால் அவனது பார்வை கை, கால்கள், இயக்கம், மனக்கட்டுப்பாடு இவையெல்லாம் கட்டுக்குள் வந்து விடுகின்றன.

அப்படித்தான் இந்திரியங்களை அடக்கிய பின் காரோட்டுவது சுலபமாகி விடுகிறது. சில சமயம் அவன் காரோட்டிக் கொண்டே பக்கத்திலிருப்பவரிடம் பேசவும் செய்கிறான். அப்படிப்' பேசுவது அவன் கவனத்தைச் சிதறடிப்பதில்லை.

(சா.அ.1993-ப.150)

17. ஆன்மீக சாதனைகள் செய்யப்படுவது எல்லாம் மனதைத் திருப் திப்படுத்தத்தான். மனம் என்பது ஒரு தாமரை மலரைப் போன்றது. வண்டு (அதில் எழும் ஆசைகள்) தேனைச் சுவைக்கும் விதமாக தாமரையில் நுழைந்து அங்கிருக்கும் மகரந்தத்தைப் பருகிறது. இந்தத் தாமரை வாழ்வது அந்த வண்டிற்காகத்தான். இது எப்படிப் புரிகிறது?

இதை இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம். மதுகரன் என்றால் வண்டு இதில் மது என்றால் ஜலம், கர என்பது சூரிய வெளிச்சம். கீழே தண்ணீரும் மேலே சூரிய வெளிச்சமும் இருப்ப தால்தான் தாமரை உயிர் வாழ்கிறது.

அதேபோல் மனம் ஒரு தாமரை. இதில் எழும் ஆசைகள் பிரமைகள் எல்லாம் வண்டிற்கு ஒப்பிடலாம். இந்த ஆசைகள் இன்பத்துக்கும் துன்பத்திற்கும் காரணம். மனதின் ஆசைகளைப்பற்றிக் கொண்டு அவற்றால் அவதியுறக்கூடாது. மனதைப் பின்பற்றிப் போனால் மாயையில் விழ வேண்டி வரும்.

மனதை ஆதாரமாகக் கொண்டு வாழும் மனிதன் வண்டை விட மோசமாகத் தன் வாழ்க்கையைப் பாதித்துக் கொள்வான். தன் மனச்சாட்சியையும் புத்தியையும் துணை கொண்டு வாழ்பவன் (தெய்வீகத்தை) இந்த உலகிலேயே தெய்வமாக மாற்றமடைவான்.

ஆகவே உங்கள் புத்தியைப் பின்பற்றிச் செல்லுங்கள். மனதை அல்ல. மனம் என்பது எண்ணங்கள். அவற்றிற்கு எதிரான இன்னும் சில எண்ணங்கள் என்று கும்பலாகச் சேர்ந்த ஒரு மூட்டை. இது என்ன? (கைக்குட்டையைக் காட்டி ) இது ஒரு வஸ்திரம். வஸ்திர மல்ல நூல். நூலல்ல பஞ்சு. இவ்வாறு விசாரித்து அறியும்போது இது அல்ல, இது அல்ல என விலக்க முடியும். ஆதாரமான உண்மையை உணர முடியும். இதுவே மனதின் பிரமைகளை விலக்க இயலும் வழி.

(த.ச.சா.செப்டெம்பர் 96-ப.8)

18. சரீரம் செயலாற்றவும், புத்தி விவேகத்துடன் சிந்திக்கவும் அடிப் படையாகத் தேவைப்படுவது ஆன்மாவே. மனது அல்லது புத்தி

ழும் உடலும் ஆன்மாவுடைய தொடர்பின்றி இயங்க முடியாது. இவைகள் யாவும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட வேண்டும். இவைகள் மூன்றும் சரியாக ஒழுங்காக இணைந்து செயல்பட வேண்டும். இதையே மூன்று உபகரணங்களின் கூட்டான மனிதனின் முழுமையென்பர். முறையே

உடல் - பணிபுரிதல் (Doing)
மனம் - அறிவு பெறுதல் (Knowing)
ஆத்மா - மெய்யுணர்வடைதல் (Being)

என்ற மூன்றுக்கும் தேவையான சாதனங்களாகும். இவைகள் மூன்றும் சரியாக ஒழுங்காக இணைந்து இயங்குவதே உயர்ந்த மனிதத் தன்மையெனலாம்.

சரீரம் - ஜடப்பொருள்
ஆன்மா - நுணுக்கமானது. புலன்களுக்கு எட்டாதது.

இவை இரண்டையும் இணைப்பதே புத்தி அல்லது மனம். மனஸோ சந்திரமோ ஜாத அதாவது மனம் சந்திரனின் இயல்புடையது என்று வேதம் கூறுகிறது. இது பந்தத்துக்கும் காரணமாகிறது. விடுதலைக்கும் காரணமாகிறது. உயர்ந்த வழியில் அல்லது மேலான முறையில் விடுதலை அல்லது மோட்சம் கிட்ட உதவும். சரீரத்தைச் சார்ந்தே சிந்தனை செய்து கொண்டிருந்தால் இது மிருகத்தன்மையையே குறிக்கும். ஆன்மாவை நோக்கி புத்தியைச் (மனதைச்) செலுத்தினால் அது மனிதத் தன்மையாகும்.
ஆன்மாவின் உண்மையை உணர்ந்து
ஆன்மீக சிந்தனையில் ஈடுபட்டால்
கடவுளை நோக்கி முன்னேறி தெய்வத்துவம் பெறலாம்.

(த.ச.சா பெப்ரவரி 85-ப1)

"ஈஸ்வரஸ் ஸர்வபூதானாம்" கடவுள் அனைத்து உயிரினங்களிலும் உறைகிறார். நீங்கள் மனிதன் என நினைக்கும்வரை மனிதனாகவே இருப்பீர்கள். நான் கடவுள் என உறுதியாக நம்பி உங்கள் அன்பை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

-பிர.நவம்பர்-2000.ப.9

# 16 மனித மேம்பாடு

1. மனிதனின் மதிப்பு

உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மதிப்பு உண்டு. உப்பின் மதிப்பு அதன் உவர்ப்பே. சர்க்கரையின் மதிப்பு அதன் இனிப்பே. தீயின் மதிப்பு அதன் சுடும் தன்மையே. இவ்வாறு மதிப்புள்ள பொருட்களை உபயோகித்து வரும் மனிதனுக்கு மதிப்பில்லையா? <u>அந்த மதிப்பு என்ன என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும்.</u>

***இராம லட்சுமணன், பரத சத்ருக்கன்.*** இதற்கு இராமாயணத்திலிருந்து ஒரு உதாரணம் பார்ககலாம். சுமித்திரைக்கு லட்சுமணன் சத்ருக்கன் என்ற இருவரும் குழந்தைகளாகப் பிறந்தனர். இவர்களைத் தொட்டிலில் போட்டார்கள். எப்போதும் இருவரும் அழுது கொண்டே இருந்ததுடன் பால் கூட அருந்துவதில்லை. இதைக்கண்டு கவலையுற்ற தாய் தங்களது குலகுருவான வசிஷ்ட முனிவரை அணுகி இதற்கு ஏதாவது உபாயம் கூறுமாறு வேண்டினாள்.
ஞானதிருஷ்டியால் பார்த்து வசிஷ்டர் அவளிடம் "லட்சுமணனை இராமனுடனும் சத்துருக்கனை பரதனுடனும் ஒரே தொட்டிலில் விட்டு விடு சரியாகி விடும்" என்றார். அதேபோல் சுமித்திரை செய்தாள். உடனே இரு குழந்தைகளும் அழுகையை நிறுத்தியதுடன் மகிழ்ச்சி பொங்க விளையாடஆரம்பித்து விட்டன. இதற்குக் காரணம் என்னவென்று வசிஷ்டரை சுமித்திரை கேட்க அவர் பின்வருமாறு விளக்கினார்.

புத்திர காமேஷ்டி யாகத்தில் தெய்வப் பிரசாதமாகக் கிடைத்த பாயாசத்தை தேவ வாக்குப்படி தசரதர் மூன்று மனைவிகளுக்கும் பிரித்துக் கொடுத்தார். அப்போது சுமித்திரை மனதில் ஒரு எண்ணம் உதித்தது. கோசலைககுப் பிறக்கும் குழந்தைதான் விதிப்படி பட்டம் சூட்டிக் கொள்வான் என்றும், கைகேயிக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அவள் திருமணத்தின் போது தசரதர் கொடுத்த வாக்குப்படி பட்டம் சூட்டிக்கொள்ளும் வாய்ப்பு உண்டென்றும் தனக்குப் பிறக்கும் குழந்தை இவர்களுக்கு சேவகமே செய்து கொண்டு பணியாள் போலிருக்க வேண்டி வருமாதலால் தனக்கு மகப்பேறே வேண்டாமென்று எண்ணித் தன்னுடைய பங்காகக் கொடுக்கப்பட்ட பாயாசத்தை அருந்தாமல் வெளியே வைத்து விட்டாள்.

அதை ஒரு பறவை தட்டிக் கொட்டி விட்டது. அதைக் கண்ட கோசலை பரிவுடனும் அன்புடனும் சுமித்திரையிடம் வந்து "தெய்வத்தின் பிரசாதத்தை நீ இப்படி நிராகரிப்பது சரியல்ல. அது போனால் போகட்டும். நான் என்னுடைய பங்கிலிருந்து ஒரு பாகம் தருகிறேன் அதை அருந்துவாய்" என்று கூறிக் கொடுத்தாள். கைகேயியும் தனது பங்கிலிருந்து ஒரு பகுதியைக் கொடுத்தாள். ஆகவே இரண்டு பாகம் அருந்திய சுமித்திரைக்கு கோசலையின் பாகத்தினால் பிறந்த லட்சுமணன் ராமனின் அம்சமெனவும் கைகேயியின் பாகத்திலிருந்து கொடுக்கப்பட்ட பாயாசத்தினால் பிறந்த சத்துருக்கனன் பரதனின் அம்சமெனவும் விளக்கினர். **அவரவர் தனது அம்சத்துடன் சேர்ந்தால்தான் ஆனந்தமும் அமைதியும் பெறமுடியும்.** என்றார்.

02. மனிதனின் தோற்றுவாய் பரமாத்மாவே. அதேபோல் மனிதன் சமுதாயத்திலிருந்து தோன்றுகிறான். சமுதாயம் பிரபஞ்சத்திலிருந்து வருவதேயாகும்.பிரபஞ்சமோ பரமாத்மாவினால் படைக்கப்பட்டது. **ஆகவே மனிதன் நித்தியானந்த நிலைபெற படைத்தவரிடமே திரும்பவும் சேரவேண்டும். இதுதான் மனிதனின் உண்மையான மதிப்பு.** இதைப் புரிந்துகொள்ளாமல் மனிதன் உலகசம்மந்தமான விஷயங்களிலே ஈடுபட்டு தனது வாழ் நாளை வீணாக்கிவிடுகிறான். ஒவ்வொருவரும் தன்னைப்படைத்த பரமாத்மாவுடன் இணையும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

ஒரு விதையை நிலத்தில் விதைத்தால், அதுசெடியாக முளைத்து இலைகளும் மலர்களும் நடுவே முட்களும் கொண்டு மரமாகவும் வளர்கிறது. ஒரு மலர் தோன்ற விதை, முளை, செடி என்று பல கட்டங்களைத் தாண்ட வேண்டியுள்ளது. பிரபஞ்சத்துக்கு விதை கடவுளே. அதிலிருந்துதான் மனித குலமும், மற்ற ஜீவராசிகளும் தோன்றியுள்ளன. இறுதியில் சத்சித் ஆனந்தம் என்ற மலர் உண்டாகின்றது. இதயம், உணர்வுகள், மனது முதலிய யாவும் மலர்களே. மனிதன் அந்த இறைவனின் அம்சமே. இறைவன் சங்கல்பமே இதற்குக் காரணம். இதை உணர்வதே மெஞ்ஞானம்.

03. மனச்சாட்சியே (conscience) அன்பு மயமான தெய்வம். இறை சக்தியே மனிதனிடம் பௌதிக சக்தியாகவும், மனோ சக்தியாகவும் ஆத்ம சக்தியாகவும் திகழ்கிறது. ஆத்ம சக்தியே சத்சித் ஆனந்தம் என்பது. இதுவே மனச்சாட்சி(conscience) எனப்படுவது. இது இறைவனின் சாட்சி. இது அன்பு மயமானது.

குழந்தை பிறந்ததும் தாயை நேசிக்கிறது. பின்பு தந்தை, உடன் பிறந்தோர், உற்றார் உறவினர் என்று பலரிடமும் அன்பு பாராட்டத் தொடங்குகிறது. இது இயற்கையை நேசிக்கும் அளவிற்கு விரிவடைகிறது. இந்த அன்பை எண்ணங்களிலும் சொற்களிலும் (சத்யமாக) செயல்களில் (தர்மமாக) வெளிக்காட்டலாம். இந்த அன்பையே. ஆதிசங்கரர் அத்வைத பிரேமை என்று குறிப்பிட்டார். இதைப் புரிந்து கொள்வது பலருக்குக் கடினமாய் இருக்கும். இதை ஒரு உதாரணம் மூலம் விளக்கினால் எளிதாகப் புரியும். கரும்பு வடிவத்தில் பல கோணல்களும் கணுக்களும் கொண்டு காணப்படுகிறது. ஆனால் அதன் எந்தப் பாகத்தை நறுக்கிப்பிழிந்தாலும் ஒரே மாதிரியான இனிய சுவையுள்ள சாறு கிடைக்கிறது. இதே போல் உலகில் எவ்வளவு வடிவங்கள் வேறு வேறாகத் தோன்றினாலும் உள்ளே உள்ள தெய்வீகம் என்ற சாறு ஒன்றேதான். இதைத்தான் "சர்வபூத அந்தராத்மா"எல்லா உயிரினங்களிலும் உள்ளே உள்ள ஆத்மா என்ற ஆத்ம தத்துவம் என்று சங்கரர் குறிப்பிடுகிறார்.

இதை மேலும் சிறப்பாக எல்லோரும் அனுபவித்து புரிந்து கொள்ளும் வகையில் ஸ்ரீ இராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்ற தமது போதனையில் கரும்புச் சாற்றை அப்படியே சுவைப்பதை விட அதைக்காய்ச்சி சர்க்கரையாகவோ, வெல்லமாகவோ மாற்றி அநேகதின் பண்டங்கள் செய்தும் பானங்களில் கலந்தும் பலவாறாக அனுபவிக்கலாம் என்றார். ஆகவே இருவரும் ஒரே தத்துவத்தைத்தான் குறிப்பிடுகின்றனர். கருப்பஞ் சாறுதான் அடிப்படை சர்க்கரை எப்படி சாதாரண மாவிற்கு இனிப்பை ஊட்டுகிறதோ அதே போல தெய்வத்துவம் என்ற சர்க்கரை மனிதனிடத்தில் சேர்வதால்மனிதனுக்கு பேரானந்தம் என்ற இனிய அனுபவம் நிகழ்கிறது. **இப்படித்தான் இராமானுஜர் அத்வைத சித்தாந்தத்தை மேலும் மேம்பாடடையச் செய்யும் வகையில் விசிஷ்டாத்வைதம் போதித்தார்.** ஒவ்வொரு விதமான மாவுடன் ஒவ்வொரு சிறப்பான சுவையை சர்க்கரை அளிப்பது போல (துவைதம்) பல்வகை மனிதர்கள் பல்சுவையில் தெய்வத்தை அனுபவிக்கலாம். இருப்பினும் அடிப்படை ஒன்றே என்பதுதான் முக்கிய கருத்து.

(த.ச.சா.ஜன92-ப.8)

04. சத்யமும் தர்மமும் தெய்வத்தை வெளிக்காட்டுபவை சரியான வழியில் செயல் புரிவதே தர்மம் என்கிறார்கள். ஆனால் தர்மமே சத்யம் என்பதை உணருங்கள்.

ஒரு பொருள் உண்மையாக அதன் இயல்புடன் இருந்தாற் தான் அதற்கு அந்தப் பெயரே இருக்கும். இயல்பான தர்மம் இல்லாவிடில் அது தன் பெயரை இழந்துவிடும். உதாரணமாக ஒரு தணல் தக தகவென இருந்தால் அதை நெருப்பு அல்லது தீ என்கிறோம். அதில் சுடும் தன்மை போய்விட்டால் அது தணலல்ல நெருப் பல்ல வெற்றுக் கரித்துண்டுதான் என்போமல்லவா? அதைப்போல வெள்ளையுள்ள சர்க்கரை அதன் இனிப்பு இயல்பு இல்லையெனில் வெற்றுமணலே தான்.அதைப் போலவே **தெய்வத்துவ உணர்வே மனிதனின் தர்மம்.** அது இல்லாவிடில் அவன் மனிதனல்ல.தங்க ளுக்குள் உள்ள தெய்வத்துவத்தை ஒவ்வொருவரும் உணர வேணடும் என்று நீங்கள் அனைவருக்கும் போதித்தல் அவசியம்.

(த.ச.சா.ஜன 92- ப10)

05. ***<u>தெய்வத்துவமே மனித மேம்பாடு</u>***

சிலர் தெய்வத்துவத்தைப்பற்றி கூறாமலே மனித மதிப்பீட்டுக்கல் வியைப் போதிக்க முயல்கின்றனர். இது மிகவும் தவறான முயற்சி யாகும். ஏனெனில் தெய்வ நம்பிக்கை இல்லாவிடில் (தெய்வீகம்) அது எப்படி மனித மதிப்பீட்டுக் கல்வியாகும்?

***மனிதனின் மதிப்பீடு தெய்வீகம் தான்.***

**<u>ஆகவே தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் உள்ள கல்விக் கூடத்தில் நீங்கள் இந்தத் திட்டத்தை போதிக்க வேண்டாம்</u>**. அவர்களுக்கு பிடிக்குமோ பிடிக்காதோ என்ற அனுமானத்துடன் நீங்கள் இயங்கக் கூடாது. அவர்களாகவே இந்தப் போதனையைக் கோரி உங்களிடம் வரவேண்டும். நீங்களே அந்தப் பள்ளிகளைப் தேடிச்செல்ல வேண்டாம்.

(த.ச.சா.ஜன 92- ப12)

***06. தெய்வத்துவ உள்ளுணர்வை வளர்ப்பது தர்மம்***

தெய்வத்துவத்தை அடைவதற்கான செயல்களே தர்மம் ஆகும்.

இறைவனை அடைவதற்கான செயல்கள் தர்மத்தில் அடங்கும். இதயத்தில் ஆனந்தத்தை அளித்தும், அத்வைதத்தை வெளிப்ப டுத்தி ஒருமையினைப் போதிக்கும் செயல்கள் தர்மத்தில் அடங்கும் தெய்வத்துவத்தை வெளிப்படுத்தும் உள்ளுணர்வை வளர்ப்பது எதுவோ அதுவே தர்மம்.

(சா.அ.கோடை1997 - ப96)

07. மனிதமேம்பாடுகள் ஒன்றினணயும் போது தெய்வத்துவம். சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்பவை பஞ்ச பூதங்கள் என்று கூறத் தகுந்த மனித மேம்பாடுகள். இந்தப் பஞ்ச பூதஙகளே மனிதனுக்குரிய பஞ்ச பிராணன்கள் என்று கூறுகிறது வேதம்.பிராண, அபான, வியான, உதான சமானன் என்பவையே பஞ்ச பிராணன்கள். இவ்வைந்தும் ஒன்றிணையும் போது அது தெய்வத்துவம் ஆகிறது. சத்யம் தர்மத்துக்கு இட்டுச் செல்ல வேண்டும். தர்மம் சாந்திக்கு இட்டுச் செல்ல வேண்டும். சாந்தி பிரேமைக்கு இட்டுச்செல்ல வேண்டும். பிரேமை அஹிம்சைக்கு இட்டுச் செல்ல வேண்டும். இவை அனைத்தும் ஒன்றே. தனித்தன்மையானவை அல்ல.

(பி.அ.வ. (5) ப204)

08. தர்மம் தெய்வீகத்தைக் குறிப்பது.
ஸ்வதர்மம் என்றால் என்ன? ஸ்வ என்றால் ஆத்மா (ஸ்வ சுய உண்மைத் தன்மை) ஸ்வ தர்மம். பரதர்மம் என்பது தேக தர்மத் தைக் குறிப்பிடுவது. பர என்றால் தேகம். ஆனால் இன்று ஸ்வதர்மம் என்பது தவறாக விமர்சிக்கப்படுகிறது. ஸ்வதர்மம் என்பது இங்கு வர்ணாச்சிரம தர்மம் என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. செய்யும் தொழிலை வைத்து, பிறந்த இனத்தை வைத்து அதுதான் ஸ்வதர் மம் என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் அது தவறு. ஸ்வதர்மம் என்பது ஆத்மதர்மம். ஸ்வ என்பது இங்கே தெய்வீகத் தைக் குறிக்கின்றது.தெய்வீகத்தின் அருகே தெய்வ வடிவாக தெய்வத்தினுள் அடங்குவதைக் குறிக்கும். அத்தனை சொற்களும் ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூபம், ஸாயுஜ்யம் என்பதாக அமைகின்றன.

(த.ச.சா.ஜுன் 99-ப.4)

## 17 பண்டிகை தினங்கள்

01. எல்லாப் பண்டிகை தினங்களும் தெய்வத்துவத்தை அடைய நமக்கு வழிகாட்டுபவையாக, உதவி செய்பவையாக அமைகின்றன. அவை தெய்வீகத்தைப்பற்றி இடைவிடாமல் நினைக்க உதவுபவை இந்தப் பண்டிகை தினங்கள். ஆனால் பண்டிகை நாட்களில் தெய்வீகத் தைப் பற்றி நினைக்காமல் உணவிலும் மற்ற சந்தோசங்களிலும் காலத்தை வீணாகக் கழிக்கிறோம்.

இன்று ஒரு பண்டிகை நாள். பண்டிகை என்றால் நல்ல வகை வகையான உணவுகளைச் சமைத்து உண்டு மகிழ்வது என்றாகி விட்டது. இதல்ல பண்டிகை தினம். திவ்யத்துவத்தைப் பற்றி (தெய்வத்துவத்தைப் பற்றி) எண்ணியபடி அதைப் பற்றியே ஆழ்ந்து சிந்தித்து, தெய்வீகத்தை அடைவதே பண்டிகை தினம்.

(த.ச.சா.மார்ச்98-ப.9)

02. *சிவராத்திரி*

இந்தப் பண்டிகைளின் முக்கியத்துவம் என்ன? விசேஷம் என்ன? தெய்வத்துவத்தை இந்தப் பண்டிகைகள் உங்களுக்கு உணர்த்தும். இரவு என்பது தினந்தோறும் வந்து போவது. முழுமையான இருள் சூழ்ந்த இரவுகள். இந்த இரவும் கூட, வெளிப்புறத்தில் இருள் சூழ்ந்ததாகத்தான் இருக்கும். ஆனால் உள்ளத்தில் (ஒளி) பிரகாசம் இருக்கும். இதயத்தில் காணப்படும் இந்த ஒளி, சுபத்தைக் குறிக் கும் மங்களகரமான ஒன்று, ஆகையால் இதற்கு சிவராத்திரி என்று பெயர் வந்தது. இதன் பொருள் இந்த இரவு இறைவனுடன் இணைந் தது என்பதுதான்.

(த.ச.சா.ஏப்ரல் 94-ப.7)

03. ***தீபாவளியின் உள்ளர்த்தம் என்ன?***

நரகாசுரன் ஆண்டு வந்த ராஜ்ஜியத்தின் தலை நகரம் "பிராக்ஜோதி ஷபுரம்". அந்தப் பெயருக்கு நான்கு பதங்கள் இருக்கின்றன.
ப்ராக்-முந்தைய ஷ-மறந்து போதல்
ஜ்யோதி-வெளிச்சம் புரம்-நகரம்
இதன் உள்ளர்த்தம் இந்நகரத்தில் வசித்தவர்கள் எல்லாம் பண்டைய வெளிச்சமான, நிரந்தர ஜோதியான ஆத்ம ஜோதியை

மறந்து விட்டவர் என ஆகிறது. இந்த ப்ராக்ஜோதிஷபுரத்தின் அரசனான நரகாசுரன் ஆத்ம தத்துவத்தை முழுமையாக மறந்து விட்டான். தன்னை உடலுடன் சம்மந்தப்படுத்தியவன் தன் வாழ்க்கையை அஞ்ஞான இருளோடு நடத்தி வந்தான்.

ஒவ்வொருவரும் ஆத்மாவுடன்(தெய்வீகத்துடன்)தன்னைச் சம்மந்தப் படுத்த வேண்டுமே அல்லாது உடலோடு அல்ல. தேகத்தின்மேல் வைத்த பற்றுதல் தான் எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம். அஞ்ஞானத்தை நோக்கி நடப்பவன் நரன் (மனிதன்). ஞானத்தின் பாதையில் பயணப்பட ஒரு மனிதன்

புனிதமான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேணடும்
புனிதமான வார்த்தையைப் பேச வேண்டும்.
புனிதமான செயல்களில் ஈடுபட வேண்டும்.

(த.ச.சா.டிச98-ப.25)

04. ஒவ்வொரு இராத்திரியும் சிவராத்திரியே. இருளில் ஒளியைக் காண முயல வேண்டும். இருளில்லையெனில் ஒளியின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளமுடியாது. ஆகவே இருள் நடுவிலே ஒளியைக் காணும் முயற்சியிலே ஈடுபட வேண்டும்.

ஒரு வருஷத்துக்கு ஒரு முறையே சிவராத்திரி (வருகிறது) என்பது சரியல்ல. ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு நொடியும் தெய்வத்துவத்தை நாடி உங்கள் வாழ்வைப் புனிதமாக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும். காலமே சிவஸ்வரூபம். உண்மையில் நீயே சிவம். உன்னுடைய உண்மை ஸ்வரூபமான சிவத்துவத்தை (தெய்வத்துவத் தை) அறிந்து கொள்ள ஒவ்வொரு கணமும் முயல வேண்டும். இதுவே சிவராத்திரியின் உண்மையான தத்துவம்.

(த.ச.சா.மார்ச் 85-ப.7)

05. மக்கள் தங்கள் தெய்வீகத் தன்மையை புரிந்து கொள்வதற்காகவே பண்டிகை நாட்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று வைகுந்த ஏகா தசி.வைகுந்தம் எது? கடவுளின் உறைவிடம் வைகுந்தம், கைலாசம் சுவர்க்கம் என்று கூறப்படுகிறது. அது ஒரு நியாயமற்ற மனக் கற்பனை. எது கடவுளுடைய இடம்? கடவுள் நாரதரிடம் சொன்னார்

"எங்கே என்னுடைய தெய்வீகத்தன்மைகளை (glories) என் பக்தர்கள் பாடுகிறார்களோ அங்கே நான் இருக்கிறேன்" இதுதான் அவருடைய பிரதானமான விலாசம். மற்ற இடங்கள் எல்லாம் அதன் கிளைகள். இதயத்தில் உள்ளுறைகின்ற தெய்வீகத்தை விளித்து அனுப்பப்படும் செய்திகள் எல்லாம் இறைவனைப் போய்ச் சேர்கின்றன.

(ஆ.ச.சா.பெப் 96-ப.40)

06. சங்கராந்தி போன்ற பண்டிகை தினங்களின் சிறப்பியல்புகளைப் பலர் அறியாதிருக்கிறார்கள். உலக சந்தோஷங்களின் மூலமாக மனிதன் நிலையான ஆனந்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனந்தத்தின் ஊற்று, (மூலம்) தன்னுள்ளேயே உள்ளதென்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும். தனது மூக்குக் கண்ணாடியை நெற்றியில் தூக்கி வைத்துக் கொண்டு அந்த மூக்குக் கண்ணாடியை எங்கும் தேடிய ஒருவன் பின்பு அதைக் கண்டுபிடித்து ஆனந்தப்படும் போது அது இவ்வளவு நேரமும் தன்னோடேயே இருந்திருக்கின்றது என்பதை உணர்கிறான். இப்படியான தேடுதலை ஆரம்பிப்பதற்கு சங்கராந்தி உதவி செய்கின்றது.

தெய்வீகம் வேறு எங்கோ இல்லை. ஒருவனது இதயத்திலேயே இருக்கின்றது. தனது இதயத்தில் தெய்வீகத்தைத் தேடுபவன் மீட்சியடைந்தவனாகின்றான்.

(ஆ.ச.சா.பெப் 96-ப.44)

மூன்று முக்கிய விடயங்களை மனதிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

(1) வந்தால் போகமாட்டாது - ஞானம்
(2) போனால் வரமாட்டாது - அஞ்ஞானம்
(3) வருவதுமில்லை போவதுமில்லை - தெய்வீகம்

உங்கள் நம்பிக்கையும் வருவதும் போவதுமில்லாமல் நிலையாக இருக்க வேண்டும்.

ஆ.ச.சா.மே-2000

# 18 ஆத்மீக சாதனைகள்

விசாரணை ஏன்?

01. தெய்வீகத்தை உணர சில ஆன்மீக செயல்களிலும் சாதனையிலும் ஈடுபட்டால் போதும் என நீ நினைக்கிறாய். ஆன்மீக சாதனைகள் செய்வது மனதைத் திருப்திப்படுத்தத்தான் (த.ச.சா பார்க்க செப் 96-ப.13) அதைவிட்டு விட்டு உன்னையே நீ கேட்கும் கேள்விகளால் தான் ப்ரம்ம தத்துவம் விளங்கும் எனப் புரிந்துகொள். விவேகம் என்ற Discrimination செய்ய வேண்டும். Enquiry (விசாரணை) என் பதும் கூட சரியான பதமில்லை. எங்கும் இருக்கும் ஒரு பொருளைப் பற்றிய விசாரணை ஏன் செய்ய வேண்டும்? உன் உள்ளே வெளியே, உன்னைச் சுற்றி எல்லாம் இருக்கும் தெய்வதத்துவத்தைப் பற்றி என்ன விசாரணை தேவை? அதுவும் கூட அஞ்ஞானம் தான்.

(த.ச.சா.செப்.96-ப.7)

02. ஆன்மீகப் பயிற்சி என்றால் என்ன? அதன் உள்ளர்த்தம் என்ன? அதன் பயன் என்ன? இவையெல்லாம் காலத்தைப் புனிதப்படுத்தப் பயன்படும் செயல்கள். இறைவனை அடைவதற்கு எந்த ஆன்மீக சாதனையும் தேவையில்லை. விருப்பப்பட்டால் எந்த சாதனையை யும் செய்துகொள் ஆனால் ஆத்மா இல்லாதது எதுவோ அதைக் கைவிடுதலே உண்மையான சாதனை. ஆத்மாவை அறிந்து கொண் டபின் ஆன்மீகப் பயிற்சிக்கு அவசியமென்ன?

எங்கும் இறைவனது கால்கள், எங்கும் இறைவனது கைகள் அனைத்தும் அவரே என்றுணரும் போது சாதனா முயற்சிக்கு அவசியம் என்ன?

ஆத்ம ஆனந்தத்துக்காகவோ, ஆத்ம சாட்சாத் காரத்துக்காகவோ (ஆன்மாவை நேராக அறிந்துணரவோ) எந்த சாதனை முயற்சியும் வேண்டுவதில்லை. அடிப்படையில் எது ஆத்மா இல்லாததோ (தெய்வீகம் இல்லாததோ) அதைக் கைவிடுதலே உண்மையான சாதனை. அனாத்மாவை ஆத்மா இல்லாததைக் கண்டு பிடித்து, வேறுபடுத்தி விலக்காத வரையில் செய்யும் ஆன்மீகப் பயிற்சிகள் அனைத்தும் வீணானவை. காலத்தை விரயம் செய்பவை.

(சா.அ.1999-ப.85)

03. ஸ்வராஜ்யம்

எத்தனையோ முறை, எத்தனையோ வகையில் ஆன்மீக சாதனைகள் செய்து வருகிறோம் அதனால் எந்தவித பயனும் இல்லை. அவையெல்லாம் **WASTE** of time (வீண் நேரம்) பவித்ரமான உள்ளுணர்வுகளை வளர்த்துக்கொண்டு வாருங்கள். துஷ்ட குணங்களை தள்ளி வைத்து சற்குணங்களை வளர்த்துக் கொள்வதுதான் நிஜமான சாதனை. துஷ்ட குணங்கள் ஏதேனும் இருந்தால் எந்தப் புனித ஷேத்திரத்துக்குப் போயாவது அவற்றை விட்டுவிட வேண்டும். அங்கு ஏற்படும் புனித பாவனைகளை குணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய தெய்வீகமான தலை சிறந்த உள்ளுணர்வுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். Body is like a **WATER BUBBLE** உடம்பு ஒரு நீர்குமுழி போன்றது. mind is a mad monkey மனம் ஒரு விசர்க் குரங்கு. Dont follow the mind மனத்தைப் பின்பற்றாதீர்கள். Dont follow the body உடம்பைப் பின்பற்றாதீர்கள். Follow the conscience மனச்சாட்சியைப் பின்பற்றுங்கள்.

அதுவே உண்மையான ஆன்மீக சாதனை. conscience ஐ நாம் அனுபவிக்கிறோமா? conscious நிலையை (புலன்களால் உணர்வதை) அனுபவிக்கிறோமே தவிர conscience ஐ அனுபவிப்பதில்லை. இது சரியல்ல. conscience ஐப் பின்பற்ற வேண்டும். அதுவே ஸ்வராஜ்யம்.

(த.ச.சா.ஜுலை 1998-ப.12)

04. ஒரே தெய்வம்

நீ எத்தனையோ ஆன்மீக சாதனைகளைச் செய்து அவரது அன்பைப்பெற முயற்சிக்கிறாய். உண்மையில் நீ எந்த ஆன்மீக சாதனைகளையும் செய்யத் தேவையில்லை. உனக்கும் இறைவனுக்கு இடையே இருக்கும் உறவை நினைவில் கொண்டாலே போதும். மூவகைப்பட்ட இப்பிரபஞ்சத்துக்கு ஒரே தெய்வீகமே பொறுப்பு. இந்த மூன்று அம்சங்களும் **GOD** என்ற ஆங்கில வார்த்தையில் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| G என்பது | - Generation | - சிருஷ்டி | - ஆக்கல் |
| O என்பது | - Organisation | - ஸ்திதி | - காத்தல் |
| D என்பது | - Distruction | - லயம் | - அழித்தல் |

இறைவனிடம் இந்த மூன்று அம்சங்களும் நிறைந்திருக்கின்றன. எல்லா உயிர்களிலும் ஒரே கடவுளைக் காண்பது என்பதுதான் உண்மையான அத்வைத தத்துவம்.

த.ச.சா.நவ 98-11

05. உள்முகமாவது

என்ன செய்தாலும் தான் அனுபவிக்கின்ற ஸ்தானம் தன்னுள்ளேயே இருக்கிறது என்பது மட்டும் அவனுக்குப் புரிவதில்லை. வெளிப்புற சாதனைகள் அவ்வப்போது கிடைக்கும் அனுபவங்களோடு முடிந்து போகின்றன. பஜன் கேட்கும் போது மகிழ்ச்சியாய் இருக்கிறது. பஜன் முடிந்தவுடன் மகிழ்ச்சி எங்கோ போய்விடுகிறது. வெளிப் புறமான சாதனைகளில் ஏற்படும் ஆனந்தம் சிறிது நேரத்தில் மறைந்து விடுகிறது. அதனால் பஜன் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எதைச் செய்தாலும் அதை உள்முக மாக மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் முயற்சி செய்ய வேண்டும்.

(த.ச.சா மார்ச் 96-ப.16)

06. பலன் ஏற்பட உள்நோக்கு வளர வேண்டும்

நாம் ஆன்மீக முயற்சிகள் என்னென்ன செய்கிறோம்? நாம் ஆன்மீக நூல்கள் எவற்றைப் படிக்கிறோம்? ஆன்மீகப் பெரியார்கள் யார் யாரைச் சந்திக்கிறோம்? இவை யாவற்றிலும் என்ன பயன்? ஒரு பயனுமில்லை. நாளுக்கு நாள் நமது புறநோக்கு பெருகிக் கொண்டே செல்கிறது. உள்ளே நோக்குவது வளரவில்லை. அதனாலேயே இவற்றால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

தகுந்த பலன் ஏற்பட வேண்டுமானால் அனுபவங்களை ஆதாரமாகக் கொள்ள வேண்டும். அனுபவம் இதயத்திலிருந்து கிடைப்பதே தவிர வெளியுலகிலிருந்து கிடைப்பதல்ல. அனுபவங்களுக்காகப் போராடத் தேவையில்லை.(Experiments) பரிசோதனை செய்ய வேண் டாம். விஞ்ஞான உலகில் பரிசோதனை விளைவுகளைத் தரும். அத்யாத்ம உலகில் No Experiments only Experience அனுபவம் மட்டுமே. பரிசோதனைகள் அல்ல.

அனுபவங்கள் எவ்வாறு கிடைக்கின்றன? தானே கிடைக்கின்றன. அனுபவங்களை அனுபவிக்கும் போது Experience பெறுகிறாய். சர்க்கரை தண்ணீருக்கடியில் செல்கிறது. சர்க்கரை தண்ணீரில் கலந்திருக்கின்றதா? (எவ்வளவு கலந்திருக்கின்றது?) என்று எப்படிக் கண்டு பிடிப்பாய்? ஒரு துளி நீரை வாயில் சுவைத்தால் நீ கண்டு பிடிப்பாய், நீ தெரிந்து கொள்வாய்.

ஆகவே தேகம் என்பது பாத்திரம். தெய்வதத்துவம் என்பது சர்க் கரை. கண்ணால் அதைப் பார்க்க முடியாது. கையால் அதை எடுக்க முடியாது. ஆனந்தத்தை அனுபவிக்கும் போது அதை நீ

அறிந்து கொள்வாய். தெய்வத்துவம் எங்கும் பரவியுள்ளது. நெருப்பின் மேல் சாம்பல் படர்ந்திருப்பதேன்? நாம் நெருப்பை அலட்சியம் செய்து விட்டோம் சாம்பல் நெருப்பிலிருந்துதான் வந்தது. நெருப்பையே மூடி விட்டது. சாம்பலை ஊதினால் நெருப்பு கனியும்.

ஞானமாகிய நெருப்பு உங்களுக்குள் இருக்கிறது. அதை நீங்கள் அலட்சியம் செய்யாதீர்கள். மாயையாகிய சாம்பல் அதன் மேல் படர்ந்து இருக்கிறது. ஆகையால் நீங்கள் நெருப்பைக் காணவில்லை. ஞானத்தைப் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் துறவு மனப் பான்மையால் சாம்பலை ஊதுங்கள், நெருப்பைக் காண்பீர்கள்.

நெருப்பு முன்னமேயே இருந்தது போல தெய்வதத்துவமும் ஒவ்வொரு வருக்குள்ளும் இருக்கிறது. ஒவ்வொருவருள்ளும் ஆத்மாவாகிய நெருப்பு இருக்கிறது.

(சா.அ.கோடை1993-ப.58)

07. இலக்கு என்ன?

விஷ்ணு என்ற வார்த்தைக்கு வெளிச்சத்தைக் கொடுப்பது தம ஸோமா ஜோதிர்கமய என்று பொருள் கொள்ள முடியும். விஷ்ணு என்ற தெய்வீகதத்துவம் நம்மை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்கிறது. (ஆத்மஹ என்பதும் இதே அர்த்தம்) இத்தகைய தெய்வீக தத்துவங்கள் அவ்வப்போது (பாரத கலாச்சாரத்தில்) சனாதன தர்மத்தில் நமக்கு விளங்குகின்றன.

இத்தகைய கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றோ, தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்றோ யாரும் பிரயாசைப் படுவதில்லை. பூஜை செய்வதும் ஜபம் செய்வதும் தியானம் செய்வதும் முக்கியமானதென்று மக்கள் நினைக்கிறார்கள். அந்த ஜபமும் தியானமும் எதைக் குறித்து நாம் செய்கிறோம் என்ற சத்யத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. தனது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதில்லை. வாழ்க்கையின் இலக்கு என்ன எனபதைப் புரிந்து கொள்ளாமல் எத்தனை ஆன்மீக சாதனைகள் செய்தாலும் அதனால் பயனில்லை.

(த.ச.சா.ஜன98-ப.8)

08. சுய சோதனை.

விடாமல் தொடர்ந்து ஆத்மீக பரிசோதனை செய்து பார்த்துக்

கொண்டே இருத்தல் வேண்டும். நம்முடைய பார்வையும் பேச்சும் தூய்மையானவையாக இருக்கின்றனவா? அவை இதயத்திலிருந்து புறப்படுகின்றனவா? இந்த ஆத்ம பரிசோதனைதான் ஆத்மீகமாவது. அதுவே இதயத் தூய்மைக்கும் உறுதி கூறுகிறது.

(த.ச.சா மே 98-ப.6)

09. காணும் கண்ணில் கலந்து நிற்பது கடவுள் கண்டீரோ?

உண்மையான ஆத்மீக சாதனையென்பது அனைத்து வேலைகளையும் இறைவனின் பணியாக எண்ணிச் செய்வதுதான். வெறும் ஜபம் தியானம் இவையெல்லாம் அல்ல. கடவுள் எங்கும் நிறைந்தவர். இதைத்தான் வேதம் இவ்வாறு உரைக்கிறது.

ஸர்வதப் பாணிபாதம் தத்
ஸர்வ தோஷி ஸிரோமுகம்
ஸர்வத ஸ்ருதி மல்லோகே
ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி.

(அவரது கண்கள், கரங்கள், பாதங்கள், சிரங்கள், வாய், காதுகள் எல்லா இடத்திலும் வியாபித்து இருக்க கடவுள் இப்பிரபஞ்சம் முழுவதையும் ஊடுருவி நிற்கிறார்)

நீங்கள் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். ஆனால் கடவுளை மட்டும் ஏமாற்ற முடியாது. அவர் எப்போதும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவர் நிரந்தர சாட்சி. அவர் உன்னிடம் இருக்கிறார். (தெய்வீகம்) எப்படி? உன் கண்ணில் பார்வை எங்ஙனம் நிறைந்திருக்கிறதோ அப்படி.

(த.ச.சா.ஜன-2000.ப.20)

10. அடிப்படை -அன்பு

அன்பின் தத்துவத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்த ஒரு சாதனையும் பயனற்றது. சிலர் மணிக்கணக்காக தியானத்தில் ஆழ்ந்திருப்பார்கள். ஆனால் மனம் நிலையாக இல்லாததால் அவர்களால் தெய்வீகத்தை அனுபவிக்க இயலுவதில்லை.

(த.ச.சா டிசம்பர்1999-ப.6)

11. தெய்வப் பிரீதி

எது சொன்னாலும் எது செய்தாலும் இது பகவானுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று எண்ணி செயல்படுங்கள். இது அவருக்குப் பிடிக்காது என்றால் செய்யக் கூடாது. இறைவனுக்குப் பிடித்ததைச் செய்யும் போது பலன் அதிகரிக்கின்றது.

(த.ச.சா ஜுலை 95-ப.8)

12. நம் பங்கு எவ்வளவு?

தெய்வத்தை அடையச் செய்யும் சாதனையில் நம் பங்கு எவ்வளவு? எந்த அளவுக்கு தெய்வதத்துவத்தை உணர்ந்திருக்கிறோம். இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்படாவிட்டால் இறைவனின் சமீபத்தில் எத்தனை காலம் இருந்தும் பயன் இல்லை.

(த.ச.சா.ஜுலை 95-ப.8)

13. பரிபூரணன்

பரிபூரணமான இறைவனைத் திருப்திப்படுத்த அன்பும் பரிபூரணமானதாக அமைய வேண்டும். பேசும் பேச்சிலும் பூரணமான சத்யம் நிலவ வேண்டும். நம் நடத்தையிலும் இறைவனின் பூரணமான பிரதிபலிப்பு இருக்கவேண்டும். நம் எண்ணங்கள் எல்லாம் தெய்வீகமாக இருக்கவேண்டும். ஏனெனில் அவர் நம்முள் உறைபவர். அவரிடமிருந்து வெளிப்பட்ட நாமெல்லாம் அவரைப் போன்றவராகத்தான் இருக்க வேண்டுமேயன்றி வேறெதுவுமில்லை. அவரே நம்முள் இருக்கிறாரே அல்லாமல் வேறெவரும் இல்லை. இதனால் தான் ப்ரம்மார்ப்பணம் ப்ரம்மஹவிர் என்று பிரம்மனுக்கு அர்ப்பணிக்கிறோம்.

(த.ச.சா.செப. 95-ப.5)

14. அனாத்ம பாவனை

பலவாகத் தெரிபவற்றுக்கு அடிப்படையான ஒன்றைத் தெரிந்து கொள்வதற்கு எத்தனையோ விதமான ஆத்மீகப் பயிற்சிகளை மனிதன் மேற்கொள்கின்றான். ஆத்மாவைத் தேடும் எல்லா முயற்சிகளும் அறியாமையிலிருந்து உண்டாகுபவையே. ஆத்மாவை உணர்ந்த ஞானி அதை உணர அப்படிப்பட்ட எந்த முயற்சியும் செய்ததில்லை. ஆத்மாவை உணரவென்று மனிதன் எடுக்கும் எல்லா முயற்சிகளும் மனதைத் திருத்திப்படுத்துபவையே. உண்மையில் தேவையானது மனதை அழிப்பதுதான் (அமனஸ்கன்) அப்பொழுதுதான் ஆத்மாவை உணர முடியும். மனதைப் பலப்படுத்த என்று எடுக்கும் ஆத்மீக முயற்சிகள் வீண்விரயமே. சாதனையில் ஈடுபடுபவர்கள் அனாத்ம பாவனையை முதலில் விட வேண்டும்.

(ஆங்கில ச.சா.செப. 90-ப.234)

15. சிந்தைதனைத் தெளிவித்து

சேவை செய்கையில் யாரோ கிராமத்தினருக்கு சேவை செய்வதாக எண்ணாதீர்கள். யாருக்கு சேவை செய்தாலும் அது பகவானுக்குச் செய்வதாக ஆகிறது. அவன் நரன் அல்ல. சாட்சாத்நாராயணன் என்றே உணருங்கள். யாரையும் தனிப்பட்டவனாக நினையாதீர்கள்.

அனைவரும் ஆண்டவனின் வடிவமே. தெய்வத்துவம் இல்லாத ஜீவன் எவரையுமே காணமுடியாது.

இறைவனிடம் இருக்கும் உனது உறவினைப்பற்றிய தெளிவு இல்லையெனில் உனது ஆன்மீக சாதனைகள் அனைத்தும் வீண். ஆனால் இந்த ஒற்றுமைத் தத்துவத்தை புரிந்து கொண்டுவிட்டால் நீ எங்கிருந்தாலும் கடவுளிடம் ஒன்றாகி இருக்கிறாய்.

(த.ச.சா நவம் 98-ப.10)

16. இன்ன தன்மை என்று நம்மை எடுத்துச் சொல்ல பாசம், அன்பு, பரிசுத்தமான உள்ளம் இவற்றைக் கொண்டுதான் இறைவனைப் பெற முடியும். அதைவிட்டுவிட்டு குறுக்கு வழிக ளிலோ நரியின் தந்திரத்தாலோ அவரைப் பெற நினைத்தால் அவர் அதைவிடப் பெரிய நரித் தந்திரம் செய்து நாயைப் போல அலையச் செய்வார். உங்கள் நடிப்போ சம்பந்தமற்ற செயல்களோ இறை வனிடம் உங்களைக் கொண்டு சேர்க்காது. இக்காரணத்தின் பொருட்டே சொல்லப்பட்டது, ஒருவன் போகியோ ரோகியோ சமூ கத்தில் வாழ்கிறானோ தனிமையில் ஏகாந்த வாஸம் செய்கிறானோ எப்படி இருப்பினும் சரி அவன் இறைவனின் தன்மையை உணர்ந்தி ருந்தால் தானும் தெய்வீகத்தன்மை கொண்டவனாக மாறுவான்.

(கோடை மழை 1973-ப.119)

17. தெய்வீகப் பாதையில் நடப்பவர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும், தெய்வீக ஆனந்தமடைய பிரயத்தனம் செய்பவர்களை எக்காலத் தும் உற்சாகம் இழக்கும்படி செய்யக்கூடாது. அவர்களை துயரத்தில் ஆழ்த்தக் கூடாது. தன்னால் இயலாது என்ற தன்னம் பிக்கை அற்ற நிலைக்கு அவர்களைத் தள்ளக்கூடாது. எந்த ஜென் மத்தில் செய்த புண்ணியமோ அவர்களுக்கு இந்தப் பாக்கியம் இந்த ஜென்மத்தில் கிடைத்திருக்கிறது. புனிதமான இதயத்துக்கும் தெய்வீகத்துக்கும் தான் சம்பந்தம் இருக்கிறது. மற்றவையெல்லாம் passing clouds வந்து செல்பவை. அவை சத்யமானவையல்ல. அனைத்தும் தற்காலிகமானவை. வருவதும்போவதுமாக இருக்கக் கூடியவை. வந்து பெருகக் கூடியது ஒன்றே ஒன்றுதான். அது தான் தெய்வீகம். comes and goes என்பது உலகியல் செல்வம் தெய்வதத் துவம் comes and grows. வந்துவளரும் அந்த தெய்வீகத்தைப் பவித்திரமாக நாம் பாதுகாக்க வேண்டும்.

த.ச.சா ஜுலை-98ப.11

## 19 உள்ளுறை தெய்வீகத்தை நினைக்காதது – பாவம்
## உள்ளுறை தெய்வீகத்தை நினைப்பது – புண்ணியம்

01. ஒரு முறை சங்கரர் உலகெங்கும் தனது 13 சீடர்களுடன் யாத்திரை சென்ற போது காசிக்குச் சென்றார். அப்போது காசி விஸ்வேஸ்வரப் பெருமான் முன்னால் நின்றுகொண்டு கூறினார் நான் மூன்று விதமான பாவங்களைச் செய்திருக்கின்றேன்.

1. முதலில் நான் கடவுள் எங்குமிருக்கிறார் என்று கூறினேன்.அவர் ஒவ்வொருவரின் இதயவாசியும் கூட என்றெல்லாம் நான் இறைவனை வர்ணித்துக்கொண்டே சென்றேன். நான் கடவுள் அனைத்தையும் அறிந்தவர் என்றேன், ஆயினும் கடவுளைக்காண வெகு தொலை தூரம் பயணம் செய்து காசிக்கு வந்தேன். நான் சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று. இது பாவம் இல்லையா?

11. அடுத்து, நீங்கள் எல்லாருடைய இதயங்களிலும் வசிக்கிறீகள் என்று எப்போதும் முழங்குகிறேன். அப்போது என்னுடைய இதயத்திலும் இருக்கிறீர்கள். அவ்வாறு இருக்கும் போது நான் காசிக்கு ஏன் வரவேண்டும்? நான் முழங்கியதில் எனக்கே நம்பிக்கையில்லை. அதுவே எனது இரண்டாவது பாவம்.

111. மூன்றாவதாக இவ்வுலகம் முழுவதும் அவரது வடிவம் என்று நான் முழங்கினேன். கடவுளே காரணகர்த்தா காரண காரியச் சங்கிலியின் விளைவான இவ்வுலகில் உன் பெயரை குறிக்காதது எதுவுமே இல்லை. ஆனால் சங்கரன் என்ற பெயரை மட்டுமே கூறிக் கொண்டிருக்கிறேன். அனைத்து வடிவங்களும் உம்முடையதே. ஆனால் நான் ஒரே ஒரு பெயரை மட்டும் கூறுகிறேன் அது ஒரு பாவம்.

இத்தைகைய பாவங்களுக்கு பிராயச்சித்மாக உள்ள வழியைக் காண்பியுங்கள். நினைப்பது ஒன்று பேசுவது மற்றொன்று செயல் புரிவது வேறொன்றாக இருப்பது சரியல்ல. சங்கரர் மிகப் பெரிய ஞானி என்றுரைக்கிறார். இருந்தாலும் தனக்கு இத்தகைய இசைவு இல்லாததாகக் கூறிக் கொள்கிறார். எண்ணம் சொல் செயல் அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது தான் மகாத்மா என்ற பெயர் உனக்கு ஏற்பட்டு நிறைவு பெறும். எண்ணம் வேறு சொல் வேறு செயல் வேறு என்று இருப்பவர் துராத்மா. பக்தியிலும் சரணாகதியிலும் மிகுந்த இரகசியம் பொதிந்துள்ளது. முழுமையான திட நம்பிக்கையும் இறையன்பும் உன்னிடம் இருந்து

தூய அன்பின் ஆழத்தில் நீ முழ்கினால் இறைத் தன்மையை நீ நன்கு அறிவாய் இதற்கு சாதகமாக இறைவன் மனித வடிவில் வந்து பேசுகிறார் நடக்கிறார் பழகுகிறார் இத்தகைய தெய்வதத்து வத்தின் விழிப்பு உணர்வு நிலையை நிலைத்து வைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

(சா அ கோடை 1977-ப 69)

## *02. பரோபகாராய புண்யாய பாபாய பரபீடனம்*

i. வெளிப்படையான கருத்து
எவரையும் துன்புறுத்தக் கூடாது
எப்போதும் உதவவேண்டும்
help ever hurt never

ii. உள்ளுறையும் கருத்து?

### *அ. பரோபகாராய புண்யாய பர உபகார*

பர-ஆத்மா உப-சமீபம் கர செல்லுதல் ஆத்மாவுக்கு சமீபத்தில் செல்லுதல். அது தான் பரோபகாரம். பரமாத்மாவின் அருகில் செல்ல முயற்சி செய். அது தான் பரோபகாரம். தான தர்மங்கள் எல்லாம் உதவிகள் அவற்றிலும் சுயநலம் கலந்திருக்க வாய்ப் புண்டு. ஆனால் இது சுயநலமற்றது. இறைவன் அருகில் செல்வது இதுவே புண்ணியம்.

### *ஆ. பாபாய பரபீடனம்*

i. மற்றவரை துன்புறுத்துவது பாபம் இது உலகியல் கருத்து.

ii. அதன் உள்ளுறையும் ஆத்மீகக் கருத்து வேறுவிதமானது

iii. பர -ஆத்மா
ஆத்மாவை துன்புறுத்வது பாபம் எல்லோரிடமும் உள்ள ஆத்மாவை உணராமல் போவதே பாபம்

(த ச சா ஜுன் 95-ப5)

03. புண்ணியம் என்பது பஜன் செய்வதோ ஷேத்ராடனம் செல்வதோ அல்ல. நம் வாழ்க்கையை ஆத்மாவின் அருகில் கொண்டு செல்வது தான் புண்ணியம். பரபீடனம் என்றால் என்ன? மற்றவரை வருத்துவது என்றால் என்ன? எங்கும் உள்ள ஒரே ஆத்மாவைப் பிரித்துப்பார்ப் பதே பாபம். இவ்வாறு உள்ளுறையும் உண்மையை உணராமல் வெளிப்புற அர்த்தங்களை மட்டும் பார்த்து அவற்றையே உண்மை யென நம்பி துன்பத்தில் ஆழ்கிறார்கள்.

(த ச சா ஜுன் 95-ப 15)

## 20 இறைவன் வருந்துகிறான்

01. பாலை அடுப்பில் கொதிக்க வைக்கும் போது தண்ணீர் ஆவியாகப் போகிறது. தண்ணீர் பிரிந்து போவதைச் சகிக்காத பால் நெருப் பினுள் பாய்ந்து விட முயற்சி செய்கிறது. உடனே கொதிக்கும் பாலில் சிறிது நீர் தெளித்ததும் அது சாந்தமாகி சமப்பட்டுப் போகிறது. அதன் நண்பனை மீண்டும் கண்டு இணைந்தவுடன் பால் மகிழ்கிறது.

இந்த உறவுதான் நரனுக்கும் (ஜீவி) நராயணனுக்கும் இறைவன். தனிப்பட்ட ஜீவி தன்னுடன் சேரும் போது நாராயணன் மகிழ்கிறான். அதே ஜீவி தனது பார்வையை வேறு பக்கம் திருப்பி உலகியல் சுகங்களில் ஆழ்ந்து போகும் போது இறைவன் வருந்துகிறான். பிறகு ஜீவி மீண்டும் முழுமையாக சரணடையும் போது இறைவன் மீண்டும் மகிழ்கிறான்.

கலியுகத்தின் பிரபாவத்தால் ஜீவி இறைவனிடம் இருந்து தன்னை பிரித்து தனிமைப்படுத்திக் கொள்கிறான். மனிதன் இத்தகைய பிரிவினால் வருந்தாமல் இருக்கலாம். ஆனால் இறைவனோ தனது நண்பனின் பிரிவுக்காக பெரிதும் வருந்துகிறார். இறைவன் மட்டுமே இவ்வுலகில் நிரந்தரமான நண்பன்.

உலகியலான மற்ற நண்பர்கள் எல்லாம் ஹலோ ஹவ் ஆர் யூ? குட்பை என்பவற்றை மட்டுமே சொல்ல முடியும். வேறெதுவும் அவர்களால் இயலாது.

இறைவன் அவ்வாறு இல்லை. அவர் ஹலோ சொல்வதில்லை. ஹவ் ஆர் யூ எனக் கேட்பதுமில்லை. குட்பை என்று வெளி நடப்பதுமில்லை. அவருடன் நீ இணைந்து வாழும் வரை நீயும் மகிழ்ச்சியாய் இருப்பாய். அவரும் மகிழ்ச்சியாய் இருப்பார். ஆனால் பக்தனின் பிரிவினால் அவர் வருந்தினாலும் வெளியிலே காட்டிக் கொள்வதில்லை ஏன் தனிப்பட்ட ஜீவி தவறான பாதையில் செல்ல வேண்டும்? அவன் ஏன் உண்மையை மறக்க வேண்டும்? ஏன் தெய்வத்திடமிருந்து விலகியிருக்க வேண்டும்? ஏன் அவனது தூய்மையை அவன் இழக்கவேண்டும். இவ்வாறெல்லாம் எண்ணி

இறைவன் வருந்துகிறார். இந்த வருத்தமும் கூட பக்தனுக்காகத் தானேயன்றி அவருக்காக அல்ல. கடவுள் என்ன சொன்னாலும் செய்தாலும் அனைத்தும் உன் நன்மைக்கே.

(த ச சா நவம் 98-ப8)

02. இன்று மனிதன் தனது உண்மையை தான் உணராமல் வாடுகிறான் என்பது வேதனைக்குரியது. வழிபாடு செய்ய கற்றுக் கொள்கின்றனரே அன்றி தம்முள் உள்ள தெய்வத்துவத்தை உணர முயற்சிசெய்வ தில்லை. அவதார புருஷர்களைக்கூட மனிதர்கள் பூஜை செய்து வருகின்றனேரேயன்றி அவர்கள் மனிதத் தன்மையின் மூலம் தெய் வத்துவதை ஒளிவீசச் செய்ததை (செய்வதை) எவரும் புரிந்து கொள்ளவில்லை. இப்படி மனிதர்களுக்கு அவர்கள் எடுத்துக் காட்டாக இருந்ததை உணராமல் இருப்பது வருந்தத் தக்கது. மனிதர்கள் எப்படி வாழ வேண்டும் என்ற நெறி முறைகளை அவர்களின் வாழ்க்கையிலிருந்தே கற்க வேண்டும். அவைகளைக் கண்டு பிடிக்க வேண்டும். இதுவே உண்மையான வழிபாடும் ஆராதனையுமாகும்.

வெளிப்படையான வழிபாட்டு முறைகளை பகட்டாகச் செய்வதில் எவ்வித பயனுமில்லை. இதனால் அவர்களுடைய வீழ்ச்சியை (அவர்களே) தேடிக் கொள்கின்றனர்.

(த.ச.சா.மார்ச்1990-ப.13)

* தீவிரமாக ஆலோசித்துப் பார்க்கும் போது நீயே கடவுள் என்பதைப் புரிந்து கொள்வாய்.
* நீங்கள் இறைவனுள் இருக்கிறீர்கள்.
* இறைவன் உங்களுக்குள் இருக்கிறார். இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.
* நீங்கள் தெய்வீகத்தின் ஒரு (சிறு) பொறி என்பதை உறுதியாகச் சொல்லும் திடமான எண்ணம் உங்களுக்கு வரவேண்டும்.

(த.ச.சா-மார்ச் 2000-ப.15)

## 21. அவதாரம் நேரிடையாகச் சொல்லாமே.

1. அவதாரங்கள் அபூர்வமாகத்தான் நேரிடையாக அறிவுறுத்தல்கள் தருகின்றன. அவர்கள் சொல்லுவதற்கு விரும்புவதை மறைமுகமாகத்தான் தருவார்கள். இதற்கு என்ன காரணம் என்றால் ஒவ்வொரு மனிதனிலும் தெய்வீகம் உள்ளுறைகிறது. அந்த தெய்வீகத்தை அவன் உணருவதன் மூலம் தான் அவன் தன்னைத் திருத்திக் கொள்வதற்கு ஏதுவாகும். இந்த திருத்தங்கள் நேரடியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் மனிதன் ஒரு பொழுதும் தன் உள்ளுறையும் தெய்வீகத்தை உணரமாட்டான். மனிதன் உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்ந்துகொள்வதற்குத்தான் மறைமுகமான முறைகள் கொடுக்கப்படுகின்றன.

(ஆ.ச.சா ஆகஸ்ட் 90 ப 207
Ignorance to Bliss - last page Sri S. Gnnanasegaram)

2. ஒரு ஜீவன் தானாக நல்வழிப்பட எத்தனை ஊக்க உத்சாகங்களுண்டோ அவ்வளவுந்தந்து, அவன் நல்வழியில் செல்ல உடன் துணையாய் நடந்து அவனைத் தடுக்கி விழும் போதெல்லாம் தூக்கி விட்டு இலட்சியத்தில் சேர்க்க மட்டுமே மகாபுருஷர்கள் முயல்வார்கள். சூ மந்திரக்காளி போட்டு மனதை மாற்றி விடமாட்டார்கள்

தாய் பார்த்துப் பார்த்து பாலூட்டினாலும் குழந்தையே தான் அதை விழுங்க விடுவாளே அன்றி தன்னுடைய நாவை அதன் வாயில் செருகுவதில்லையே. அப்படி ஈஸ்வர சிருஷ்டியில் மனிதவர்க்கம் என்று உச்சியில் இருப்பதற்கு இப்படி சுயேச்சையாகத் திருந்த ஊக்கமளிக்கும் பெஸ்ஸ"வேசன் (Persuation ஊக்குவிப்பு) தான் கௌரவம் தருவதாகும், நிர்ப்பந்த வசியமல்ல.

(ரா கணபதி.தீராத விளையாட்டுப் பிள்ளை-ப 92)

ஓம் ஸ்ரீசாயிராம்

# நிறைவுரை

* நாங்கள் சாயி பக்தர்கள்!

* சாயி பக்தர்கள் மட்டும்தானா?

* இன்னும் எதனெதனுடைய பக்தர்கள்?

* சாயி பக்தன் என்ற பூரணமான பிரதிபலிப்பை எங்களில் நாங்களே கண்டு, உணர்ந்து அனுபவிக்க முடியாததற்கு, முற்று முழுதான சாயி பக்தர்களாக நாங்கள் ஆகிக் கொள்ளாததும் ஒரு காரணம்.(இதை ஏற்றுக் கொள்வோமா?)
எம்மில் பலர் எத்தனையோ படங்களை வைத்து வழிபாடு செய்பவர்கள்.

சாயி பாபாவையும் பத்தோடு பதினொன்று. அத்தோடு இதுவும் ஒன்று என்று பெரிய மனது பண்ணிச் சேர்த்துக் கொண்டவர்கள். இந்த வார்த்தைகளை ஒரு சுய கணிப்பீடு என்று எடுத்துக் கொண்டோமானால் இதில் தவறு காண மாட்டோம். எப்பொழுதும் என்ற, அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாய் அறிவோடு பிரகாசித்திருக்க வேண்டிய தெய்வ தத்துவம் அது, அது மட்டிலும் என்று அடங்கி விட்டது.

கடவுளை படமாக்காமல் படத்தை கடவுளாக்கியிருந்தால், படம் என்ற ஒரு குறியீடு எல்லையில்லாத ஒரு ஆனந்த தெய்வீகத்திற்கு எம்மை வழிகாட்டியிருக்கும்.

இறைவனின் அழகைக் காண நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே என்றும் காணக்கண் கோடி வேண்டும், என்றும் அருளாளர்கள் பாடியிருந்தாலும் தெய்வீகத் திருவுருவத்தின் முன் போய் நின்று என்ன செய்கின்றோம். குறைந்தது இருக்கின்ற இரண்டு கண்களாலாவது இமைவெட்டாமல் அந்தப் பேரழகை காணகின்றோமா? பகவானே சொல்கிறார்

* "நீங்கள் ஒரு கோவிலுக்குச் செல்கிறீர்கள் இறைவனைத் தரிசனம் செய்வதற்கென்று போகிறீர்கள். ஆனால் அங்கே தெய்வீகத் திருவடிவத்தின் முன் நின்று கண்களை மூடிக் கொள்கிறீர்கள்.

* கண்களை மூடிக்கொள்ள வேண்டுமாயின் தேவாலயத்திற்குச் செல்வதற்கான அவசியம் ஏன் வந்தது?

* கடவுளைக் காண வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் கோயிலுக் குச் செல்கிறீர்கள். ஆனால் அங்கே சென்றதும் கண்களை மூடிக் கொள்வதன் உள்ளர்த்தம் என்ன?

* ஏனெனில் கடவுளை வெறும் ஊனக் கண்ணால் காண முடியாது. ஞானக் கண்ணால்தான் தரிசிக்க முடியும்.

* ஊனக் கண்ணை மூடினால் தான் ஞானக் கண் திறக்கும். ஆகவே தான் பஜன் நேரத்திலும், தியானத்தின் போதும் கண்களை மூடிக் கொள்கிறீர்கள்."

(த.ச.சா-ஜனவரி.2001-ப.21)

இப்பொழுது உலக சத்ய சாயி அமைப்புக்களின் தலைவர் ஸ்ரீ இந்துலால் ஷா சொல்வதைப் பார்ப்போம்.

நாங்கள் சத்ய சாயி பக்தர்களாயிருப்பதனால் எங்கள் உள்ளுறை மூலாதாரத்திற்கு ஒரு பெயரும் உருவமும் சத்ய சாயி என்று கொடுக்கலாம். நாங்கள் சாயியில் அன்பு செலுத்தி அந்த அன்பு பூரணமாகும் போது விழிப்பு நிலையில் எங்கள் மனத்தை இந்த உண்மையை நோக்கிச் செலுத்தப் பார்க்கின்றோம். எங்கள் கடவுளான சாயி தன் மகிழ்ச்சியூட்டும் உருவத்தில் தோன்றும் பொழுது மிகவும் பிரியமானதாகவும் தோற்றம் மறுக்கப்பட்ட போது அருமையானதாகவும் இருக்கின்றது. எனவே எங்களின் உள்ளே தான் தேட வேண்டும். வெளியே அல்ல என்ற தெளிவான தீர்மானத்திற்கு வருகின்றோம். எங்களுடைய கடவுளான சாயியின் மனித உருவம் எங்கும் நிறைந்த தெய்வீகத்திற்கு எம்மை அழைத்துச் செல்கின்றது. (சென்றிருக்க வேண்டும்?) இந்த நிலையில் ஆத்மீக வழிபாடு ஆனந்தமும் சாந்தமும் நிறைந்ததாக இருக்கும் (இருந்திருக்க வேண்டும்.)

மேலும் அவர் சொல்கிறார்

* நாம் சத்ய சாயி நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்ற சத்ய

சாயியுடன் கூடி சத்ய சாயியின் திவ்ய அவதாரத்தின் மூலம் தெய்வீகத்தின் ஒரு சிறு திவலையையாவது அனுபவிக்க உறுதி யான எண்ணங்களுடன் கூடிய புதிய சிந்தனைகளை எம் ஒவ் வொருவரிடமும் மலரச் செய்ய வேண்டும்.

* எப்படி அதைச் செய்யலாம்?
* நாங்கள் பிரயாணப்பட ஆரம்பிக்க வேண்டும்.

***இது தான் அந்தப் பயணம்***

* அசத்தோமா (பொய்மையிருந்து) — பயணம் → சத்கமய (மெய்மைக்கும்)
* தமஸோமா (இருளிலிருந்து, அறியாமையிலிருந்து) → ஜஜோதிகமய (ஒளிக்கும் பேரறிவிற்கும்)
* ம்ருத்யோமா (அழியக்கூடிய நிலையிலிருந்து) → அம்ருதம்கமய (அழியாமைக்கும்)
* இரண்டு கால் விலங்கு — அழைத்துச் செல்வாயாக மனிதன் → தெய்வீகம்

I am not a DOG

அப்படியாயின்

* பூரணம் வந்திருக்கின்றது. அந்தப்பூரணம் சொல்கிறது இதுவும் (ஒவ்வொரு நானும்) பூரணம் என்று.
* பூரணமாகும் வழியினை வாழ்ந்து காட்டுகிறது.
* "எனது வாழ்க்கையே எனது செய்தி"
* அந்த செய்தியை சரியாகக் கிரகித்திருந்தால் அறிந்திருந்தால், அறிந்த மட்டிலாவது எமது வாழ்க்கை அவதாரத்தின் செய்தி ஆகியிருக்கும்.




* தியோ யோ ந பிரசோதயாத்

* எமது புத்தியை துலங்க வைப்பாயாக

* எமது புத்தியை கூர்மையடையச் செய்வாயாக

* கூர்ந்த மெய்ஞானத்தைக் கொண்டுணர்வார் தம் கருத்தின்

* நோக்கரிய நோக்கே நுணக்கரிய நுணக்கரிய நுண்ணுணர்வே
மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்து
அறிவாம் தேற்றனே
தேற்றத் தெளிவே
என் சிந்தனையுள் ஊற்றான
உண்ணா ரமுதே உடையானே -சிவபுராணம்


* நீங்கள் இறைவனுள் இருக்கிறீர்கள்.

* இறைவன் உங்களுக்குள் இருக்கிறான்.

* இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.

* நீங்கள் தெய்வீகத்தின் ஒரு சிறு பொறி என்பதை உறுதியாகச் சொல்லும் திடமான எண்ணம் உங்களுக்கு வரவேண்டும்".

த.ச.சா.மார்ச் 2000 -ப.15



தெய்வீகத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் மட்டுமே எனக்குப்பிரிய மானவர்கள். நான் அவர்களின் நண்பன். நீங்கள் சுவாமியின் அன்புள்ள நண்பர்களாக வேண்டுமானால் நீங்கள் தெய்வீகமான முறையில் நடந்து கொள்ளுங்கள். அப்படியான நிலமையில் நீங்கள் இங்கே வரவேண்டியதில்லை. நீங்கள் எங்கேயிருந்தாலும் அங்கே உங்களைத்தேடி நான் வருவேன்

ஆ.ச.சா. ஏப்ரல் 2000 –ப.106

Mathy Graphics 024-21437